

# "I WILL COME AGAIN"

JOHN 14:3

# நான் மறுபடியும் வருவேன்

யோவான் 14 : 3

# நான் மறுபடியும் வருவேன்

நான் போய் உங்களுக்காக ஸ்தலத்தை ஆயத்தம்பண்ணின
பின்பு, நான் இருக்கிற இடத்திலே நீங்களும் இருக்கும்படி,
நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில்
சேர்த்துக்கொள்ளுவேன்.
யோவான் 13:1

# I WILL COME AGAIN

**English version :**
***New Brunswick Ecclesia***

**Translated and Published by :**
***Bible students Vellore***

# முன்னுரை

“நான் மறுபடியும் வருவேன்” என்ற தலைப்பைக் கொண்ட இந்த புத்தகமானது, வேதாகமத்தில் மிகவும் தவறாகப் புரிந்துகொள்ளப்பட்டும் தவறாக போதிக்கப் பட்டும் வருகிற மிக முக்கியமான உபதேசங்களில் ஒன்றான, கிறிஸ்துவின் இரண்டாம் பிரசன்னத்தை தைரியமாகவும் ஆணித்தரமாகவும் முன்வைக்கிறது.

கிறிஸ்துவின் இரண்டாம் பிரசன்னம் என்பது, அவர் எதிர்காலத்தில் காணக்கூடிய மகிமையுடன் வானத்திலிருந்து இறங்கி வருகிற ஒரு நிகழ்வாகும் என்ற பொதுவான மற்றும் மிகவும் பிரபலமான விசுவாசத்திற்கு மாறாக, கிறிஸ்துவின் இரண்டாம் பிரசன்னமானது வேதத்தில் முன்னறிவிக்கப்பட்டபடி, ஏற்கனவே ஆரம்பித்துவிட்டது என்பதையும் அது ஒரு கண்ணுக்கு தெரியாத பிரசன்னம் என்பதையும் இப்புத்தகமானது நிரூபிக்கின்றது.

இந்த புத்தகமானது யோவான் 14:3 – ஆம் வசனத்தில், “நான் மறுபடியும் வருவேன்”என்று நம்முடைய கர்த்தர் சொன்ன வார்த்தைகளுடன் துவங்குகின்றது. ஆனால் இயேசு உண்மையில் எதை அர்த்தப்படுத்தினார்? அசைக்க முடியாத வேத வசனங்களின் ஆதாரங்களுடன் தீர்க்கதரிசனம், மொழி மற்றும் உலக நிகழ்வுகள் வழியாக, இப்புத்தகமானது நம்மை ஒரு பயணத்திற்கு அழைத்துச் செல்கிறது. இவை அனைத்தும் நாம் மனுஷகுமாரனின் நாட்களில், அவருடைய காணக்கூடாத, திருடனைப் போன்ற பிரசன்னத்தின் காலத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம் என்பதை உறுதிப்படுத்துகின்றன.

நியூ பிரன்ஸ்விக் (**NEW BRUNSWICK**) வேத மாணவ சபையினரால் வெளிவந்த இந்த பணியானது வெறும் ஒரு இறையியல் ஆய்வுக் கட்டுரை அல்ல, மாறாக எப்போதும் விழித்திருக்கவும், எல்லாவற்றையும் பகுத்தறியவும் ஒரு ஆவிக்குரிய விழிப்புணர்வை அடைவதற்கான அழைப்பு விடுக்கிறது. வேதம் சொல்லுகிறபடி, “எஜமான் வரும்போது, விழித்திருக்கிறவர்களாகக் காணப்படுகிற ஊழியக்காரரே பாக்கியவான்கள். அவர் அரை கட்டிக்கொண்டு,... அவர்களுக்கு ஊழியஞ் செய்வார்.” (லூக்கா 12:37). நமது திரும்ப வந்துவிட்ட நம்முடைய கர்த்தர், தம்முடைய உண்மையுள்ளவர்களுடன் பகிர்ந்தளிக்கின்ற ஆவிக்குரிய சத்தியம் நிறைந்த ஒரு பலமான விருந்தாக இந்தப் புத்தகம் இருக்கட்டும்.

இப்படிப்பட்ட தெளிவான சத்தியத்தைப் பெற்ற நாம், எப்போதும் விழிப்புள்ளவர் களாகவும், உண்மையும் உத்தமுமான ஊழியக்காரர்களாகவும் நமது எஜமான் முன்பாக நிற்க தேவன் தாமே கிருபை செய்வாராக!

வெளியீட்டாளர்.

**வேலூர் வேதமாணவர்கள்**

# பொருளடக்கம்

நான் மறுபடியும் வருவேன் ........................................... 1
கிறிஸ்துவினுடைய பிரசன்னத்தின் அடையாளங்கள்............. 9
ஏன் சில கிறிஸ்தவர்கள் அறியாமல் இருக்கிறார்கள்? ......... 24
“அவரோடே கூட எடுத்துக்கொள்ளப்படுதல்” ..................... 28
“கண்கள் யாவும் அவரைக் காணும்” ................................ 37
பாவ மனுஷன் ........................................................... 44
பின்னிணைப்பு – A ....................................................... 53
பின்னிணைப்பு – B ....................................................... 55
பின்னிணைப்பு – C ....................................................... 58

## அத்தியாயம் 1

# நான் மறுபடியும் வருவேன்

யோவான்:14:3 "நான் போய் உங்களுக்காக ஸ்தலத்தை ஆயத்தம்பண்ணினபின்பு, நான் இருக்கிற இடத்திலே நீங்களும் இருக்கும்படி, நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக்கொள்ளுவேன்".

இயேசு தம்முடைய அப்போஸ்தலர்களுக்கு யுகங்களுக்கான இந்த வாக்குத்தத்தத்தை முதன்முதலில் கூறியபோது, அவர்களால் அதை உணர்ந்துகொள்ள முடியவில்லை. இயேசுவைப் பின்பற்றிய இயற்கையான மனப்பான்மையைக் கொண்ட மனிதர்களான இவர்கள், இயேசு ஒரு இராஜாவாகப் பொறுப்பேற்று, ரோம அடிமைத்தனத்தின் நுகத்தை ஒழித்துவிட்டு, யூதர்களை உயர்த்தி உலகத்தை ஆசீர்வதிப்பதே அவர் எடுக்கக்கூடிய நியாயமான நடவடிக்கையாக இருக்கும் என்று நினைத்தார்கள். இங்கே செய்ய வேண்டிய வேலை அவருக்கு அநேகம் இருக்கும்போது அவர் ஏன் இப்போது செல்ல வேண்டும்? இயேசு தம்முடைய மரணத்தைக் குறித்தும், விநோதமான முறையில் தாம் புறப்பட்டு செல்வதைக் குறித்தும் பேசியபோது, அந்தக் கருத்தானது அவர்களின் எதிர்பார்ப்புகளுக்கு முற்றிலும் மாறுபட்டதாக இருந்தது.

ஆனால் கெத்செமனே தோட்டத்திற்குச் செல்லும் வழியில் "நான் போய் உங்களுக்காக ஸ்தலத்தை ஆயத்தம்பண்ணினபின்பு, நான் மறுபடியும் வருவேன்" என்று இயேசு அவர்களுக்கு உறுதியளித்தார். திகைத்துப்போயிருந்த அவரின் சிறிய குழுவிற்கு, இந்த வார்த்தைகள் சிறிதளவு நம்பிக்கையை ஏற்படுத்தியது. ஆனால் நாற்பது நாட்களுக்குப் பிற்பாடு, ஒலிவ மலையில் ஆச்சரியத்தினால் ஒன்றுகூடி, தங்கள் கண்களை வானத்துக்கு நேராக ஏறெடுத்து, தங்கள் ஆண்டவர் பரமேறுவதைக் கடைசி முறையாகப் பார்க்க முயன்றபோது "நான் மறுபடியும் வருவேன்" என்ற வாக்குத்தத்தமானது உயிர்பெற்றது. ஆம், அவர்களின் அன்பான எஜமான் மீண்டும் வருவார். அந்த மகிமையுள்ள மையக்கருத்தை, அப்போஸ்தலர்கள் தங்கள் ஊழியத்திலும் தங்கள் வாழ்க்கையின் ஒவ்வொரு பகுதியிலும் பின்னிப்பிணைத்தனர்.

புதிய ஏற்பாட்டில் வேறு எந்த உபதேசமும் இதைக்காட்டிலும் அதிகமாக விவாதிக்கப்படவில்லை. புதிய ஏற்பாட்டின் எழுத்துக்களில், மூன்றில் ஒரு பங்கிற்கு மேல், இந்த முக்கியமான நிகழ்வைப் பற்றியே எடுத்துரைக்கின்றது. திரும்பி வந்துள்ள ஆண்டவராகிய நம்முடைய பரலோக மணவாளனுடன் ஒன்றாக இணையப்போகும் நம்பிக்கையிலும், அவர் இருக்கிற வண்ணமாகவே அவரைக் காண்பதிலும், அவரோடு வாழ்வதிலும், அவருடைய அன்பை என்றென்றைக்கும் அனுபவிப்பதிலும், "சமாதானத்தை ஒரு நதியைப்போலவும், ஜாதிகளின் மகிமையைப் புரண்டு ஓடுகிற ஆற்றைப்போலவும்" (ஏசாயா 66:12) நிறுவப்போகின்ற பூமியின் கடைசிபரியந்தமும் பரந்துவிரிந்திருக்கின்ற அவரின் இராஜ்யத்தில், அவரோடு சேர்ந்து ஆளுகை செய்யப்போகும் உண்மையையும் (வெளிப்படுத்தல்:20:6) நினைக்கும் போது நம் இருதயங்கள் மகிழ்ச்சியில் எவ்வளவாய்த் துள்ளுகின்றன!

"ஆமென், கர்த்தராகிய இயேசுவே, வாரும்" என்று விசுவாசமுள்ள கிறிஸ்தவர்கள் அப்போஸ்தலனாகிய யோவானுடன் சேர்ந்து, நீண்ட காலமாக ஜெபித்து வந்தனர். பல நூற்றாண்டுகள்

கடந்துவிட்டபோதிலும், வெளிப்படையாக எதுவும் நடக்கவில்லை. ஆனால் திடீரென்று நம்முடைய நாட்கள் எதிர்பார்ப்பு என்னும் காற்றினால் நிரம்பியுள்ளன.

மனித வரலாற்றில் முன் ஒருபோதும் இல்லாதக் காலப்பகுதியில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோமா? என்று சிலர் கேள்வி எழுப்புவார்கள். கிறிஸ்து திரும்பி வருவார் என்று வேதாகமம் கூறும் காலத்திலேயே நாம் வாழ்ந்துகொண்டிருக்கிறோம் என்று வேதாகமத்தை விசுவாசிக்கிற பெரும்பாலான கிறிஸ்தவர்கள், உணர்கிறார்கள். அவர்களுக்கு தீர்க்கதரிசனத்தின் மீதான ஆர்வம் அதிகரித்துள்ளது, அதே சமயம் இரண்டாம் வருகையின் மீதான ஆர்வமும் புதுப்பிக்கப்பட்டுள்ளது. கிறிஸ்துவின் விரைவான வருகையைப் பற்றி பலர் பேசுகிறார்கள். இந்த எதிர்பார்ப்பானது, மத்தேயு 24, மாற்கு 13, லூக்கா 17 மற்றும் 21 ஆகிய அதிகாரங்களில் பதிவு செய்யப்பட்டுள்ள நமது கர்த்தருடைய மாபெரும் தீர்க்கதரிசனத்தின் அடிப்படையில் உள்ளது.

கிறிஸ்துவினுடைய திரும்பி வருதல் நெருங்கிவிட்டது என்பதை பின்வரும் அடையாளங்கள் சுட்டிக்காட்டுகின்றன என்று பலர் நம்புகிறார்கள்:

- ✓ இஸ்ரயேல் மீட்கப்பட்டது (மத்தேயு 24:32, எரேமியா 16:13-18);
- ✓ அறிவு மற்றும் போக்குவரத்து வசதிகள் அதிகரித்துள்ளன (தானியேல் 12:4);
- ✓ இதற்கு முன் ஒருபோதும் இல்லாத அளவிற்கு தீமைகள் வெளிப்படுத்தப்படுகின்றன (லூக்கா 12:2, 1 கொரிந்தியர் 4:5);
- ✓ விசுவாச துரோகமானது பல்கலைக்கழகம் முதல் பிரசங்க மேடை வரை தீவிரமாக உள்ளது (லூக்கா 18:8 , 2தீமோத்தேயு 4:1-4);
- ✓ மனிதர்கள் இன்பத்தை நாடுகிறார்கள், ஒழுக்கம் சீர்குலைந்தது (2தீமோத்தேயு 3:1-5, 13);
- ✓ வேலைநிறுத்தங்கள், பணிமுடக்கங்கள் (யாக்கோபு 5:1-4), இனப் போராட்டங்கள், வன்முறைகள் (செப்பனியா 1:7-9), இளம் வயதினரின் பாவங்கள் (2தீமோத்தேயு 3:2) போன்ற அனைத்தும் அதிகரித்துவிட்டன;
- ✓ போர்களும் போருக்கான ஆயத்தங்களும் தீவிரமடைந்துவிட்டன (யோயேல் 3:9-11);
- ✓ மனிதர்கள் சமாதானத்திற்காக பயத்துடன் அழுகிறார்கள் (1தெசலோனிக்கேயர் 5:3, லூக்கா 21:26);
- ✓ எல்லா இடங்களிலும் உபத்திரவம் பெருகிவிட்டது (மத்தேயு 24:21,22).

ஆனால் நம் எஜமானரின் வார்த்தைகளை இன்னும் கூர்ந்து கவனித்து, இந்த அடையாளங்கள் உண்மையில் எதை நிரூபிக்கின்றன என்பதைக் காண்போம்.

> "பின்பு, அவர் ஒலிவமலையின்மேல் உட்கார்ந்திருக்கையில், சீஷர்கள் அவரிடத்தில் தனித்துவந்து: இவைகள் எப்பொழுது சம்பவிக்கும்? உம்முடைய வருகைக்கும், [கிரேக்கத்தில் **பரோசியா (Parousia)**] உலகத்தின் முடிவுக்கும் அடையாளம் என்ன? எங்களுக்குச் சொல்லவேண்டும் என்றார்கள்" மத்தேயு 24:3.

## வருகை அல்லது பிரசன்னம்

"**பரோசியா**" **(Parousia)** என்ற கிரேக்க வார்த்தையானது, "வருகை" என்று மொழிபெயர்க்கப் பட்டுள்ளது. இதன் உண்மையான பொருள் "பிரசன்னமாகுதல்"(Presence) என்பதாகும். **பரோசியா (Parousia)** என்பதற்கு பிரசன்னமாகுதல் (Presence) என்று அர்த்தம் கொண்டால், இந்தத் தீர்க்கதரிசனத்தின் அடையாளங்களின் நிறைவேறுதலின்படி, கிறிஸ்து விரைவில் வரப்போவதில்லை, ஆனால் "இரவிலே திருடன் வருகிற விதமாய்" இரகசியமாக அவர் ஏற்கெனவே வந்துவிட்டார் என்று அர்த்தமாகும். "கண்கள் யாவும் அவரைக் காணும்" முன்பாக, கிறிஸ்துவினுடைய வருகையின் ஆரம்பமானது ஒரு திருடனைப் போல இரகசியமான பிரசன்னமாக (Presence) இருக்கும் என்று வேதவசனங்கள் சுட்டிக்காட்டுகின்றன என்பதை நினைவில் கொள்ளவேண்டும் (1தெசலோனிக்கேயர் 5:2 2பேதுரு 3:10 வெளிப்படுத்தல் 16:15). பின்வரும் அகராதிகள் (அடிப்படை மற்றும் சுவிசேஷ புத்தகக் கடைகளில் உள்ள பொதுவான நூல்கள்) பிரசன்னமாகுதலின் (Presence) இந்த விளக்கத்தை உறுதிப்படுத்துகின்றன.

"W.E. வைன் (W.E.Vine) அவர்களுடைய புதிய ஏற்பாட்டு வார்த்தைகளின் விளக்க அகராதி: "**பரோசியா**" (Parousia) என்ற சொல் நேரடியான பொருளில், "**பிரசன்னம்**" (Presence) என்பதைக் குறிக்கின்றது. இது, "**Para**" (உடன்) மற்றும் "**ousia**" (இருத்தல்) ஆகிய கிரேக்க வார்த்தைகளின் சேர்க்கையாகும். இது, ஒருவரின் வருகையையும், அதன் விளைவாக அந்த நபரின் உடனிருத்தலையும் குறிக்கிறது.

ராபர்ட் யங் (Robert Young) அவர்களுடைய வேதாகமத்தின் சொல் ஒப்பீட்டாராய்ச்சி: **பரோசியா (Parousia)** என்பதற்கு அருகாமையில் இருப்பது, அதாவது பிரசன்னமாகுதல் (Presence) என்று பொருள்படும்.

மௌல்டன் மற்றும் மில்லிகன் (Moulton and Milligan) அவர்களின் கிரேக்க ஏற்பாட்டினுடைய சொல்லகராதியின் முன்னுரை: "கர்த்தரின் திரும்பிவருதலைக் குறிக்கிறதற்குப் பயன்படுத்தப்படும் "**பரோசியா**" **(Parousia)** என்ற சொல்லானது, "பிரசன்னமாகுதல்" (Presence) என்று நேரடியாகப் பொருள்படுகின்ற கிரேக்க வார்த்தையின் ஆங்கில வடிவமே ஆகும்."

## வேதாகம விளக்கம்

இருப்பினும், நாம் அகராதி விளக்கங்களுக்கு மட்டும் கட்டுப்பட்டவர்கள் அல்ல. கர்த்தர் **பரோசியா (Parousia)** என்ற கிரேக்க வார்த்தைக்கு வேதப்பூர்வமான விளக்கத்தை வழங்கியுள்ளார். **பரோசியா (Parousia)** என்ற வார்த்தை, மத்தேயு 24:37 - இல் வருகை என்று தவறாக மொழிபெயர்க்கப் பட்டுள்ளது. லூக்கா 17:26-இல் உள்ள இணையான மேற்கோளை ஒப்பிட்டு, **பரோசியா (Parousia)** என்ற வார்த்தைக்கான விளக்கத்தை பின்வரும் அட்டவணைக் கொடுக்கின்றது.

| மத்தேயு 24:37 | லூக்கா 17:26 |
|---|---|
| ➢ *நோவாவின் காலத்தில் எப்படி நடந்ததோ* | ➢ *நோவாவின் நாட்களில் நடந்ததுபோல* |

| | |
|---|---|
| ➢ *அப்படியே மனுஷகுமாரனுடைய பிரசன்னமும்(Presence) இருக்கும்* | ➢ *மனுஷகுமாரனுடைய நாட்களிலும் நடக்கும்* |

லூக்கா 17:26 - இல் உள்ள "மனுஷகுமாரனுடைய நாட்களில்" என்ற வாக்கியத்திற்கு மத்தேயு 24:37 - இல் உள்ள "மனுஷகுமாரனுடைய பிரசன்னம்" (Presence) என்ற வாக்கியமானது இணையான பொருளைக் கொண்டது. "நோவாவின் நாட்கள்" என்பது நோவா தனது துன்மார்க்கமான தலைமுறையினரின் மத்தியில் பிரசன்னமாகியிருந்தக் (Presence) காலத்தைக் குறிப்பதுபோல, "மனுஷகுமாரனுடைய நாட்கள்" (லூக்கா 17 : 26 ) என்பது கிறிஸ்து பிரசன்னமாகியிருக்கின்ற (Presence) காலத்தைக் குறிக்கிறது. எனவே மத்தேயு 24:37 - இல் உள்ள **பரோசியா** (**Parousia**) "மனுஷகுமாரன் வரும் காலத்தில்" என்பதற்குப் பதிலாக "மனுஷகுமாரனுடைய பிரசன்னம்" (Presence) என்றே மொழிபெயர்க்கப்பட வேண்டும்.

அப்போஸ்தலனாகிய பவுலின் இந்த வார்த்தையின் பயன்பாடானது, இதனை மேலும் உறுதிப்படுத்துகின்றது. "பிரசன்னம்" (Presence) என்ற வார்த்தையானது, பிலிப்பியர் 2:12 - இல் உள்ள "தூரமாயிருக்கிற" (Absence) என்ற எதிர் சொல்லைக்கொண்டு தெளிவாக வேறுபடுத்திக் காண்பிக்கப்பட்டுள்ளது. "ஆதலால், எனக்குப் பிரியமானவர்களே, நீங்கள் எப்பொழுதும் கீழ்ப்படிகிறபடியே, நான் உங்களுக்குச் சமீபமாயிருக்கும்பொழுது (Presence) [கிரேக்கம் - **பரோசியா** (**Parousia**)] மாத்திரமல்ல, நான் தூரமாயிருக்கிற இப்பொழுதும், அதிக பயத்தோடும் நடுக்கத்தோடும் உங்கள் இரட்சிப்பு நிறைவேறப் பிரயாசப்படுங்கள்". இது 2 கொரிந்தியர் 10:11-ஆம் வசனத்திலும் காட்டப்பட்டுள்ளது. **பரோசியா** (Parousia) என்ற வார்த்தை பயன்படுத்தப்பட்டுள்ள ஒவ்வொரு புதிய ஏற்பாட்டு வேதவாக்கியமும் பின்னிணைப்பு A (Appendix -A) – இல் பட்டியலிடப்பட்டுள்ளது.

## சுவிசேஷகர்களும் அடிப்படை கோட்பாட்டாளர்களும் "பிரசன்னமாகுதலை" ஒப்புக்கொள்கிறார்கள்

ரோதர்ஹாம் (Rotherham) என்பவரால் மொழிபெயர்க்கப்பட்ட கவனிக்கத்தக்க வேதாகமமானது கிரெகல் (Kregel) என்ற சுவிசேஷ வெளியீட்டு நிறுவனத்தால் வெளியிடப்பட்டது. ரோதர்ஹாம் (Rotherham) தனது மொழிபெயர்ப்பில் மூன்றாவது பதிப்பில் **பரோசியா** (**Parousia**) என்ற வார்த்தையுடன் தனக்கு ஏற்பட்ட போராட்டத்தை விவரிக்கிறார். தனது இறையியல் கோட்பாட்டிற்கு முரணானதாக இருந்தாலும் **பரோசியா** (**Parousia**) என்பதற்கு பிரசன்னம் (Presence) என்று அவர் ஒப்புக்கொண்டார். எனவே ஒவ்வொரு இடத்திலும் **பரோசியா** (**Parousia**) என்கிற வார்த்தையை பிரசன்னம் (Presence) என்று மொழிபெயர்த்தார். ரோதர்ஹாம் மொழிபெயர்ப்பிலுள்ள பின்னிணைப்பில் 271 - ஆம் பக்கத்தில் அவர் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்:

> இந்தப் பதிப்பில், "**பரோசியா**" (**Parousia**) என்ற வார்த்தையானது மாறாமல் எல்லா இடங்களிலும் "பிரசன்னம்" (Presence) என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. (இந்த வார்த்தையைப் பிரதிபலிக்கின்ற சொல்லாக "வருகை" என்ற சொல் பயன்படுத்தப்படவில்லை).

மூல வார்த்தையானது புதிய ஏற்பாட்டில் இருபத்து நான்கு முறை வருகிறது. மத்தேயு 24:3, 27, 37, 39; 1 கொரிந்தியர் 15:23; 16:17; 2 கொரிந்தியர் 7:6, 7; 10:11; பிலிப்பியர் 1:25; 2:12; 1 தெசலோனிக்கேயர் 2:19; 3:13; 4:15; 5:23; 2 தெசலோனிக்கேயர் 2:1, 8, 9; யாக்கோபு 5:7,8; 2பேதுரு 1:16; 3:4, 12 மற்றும் 1யோவான் 2:28. "பிரசன்னம்" (Presence) என்பதின் அர்த்தம் "தூரமாயிருத்தல்" (Absence) என்ற எதிர்ச்சொல்லுடன் (2 கொரிந்தியர் 10:11-இல் மறைமுகமாகவும், பிலிப்பியர் 2:12 -இல் வெளிப்படையாகவும்) ஒப்பிடுவதன் மூலம் தெளிவாகக் காட்டப்படுவதால், ஏன் எப்போதும் அவ்வாறு மொழிபெயர்க்கக் கூடாது என்ற கேள்வி இயல்பாகவே எழுகிறது. குறிப்பாக 2பேதுரு1:16 -ஆம் வசனத்திலும் "Presence" என்கிற நம்முடைய ஆங்கில வார்த்தையில் ஒரு தனித்தன்மையான பொருத்தம் காணப்படுவதால் அது மிகவும் ஏற்றதாக உள்ளது. இந்தப் பகுதி, மலையில் நிகழ்ந்த நம் ஆண்டவரின் மறுரூபக்காட்சியைப் பற்றினது என்பது நினைவில் இருக்கும். அங்கு வெளிப்படுத்தப்பட்ட அற்புதமான காட்சியானது "வருகை" என்பதைவிட "பிரசன்னம்" (Presence) என்பதின் வெளிப்பாடும் மாதிரியுமாக இருந்தது. ஆண்டவர் ஏற்கெனவே அங்கே இருந்தார், அங்கே இருந்ததால் அவர் மறுரூபமானார் (மத்தேயு 17:2), மேலும் அவருடைய மகிமைப்படுத்தப்பட்ட சரீரத்தின் "மகத்துவமானது" அப்போது வெளிப்படுத்தப்பட்டது. அவருடைய சரீரப் பிரகாரமான பிரசன்னம் (Presence) "வல்லமையை" குறிக்கின்றதாகவும் மற்றும் அதை செயல்படுத்தியதாகவும் இருந்தது. எனவே "வல்லமையும் பிரசன்னமும்" மிகச் சிறப்பாக ஒன்றாய் செயல்படுகின்றன - அத்தகைய "பிரசன்னத்திற்கு" ஏற்ற "வல்லமை" இதுவாகும்; மேலும் மூன்று தேர்ந்தெடுக்கப்பட்ட சீஷர்களும் ஒரே நேரத்தில் இவ்விரண்டிற்கும் சாட்சிகளாக இருந்தார்கள்.

ஹாரி ரிம்மர் (Harry Rimmer) (D.D., Sc.D.), என்பவர் அவருடைய மரணம் வரையிலுமே "அடிப்படைவாதத்தின் சிறந்த பேச்சாளர்" என்று அழைக்கப்பட்டவர்; இவர் **பரோசியா** (**Parousia**) என்ற வார்த்தைக்கு தனிப்பட்ட ரீதியிலான பிரசன்னம் (Presence) என்பதே பொருள் என்று ஒப்புக்கொண்டார். "The Coming King" என்ற அவருடைய புத்தகத்தில் கிறிஸ்துவின் திரும்பி வந்திருத்தலைப் பற்றி விவரிக்கும்போது **பரோசியா** (**Parousia**) என்கிற கிரேக்க வார்த்தையானது 13 முறை பயன்படுத்தப்பட்டுள்ளது, ஆனால் ஒரு முறைகூட "வருகை" என்ற கருத்தானது அதில் இடம்பெறவில்லை என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

Christianity Today (பிரபலமான சுவிசேஷ பத்திரிக்கை) "விசுவாசத்தின் அடிப்படைகள்" என்ற தலைப்பில் தொடர் கட்டுரைகளை வெளியிட்டது. "The Second Advent of Christ" என்ற தலைப்பிலுள்ள கட்டுரைத் தொகுப்பில் **பரோசியா** (**Parousia**) என்பதைப் பற்றி இவ்வாறு கூறப்பட்டுள்ளது: ". . . திரும்பி வருதல் என்ற கருத்துக்கு புதிய ஏற்பாட்டில் பயன்படுத்தப்படும் கிரேக்க வார்த்தைகளை நாம் காண்போம். முதலாவதாக **பரோசியா** (**Parousia**) என்ற வார்த்தை உள்ளது, இதன் அடிப்படையான பொருள் 'பிரசன்னம்' (Presence) என்பதாகும்."

கிறிஸ்துவின் இரண்டாம் வருகையைக் காட்டிலும் புதிய ஏற்பாட்டில் வேறு எந்த உபதேசமும் திரும்பத் திரும்பக் குறிப்பிடப்படவில்லை. இருப்பினும், இவ்வளவு மாறுபட்ட கருத்துக்களாக சில உபதேசங்களே பிரிக்கப்பட்டுள்ளன. இந்த உபதேசத்தின் அழகில், பெரும் பகுதியானது தேவனுடைய ஜனங்களின் கைகளிலிருந்து பறிக்கப்பட்டது. அனைத்து மதச்சார்பற்ற கிரேக்க அகராதிகளும் **பரோசியா** (**Parousia**) என்பதற்கு "பிரசன்னம்" (Presence) என்று விளக்கம் அளித்துள்ளது.

பெரும்பாலான வேதாகமம் சார்ந்த அகராதிகளும் **பரோசியா** **(Parousia)** என்பதற்கு "பிரசன்னம்" (Presence) என்றே விளக்கம் அளித்துள்ளது. இரண்டாம் வருகையைப் பற்றிய பெரும்பாலான தற்போதைய அடிப்படைக் கோட்பாட்டாளர்களின் எழுத்துக்களும் மற்றும் சுவிசேஷக எழுத்துக்களும் கூட, பொதுவாக **பரோசியா** **(Parousia)** என்பதற்கு "பிரசன்னம்" (Presence) என்று சரியாக விளக்குவதன் மூலமே தொடங்குகின்றன. பின்னர் ஒரு விநோதமான காரியம் நடக்கிறது. எப்படியோ "வருகை" என்ற சொல் "பிரசன்னத்திற்கு" (Presence) பதிலாக பயன்படுத்தப்படுகிறது. **"பரோசியா"** **(Parousia)** என்ற வார்த்தையை "வருகை" என்று மொழிமாற்றம் செய்ய வேண்டும் என தவறான இறையியல் கோட்பாடானது வலியுறுத்துகிறது, ஆனால் வேத வசனங்களின் இசைவானது அதை "பிரசன்னம்" (Presence) என்றே மொழிமாற்றம் செய்ய வேண்டும் என்று வலியுறுத்துகிறது.

## "சத்திய வசனத்தை நிதானமாய்ப் பகுத்தல்"

வரலாற்று ரீதியாக, இரண்டாம் வருகையைப் பற்றி ஒரே ஒரு புராட்டஸ்டன்ட் உபதேசம் கூட சீர்திருத்த காலப்பகுதியிலிருந்து இன்று வரை, தொடர்ச்சியாக நீடிக்கவில்லை. அந்தக் காலப் பகுதியிலிருந்தே, பரிசுத்த வேதாகமத்தை விசுவாசிக்கும் கிறிஸ்தவர்கள் பல முரண்பாடான உபதேசங்களுக்கு இடையே மாறிக்கொண்டே இருக்கின்றனர்.

மனிதர்களின் அனைத்து கோட்பாடுகளையும் ஒதுக்கி வைத்துவிட்டு, பரிசுத்த வேதாகமத்திலிருந்து மட்டுமே, இந்த முக்கியமான நிகழ்வின் மகிமையான அழகுகளை உறுதிப்படுத்துவதே இந்த வேலையில் நமது நோக்கமாகும். உண்மையுள்ள கிறிஸ்தவன் பின்வரும் வசனத்திற்கேற்ப இருக்க வேண்டும்: "நீ வெட்கப்படாத ஊழியக்காரனாயும் சத்திய வசனத்தை நிதானமாய்ப் பகுத்துப் போதிக்கிறவனாயும் உன்னைத் தேவனுக்கு முன்பாக உத்தமனாக நிறுத்தும்படி ஜாக்கிரதையாயிரு" (2 தீமோத்தேயு 2:15). சத்திய வசனமானது முதலில் எபிரேய மற்றும் கிரேக்க மொழிகளில் எழுதப்பட்டது. ஆனால் இப்பொழுதோ கொடுக்கப்பட்டுள்ள வசனத்தில், ஒரு குறிப்பிட்ட எபிரேய அல்லது கிரேக்க வார்த்தையின் அர்த்தத்தைத் தீர்மானிப்பதற்காக சராசரி கிறிஸ்தவனானவன் மொழிபெயர்ப்பாளர்கள் அல்லது அறிஞர்களை சார்ந்திருக்க வேண்டியதில்லை. உண்மையில், பல புதிய "மொழிபெயர்ப்புகள்" முந்தின மொழிபெயர்ப்புகளின் சுருக்கமான மறுபதிப்புகளாகும்; அதாவது, எபிரேய மற்றும் கிரேக்க மூலப்பிரதிகளுக்கு முக்கியத்துவமானது குறைவாகவோ அல்லது முக்கியத்துவமே கொடுக்காமலோ விடப்படுகின்றன. மேலும், அவை மனிதனின் வேலைகளென்பதால், மிகச்சிறந்த மொழிபெயர்ப்புகளிலும் கூட சில குறைபாடுகள் உள்ளன.

வேதாகம ஒத்தவாக்கிய அகராதிகள், எபிரேய மற்றும் கிரேக்க அகராதிகள் மற்றும் சொற்களஞ்சியங்கள் போன்றவைகள், நூலகங்களிலும் வேதாகம புத்தகக் கடைகளிலும் (Bible Bookstores) எளிதில் கிடைப்பது என்பது நம்முடைய நாட்களின் ஆசீர்வாதங்களில் ஒன்றாகும். ஒரு கையில் வேதாகமத்தையும், மறு கையில் ஒத்தவாக்கிய அகராதி மற்றும் சொற்களஞ்சியத்தையும் வைத்துக்கொண்டு, சராசரி கிறிஸ்தவனானவன் எபிரேய பழைய ஏற்பாட்டு அல்லது கிரேக்க புதிய ஏற்பாட்டு மூலப்பிரதிகளில் உள்ள மூல வார்த்தைகளின் அர்த்தத்தை சரிபார்க்க முடியும். அவன் "வெட்கப்படாத ஊழியக்காரனாயும் சத்திய வசனத்தை நிதானமாய்ப் பகுத்துப் போதிக்கிறவனாயும்" (2 தீமோத்தேயு 2:15) இருக்க முடியும்.

பல நூற்றாண்டுகளாக, சபையானது கிறிஸ்துவினுடைய திரும்பி வருதல் என்கிற ஆசீர்வதிக்கப் பட்ட துறைமுகத்திற்காக ஏங்கி, கரடுமுரடான மற்றும் புயல் நிறைந்த கடலிலிருந்து வருகிறது.

இப்போது, தேவனுடைய வார்த்தையின் வரைபடத்தையும் மற்றும் திசைக்காட்டியையும் கொண்டு, தீர்க்கதரிசனத்தின் பல்வேறு தனித்துவமான நிலைப்பாடுகளைக் கிறிஸ்தவன் கண்டுபிடித்து, தனக்கு முன்பாக இருக்கும் ஆசீர்வதிக்கப்பட்டத் துறைமுகத்தைக் காணலாம். அநேக கடற்கரையோரங்களில் நீரின் மேற்பரப்பிற்குக் கீழே மறைந்துள்ள பாறைகளில் கப்பற்சேதம் ஏற்படும் ஆபத்து இருப்பதால், கிறிஸ்தவன் தனக்குத் தானே சொந்த மாலுமியாக இருந்து, வேத வசனத்திற்கு புறம்பான அல்லது வேத வசனத்தின் சில பகுதிகளை மட்டுமே பயன்படுத்துகின்ற கோட்பாடுகளின் கண்ணிகளிலும்கூட சிக்காமல் இருக்க வேண்டும். "வெட்கப்படாத ஊழியக்காரனாய்" இருக்கும் ஒருவன், பரிசுத்த வேதாகமத்தின் எபிரேய மற்றும் கிரேக்க மூலப்பிரதிகள், எளிதில் கிடைக்கச் செய்யும் கருவிகளை அவனுக்குத் தேவைப்படும்போதெல்லாம் பயன்படுத்துவான்.

இந்த வேலையானது, இந்தத் தலைப்பிலுள்ள வேத வசனங்களையெல்லாம் இன்னும் ஆழமாக ஆராய்வதற்கு வாசகரைத் துாண்டினால், அது விசுவாசிகளின் ஐக்கியத்திற்கு ஒரு பங்களிப்பை வழங்கியிருக்கும்.

## "கண்கள் யாவும் அவரைக் காணும்" முன் ஒரு இரகசிய பிரசன்னம்

"**பரோசியா**" (**Parousia**) என்ற வார்த்தைக்கு வருகை அல்ல, மாறாக பிரசன்னம் (Presence) என்பதுதான் பொருள் என்று நாம் அறிந்துகொண்டப் பிற்பாடு, மத்தேயு 24:3-ஆம் வசனமானது சரியாக இவ்வாறு வாசிக்கப்படுகின்றது: "உம்முடைய பிரசன்னத்திற்கும் (Presence) உலகத்தின் முடிவிற்கும் அடையாளம் என்ன?"

லூக்கா 21:25 - இல் "அடையாளங்கள்" என்று பன்மையில் குறிப்பிடப்பட்டுள்ளன.

நம்முடைய கர்த்தருடைய "**பரோசியா**" (**Parousia**), அதாவது பிரசன்னத்தின் (Presence) முதல் கட்டமானது இரகசியமானதாக இருக்கும் என்று பரிசுத்த வேதாகமம் காண்பிக்கின்றது. "கர்த்தருடைய நாள் திருடனைப் போல் வரும் (அதாவது இருக்கும், கிரேக்கம், ஹெகோ (heko) – see Strong's, Young's or Vine's)", 2பேதுரு 3:10-ஆம் வசனமானது ரோதர்ஹாம் (Rotherham) மொழிபெயர்ப்பில், ஒரு திருடன் ஒரு வீட்டிற்குள் அமைதியாக நுழைந்து, ஒரு இரகசிய வேலையைச் செய்கிறான் என்று கூறப்பட்டுள்ளது. எனவே, திரும்பி வந்துவிட்ட நம்முடைய கர்த்தரின் முதலாம் கட்ட கிரியைகளானது, ஒரு இரகசிய பிரசன்னத்தின்போது (Presence) நடைபெறுகின்றன. கிறிஸ்து திரும்பி வந்துவிட்டார் என்பதை உலகம் முதலில் அறியாது. "சகோதரரே, அந்த நாள் திருடனைப்போல உங்களைப் பிடித்துக்கொள்ளத்தக்கதாக (ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் படிப்படியாக நிகழும் நிகழ்வுகளின் இடைவெளியைக் குறிக்கின்றது), நீங்கள் அந்தகாரத்திலிருக்கிறவர்களல்லவே" 1 தெசலோனிக்கேயர் 5:4. பிற்பாடு, அவருடைய பிரசன்னமானது (Presence) அனைவருக்கும் வெளிப்படுத்தப்படும். அவருடைய பிரசன்னமானது (Presence) அனைவருக்கும் வெளிப்படுத்தப்படும் என்ற இந்த வெளிப்பாட்டை விவரிப்பதற்காக, வேதாகமம் அப்போகாலிப்சிஸ் (Apokalupsis) என்ற மற்றொரு கிரேக்க வார்த்தையைப் பயன்படுத்துகின்றது. ". . . நீதியுள்ள ஆக்கினையைச் செலுத்தும்படிக்கு, கர்த்தராகிய இயேசு. . . . , ஜுவாலித்து எரிகிற அக்கினியோடும், வானத்திலிருந்து வெளிப்படும்போது (Apokalupsis) அப்படியாகும்" 2 தெசலோனிக்கேயர் 1:7-8. இக்காரியங்களானது அனைவருக்கும் வெளிப்படுத்தப்படுவதைக் குறித்தே "மேகங்களுடனே வருகிறார்; கண்கள் யாவும்

அவரைக் காணும்" - வெளிப்படுத்தல் 1:7 போன்ற வேத வசனங்கள் பொருந்துகின்றன; தற்கால ஜீவியத்தின் கவலைகளால் பாரமடையாத கிறிஸ்தவர்கள் எவர்களோ, அவர்களே அவருடன் "கூட எடுத்துக்கொள்ளப்படுவதற்கு" முன்பாக, அவருடைய இரகசிய பிரசன்னத்தின் (Presence) அடையாளங்களை அறிந்துக்கொள்ளும் மகிழ்ச்சியை அனுபவிப்பார்கள் (லூாக்கா 21:34-36).

திரும்பி வந்துவிட்ட கிறிஸ்துவின் திருடனைப்போன்ற பிரசன்னம் (Presence) மற்றும் அதன்பின் அனைத்து மனுக்குலத்திற்கும் வெளிப்படுத்தப்படுதல் ஆகிய இரண்டை பற்றியும் பின்வரும் அத்தியாயங்களானது வேதவசனங்களின் விவரங்களுடன் ஆராயும். "கண்கள் யாவும் அவரைக் காணும்" என்பதற்கான விரிவான விளக்கத்திற்கு, பின்னிணைப்பு-C (Appendix C) - ஐக் காணவும்.

## அத்தியாயம் 2

# கிறிஸ்துவினுடைய பிரசன்னத்தின் அடையாளங்கள்

கிறிஸ்துவினுடைய பிரசன்னத்தின் (Presence) அடையாளங்களைக் கருத்தில் கொள்ளும் போது, மூன்று வேதக்குறிப்புகளை நாம் அறிந்திருப்பது அவசியமானதாகும். முதலாவதாக, கிரேக்க வார்த்தையான "**பரோசியா**" **(Parousia)** என்பதற்குச் சரியான மொழிபெயர்ப்பு "வருகை" என்பதல்ல, மாறாக "பிரசன்னம்" (Presence) என்பதே பொருள் என்று, முந்தின அத்தியாயத்தில் உறுதிப்படுத்தப் பட்டது என்றால், கிறிஸ்துவின் விரைவான வருகைக்குச் சான்றாக பலர் ஏற்றுக்கொள்ளும் அடையாளங்கள், உண்மையில் அவர் ஏற்கெனவே வந்துவிட்டார் என்பதை நிரூபிக்கின்றன. இரண்டாவதாக, லூக்கா 17:26,27 மத்தேயு 24:37,38 மற்றும் பல வேதவசனங்களானது உபத்திரவக் காலத்திற்கு முன்னதாகவே கிறிஸ்து வந்துவிட்டார் என்பதை வெளிப்படுத்துகின்றன.

> "நோவாவின் நாட்களில் நடந்ததுபோல மனுஷகுமாரனுடைய நாட்களிலும் நடக்கும். நோவா பேழைக்குள் பிரவேசித்த நாள்வரைக்கும் ஜனங்கள் புசித்துக் குடித்தார்கள், பெண்கொண்டு கொடுத்தார்கள்; ஜலப்பிரளயம் வந்து எல்லாரையும் அழித்துப்போட்டது" லூக்கா 17:26,27.

இந்த ஒப்புமையின் மையக்கருத்தானது, நோவாவின் வருகைக்கும் நம்முடைய ஆண்டவரின் வருகைக்கும் இடையே இல்லை. ஜலப்பிரளயம் வந்ததற்கும் நம்முடைய ஆண்டவரின் வருகைக்கும் இடையேயும் கூட இல்லை. ஆனால் இந்த ஒப்புமையானது ஜலப்பிரளயத்திற்கு முன்னதாக நோவாவின் நாட்களுக்கும், உபத்திரவத்துடன் முடிவடையவிருக்கும் இந்த சுவிசேஷ யுகத்திற்கு முன்னதாக, நம்முடைய ஆண்டவரின் பிரசன்னத்தின் (Presence) நாட்களுக்கும் இடையே உள்ளது. இரண்டு காலப்பகுதிகளிலுமே, வரவிருக்கும் உபத்திரவத்தைப் பற்றி ஜனங்கள் அறியாமையில் இருந்தனர். மனுஷகுமாரனுடைய நாட்கள் என்பது அவருடைய "**பரோசியா**" (**Parousia**), அதாவது உலகத்தின் கண்ணுக்குத் தெரியாத மற்றும் அறியப்படாத அவருடைய பிரசன்னத்தின் (Presence) நாட்களைக் குறிக்கின்றது. எனவே, உபத்திரவத்திற்கு முன்னதாகவே கிறிஸ்துவினுடைய பிரசன்னத்தின் (Presence) அடையாளங்களைக் காண நாம் எதிர்பார்க்க வேண்டும்.

மூன்றாவதாக, கிறிஸ்து பிரசன்னமாகியுள்ளார் (Presence) என்பதற்குச் சான்றாக, விசுவாசமுள்ள கிறிஸ்தவர்களால் மேற்கண்ட அடையாளங்கள் அங்கீகரிக்கப்பட வேண்டும். இதனால் கிறிஸ்துவின் திரும்பி வருதலின்போது, உயிரோடிருக்கிற சபை வகுப்பார், உடனடியாக அவரோடு ஒன்று சேர்க்கப்படுவதை இது சாத்தியமற்றதாக்குகிறது. கிறிஸ்து திரும்பி வரும்போது கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் "முதலாவது" எழுந்திருப்பார்கள், ஆனால் "கிறிஸ்துவுக்குள் ஜீவிக்கிறவர்கள்" அவருடைய திரும்பி வருதலுக்கு பிறகும்கூட ஒரு குறிப்பிட்டக் காலத்திற்கு பூமியில் இருந்து, அவருடைய "திருடனைப் போன்ற" பிரசன்னத்தின் (Presence) அடையாளங்களைக் காண்கிறார்கள். உயிரோடிருக்கும் பரிசுத்தவான்கள் திரும்பி வந்தக் கர்த்தருடன் "எடுத்துக்கொள்ளப்படுவார்கள்" என்பதை பற்றிய வேதவசனத்தின் போதனைகளானது, பின்வரவிருக்கும் நான்காம் அத்தியாயத்தில் விரிவாக விளக்கப்படும்.

கிறிஸ்துவின் பிரசன்னத்திற்கு (Presence) பல சான்றுகள் உள்ளன, அவற்றில் பதினான்கு சான்றுகள் இங்கே கருத்தில் கொள்ளப்படுகின்றன. அவைகள் பின்வருமாறு:

## 1. இஸ்ரயேல் மீட்கப்பட்டது

". . . அத்திமரத்திலே இளங்கிளை தோன்றி, துளிர்விடும்போது" மத்தேயு 24:32. அத்திமரம் இஸ்ரயேல் தேசத்தின் அடையாளமாக இருக்கிறது என்று தீர்க்கதரிசனத்தின் மாணவர்களால் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படுகிறது (எரேமியா 24). மத்தேயு 21:19 -இல், இயேசு அத்திமரத்தில் கனியைக் காணாததால் அதைச் சபித்தார், அது பட்டுப்போயிற்று. அதன்பின்பு, விரைவிலேயே "இதோ, உங்கள் வீடு உங்களுக்குப் பாழாக்கிவிடப்படும்" (மத்தேயு 23:38) என்ற இஸ்ரயேல் தேசத்தின் மீதான நியாயத்தீர்ப்பை அவர் அறிவித்தார், ஏனென்றால் அவர்கள் தேவனுக்குக் கனிகளைக் கொடுக்கவில்லை. இஸ்ரயேல் பின்னர் சிதறடிக்கப்பட்டு உபத்திரவத்திற்குள்ளானது. இஸ்ரயேலின் மறுசீரமைப்பானது, வரலாற்றின் ஒரு அதிசயம் என்று வரலாற்றாசிரியர்கள் ஒப்புக்கொள்கிறார்கள். ஒரு தேசம் அழிக்கப்பட்டு, அதின் ஜனங்கள் பூமியின் எல்லைகளெல்லாம் சிதறடிக்கப்பட்டு, கிட்டத்தட்ட 2,000 ஆண்டுகளுக்குப் பிறகு, தங்கள் தாய்நாட்டில் மீண்டும் ஒன்றுகூடி, ஒரு தேசமாக மீண்டும் ஸ்தாபிக்கப்பட்ட நிகழ்வு இதற்கு முன் நடந்ததேயில்லை. அத்திமரம் மீண்டும் உயிர்பெற்று, இலைகள் துளிர்விடுவது என்பது இஸ்ரயேல் ஒரு தேசமாக உயிர்பெற்று, தேவனுடைய அனுக்கிரகத்தை அதிகதிகமாய் பெற்றுக்கொண்டு வருவதைக் குறிக்கின்றது.

மத்தேயு 24: 32, மாற்கு 13:28 மற்றும் லூக்கா 21:30 ஆகிய அனைத்து வசனங்களுமே, "அத்திமரத்திலே இளங்கிளை தோன்றி, துளிர்விடும்போது வசந்தகாலம் சமீபமாயிற்றென்று அறிவீர்கள்" என்று கூறுகின்றன. மத்தேயுவும் மாற்குவும் இதைத்தொடர்ந்து, "அப்படியே இவைகளையெல்லாம் நீங்கள் காணும்போது, அது சமீபமாய் வாசலருகே வந்திருக்கிறது என்று அறியுங்கள்" என்று கூறுகிறார்கள். மத்தேயு 24:33 மற்றும் மாற்கு 13:29 ஆகிய வசனங்களிலுள்ள "அது" என்ற வார்த்தையை "அவர்" என்று மொழிபெயர்க்க வேண்டும் என்று சிலர் கோருகிறார்கள்; மேலும் இஸ்ரயேல் (அத்திமரம்) துளிர்விடும்போது "அது" அல்ல "அவர்" (கிறிஸ்து) சமீபமாயிருக்கிறார் என்றே இவ்வசனம் அர்த்தப்படுத்துவதாக சிலர் நினைக்கிறார்கள். இது நிச்சயமாக சரியானதல்ல. "அது" என்பது முந்தின வசனத்தில் உள்ள "வசந்தகாலத்தைக்" குறிக்கின்றது. அத்திமரம் துளிர்க்கும்போது, "வசந்தகாலம் சமீபமாயிருக்கிறது". கிறிஸ்துவின் மூலம் தற்போது இருக்கும் சமூக அமைப்பானது அழிக்கப்பட்டதை அடுத்து, தொடர்ந்து வரவிருக்கும் பூமியின் மீதான இராஜ்யத்தின் அநுக்கிரகக் காலமே வசந்தகாலமாகும். அத்திமரம் திரும்பவும் உயிர்பெறும்போது, கிறிஸ்து ஏற்கெனவே வந்துவிட்டார். இஸ்ரயேலின் மீட்கப்படுதலையும் நதிகள் தொடங்கி பூமியின் கடைசிபரியந்தமும் ஆட்சிசெய்யவிருக்கும் அவருடைய இராஜ்யத்திற்கு இடமளிப்பதற்காக, நமது தற்போதைய தீமை நிறைந்த உலகத்தின் அழிவையும் அவருடைய பிரசன்னமாகுதலே (Presence) கொண்டுவருகின்றது.

வசனத்தில் இடம்பெற்றுள்ள "அது" என்பது கிறிஸ்துவைக் குறிக்காமல், இராஜ்யத்தையே குறிக்கின்றது என்று நாம் உறுதியாக இருக்க முடியுமா? வேதாகமம் தன்னுடைய சொந்த விளக்கவுரையாக இருந்து தனக்குத் தானே விளக்கத்தை அளிப்பது என்பது, எவ்வளவு ஆச்சரியமாக இருக்கின்றது! வேதாகமம் இணையான ஒரு வசனப்பகுதியின் மூலம் முக்கியமான வார்த்தையை மீண்டும் விளக்குகின்றது.

லூக்கா 21:29-31 முதலான வசனப்பகுதியில், 31-வது வசனமானது மத்தேயு மற்றும் மாற்கு ஆகியவற்றிலுள்ள "அது" என்ற வார்த்தைக்குப் பதிலாக "தேவனுடைய இராஜ்யம்" என்ற வாக்கியத்தை பயன்படுத்துகின்றது. லூக்கா 21:29-31 ஆகிய வசனங்களை, மத்தேயு 24:32,33 மற்றும் மாற்கு 13:28,29 ஆகிய வசனப்பகுதிகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கவும்.

> "அன்றியும் அவர்களுக்கு ஒரு உவமையைச் சொன்னார்: அத்திமரத்தையும் மற்றெல்லா மரங்களையும் பாருங்கள். அவைகள் துளிர்க்கிறதை நீங்கள் காணும்போது வசந்தகாலம் சமீபமாயிற்றென்று அறிகிறீர்கள். அப்படியே இவைகள் சம்பவிக்கிறதை நீங்கள் காணும்போது, தேவனுடைய ராஜ்யம் சமீபமாயிற்றென்று அறியுங்கள்." லூக்கா 21:29-31.

அத்திமரமானது, அதாவது மீட்கப்பட்ட இஸ்ரயேல் தேசமானது, நம் கர்த்தருடைய தீர்க்க தரிசனத்தின் மாபெரும் அடையாளம் என்பதை அநேகக் கிறிஸ்தவர்கள் ஒப்புக்கொள்வார்கள். உண்மையில், கிறிஸ்து வந்துவிட்டார் என்பதற்கு இஸ்ரயேலின் மறுசீரமைப்பானது ஒரு சான்றாகும்.

## 2. எருசலேம் இனியும் மிதிக்கப்படாது

> "புறஜாதியாரின் காலங்கள் நிறைவேறும்வரைக்கும் எருசலேம் புறஜாதியாரால் மிதிக்கப்படும்" லூக்கா 21:24.

இந்த வசனத்தில் சொல்லப்பட்டுள்ள எருசலேம் பொதுவாக இரண்டு விதங்களில் விளக்கப் பட்டுள்ளது.

- ஒன்று: "எருசலேம்" என்பது நேரடியான (அ) நிஜமான நகரமாகும். எனவே, நிறைவேற்றத்தின் அதிகபட்ச நீட்டிப்பு 1967 - ஆக இருக்கும், அப்பொழுது பழைய நகரமாகிய வேதாகமத்திலுள்ள எருசலேமானது கைப்பற்றப்பட்டு, நவீன இஸ்ரயேல் தேசத்தின் ஒரு பகுதியாக மாறியது.
- மற்றொரு விளக்கம் என்னவெனில்,"எருசலேம்" என்பது யூத ஜனங்களை அடையாளப் படுத்துகிறது என்பதும் முதலாம் உலகப் போரின் விளைவாக யூதர்களுக்கென்று ஒரு தேசிய தாயகத்திற்கான உத்தரவாதம் கிடைத்தபோது, தொடக்க நிலையான நிறைவேற்றம் ஆரம்பித்தது" என்பதும் ஆகும்.

புறஜாதியாரால் மிதிக்கப்படுதல் நின்றுபோன எருசலேமே, இயேசுவால் அவருடைய ***பரோசியாவின்*** (Parousia) ஒரு அடையாளமாகக் கொடுக்கப்பட்டது. ***பரோசியா*** (**Parousia**) என்றால் பிரசன்னம் (Presence) என்று பொருள்படும், வருகை என்று பொருள்படாது. ஆகையால் "எருசலேம்" என்பதற்கு நாம் எந்தவொரு விளக்கத்தைக் கொடுத்தாலும், எருசலேம் இனி புறஜாதியாரால் மிதிக்கப்படாததால், கிறிஸ்து நிச்சயமாகவே இப்பொழுது பிரசன்னமாகியிருக்க வேண்டும்.

## 3. மற்ற புதிய தேசங்கள்

"அத்திமரத்தையும் மற்றெல்லா மரங்களையும் பாருங்கள். அவைகள் துளிர்க்கிறதை நீங்கள் காணும்போது. . ." லூக்கா 21:29,30. "அத்திமரமானது" புதிய இஸ்ரயேல் தேசத்தின் அடையாளமாக

இருக்கிறதென்றால், துளிர்விடுகிற மற்ற மரங்கள் எல்லாம் மற்ற புதிய தேசங்களின் பிறப்பைக் குறிக்கின்றது என்று முடிவு செய்வது பொருத்தமானது. இஸ்ரயேலும் மற்ற எல்லாப் புதிய தேசங்களும் கிறிஸ்துவின் பிரசன்னத்தின் (Presence) அடையாளங்கள் ஆகும். 1948 - ஆம் ஆண்டு முதல், 80 - க்கும் மேற்பட்ட புதிய தேசங்கள், ஐக்கிய நாடுகள் சபையில் இணைந்துள்ளன. இவ்வளவு புதிய தேசங்களின் பிறப்பானது கிறிஸ்து திரும்பி வந்துவிட்டார் என்பதற்கு கூடுதல் சான்றாகும்.

## 4. "அப்பொழுது அநேகர் இங்கும் அங்கும் ஓடி ஆராய்வார்கள், அறிவும் பெருகிப்போம்"

தானியேல் 12:4 -இல் உள்ள நிகழ்வுகளானது, முடிவு காலத்தில், பெரிய அதிபதியாகிய மிகாயேல் (தானியேல் 12:1, யூதா 9) எழும்பும்போது நிகழ்கின்றன. 1தெசலோனிக்கேயர் 4:16 -ஆம் வசனமானது "பிரதான தூதனுடைய சத்தத்தின்" அடையாளத்தோடுகூட கிறிஸ்துவின் திரும்பி வருதலானது இருக்கும் என்பதைக் காண்பிக்கின்றது. எனவே தானியேல் 12 - இல் மிகாயேலின் (பிரதான தூதன்) எழும்புதலுக்குப் பிறகு நடக்கும் சம்பவங்களானது, கர்த்தர் பிரசன்னமாகியுள்ளார் என்பதற்கு சான்றுகளாகும்.

1877 - ஆம் ஆண்டில் செல்டன் (Selden) அவர்களின் முதல் தானியங்கி மோட்டார் வாகனமானது (automobile) போக்குவரத்தில் ஒரு பெரிய முன்னேற்றத்தை ஏற்படுத்தியது. இன்று 200,000,000 - க்கும் அதிகமான கார்கள் (Cars) உள்ளன. மிகவும் அதிகரித்துள்ள மற்றும் ஏராளமான போக்குவரத்து முறைகளின் மூலம், உலகம் முழுவதும் மில்லியன் கணக்கான மக்கள் மற்ற ஒவ்வொருவரின் பாதைகளில் போக்கும்வரத்துமாக இருக்கின்றனர். கடந்த 100 ஆண்டுகளில், மனிதன் தனது பயணத்தை பூமியிலிருந்து நிலவுக்கு மணிக்கு 30 மைல்களிலிருந்து 25,000 மைல்கள் வரை உயர்த்தியுள்ளான். கூடுதலாக, தகவல் தொடர்புகளில் உள்ள வசதியானது மனிதன் உலகத்தின் எந்தப் பகுதியில் இருந்தாலும், உடனடியாக பார்க்கவும் கேட்கவும் அனுமதிக்கின்றது.

வரலாற்றின் துவக்கத்திலிருந்து 1800-கள் வரையிலான அறிவின் வளர்ச்சிக்கு, மதிப்பு ஒன்று என்று கொடுக்கப்பட்டால், இதைக்காட்டிலும் கடந்த 10 ஆண்டுகளில் அறிவின் வளர்ச்சியானது 16 மடங்கு இரட்டிப்பாகியுள்ளது. நூறு ஆண்டுகளுக்கு முன்பு, உலகின் மக்கள்தொகையில் 90 சதவீத மக்களுக்கு படிக்கவோ, எழுதவோ முடியாது. இன்று, உலகின் மக்கள் தொகையில் 40 சதவீத மக்களுக்கு படிக்கவும், எழுதவும் முடியும். இதுவரை வாழ்ந்த விஞ்ஞானிகளில் 90 சதவீத விஞ்ஞானிகள் இன்றும் உயிருடன் இருக்கின்றனர். உலகின் கண்டுபிடிப்புகளில் 50 சதவீதம் கடந்த பத்தாண்டுகளில் உருவாக்கப்பட்டுள்ளன.

"மனிதன் பதின்மூன்றாம் நூற்றாண்டில் செய்தது போலவே அல்லது முதல் நூற்றாண்டில் செய்தது போலவே, காற்று மற்றும் நீரின் சக்தியோடுக்கூட தன் சொந்த சக்தியையும், விலங்குகளின் சக்தியையும் மட்டுமே பயன்படுத்தி பத்தொன்பதாம் நூற்றாண்டிலும் காலடி எடுத்துவைத்தான். அவன் இருபதாம் நூற்றாண்டிலே போக்குவரத்து, தகவல் தொடர்பு, உற்பத்தி, தயாரிப்பு மற்றும் ஆயுதங்கள் ஆகிய துறைகளில் இயந்திரங்களின் ஆற்றலால் ஆயிர மடங்கு வளர்ச்சியுடன் காலடி எடுத்து வைத்தான்" என்று புகழ்பெற்ற வரலாற்றாசிரியராகிய பார்பரா டக்மேன் (Barbara Tuchman) கண்டறிந்தார். (The Proud Tower, foreword, xvi) முன் ஒருபோதும் இல்லாத போக்குவரத்துமுறை மற்றும் அறிவின் பெருக்கம் ஆகியவை கிறிஸ்துவின் பிரசன்னத்தைக் (Presence) குறிக்கின்றது.

## 5. இதுவரை வெளிப்படாத அளவிற்கு தீமைகள் வெளியாகின்றன

"ஆனதால், கர்த்தர் வருமளவும் நீங்கள் காலத்துக்குமுன்னே யாதொன்றைக்குறித்தும் தீர்ப்புச்சொல்லாதிருங்கள் இருளில் மறைந்திருக்கிறவைகளை அவர் வெளியரங்கமாக்கி, இருதயங்களின் யோசனைகளையும் வெளிப்படுத்துவார்..." 1 கொரிந்தியர் 4:5

மதத் தலைவர்கள், அரசியல்வாதிகள், அரசாங்க அதிகாரிகள், தொழில்துறைத் தலைவர்கள், தொழிற்சங்கத் தலைவர்கள் மற்றும் செல்வந்தரானவர்கள் இப்பொழுது பொதுமக்கள் தீர்ப்பின் முன்னிலையில் கேள்விகேட்கப்பட்டதும், விமர்சிக்கப்பட்டதும், வெளிப்படுத்தப்பட்டதும் போல வரலாற்றின் அனைத்துப் பதிவுகளிலும், இதற்குமுன் இருந்ததேயில்லை. விசாரணையைத் தவிர்க்க அவர்கள் உறுதியான முயற்சி செய்தபோதிலும், அவர்கள் இந்தச் சோதனையைத் தாங்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளனர். வாட்டர்கேட் (Watergate)*, ஆக்னியூ (Agnew)** மற்றும் பன்னாட்டு எண்ணெய் நலன்களினால் வெளிப்படுத்தப்பட்டத் தந்திரங்கள் ஆகியவை, சில உதாரணங்கள் மட்டுமே. வாட்டர்கேட்டைப் பற்றிய மிக முக்கியமான காரியம் என்னவென்றால், அது நிகழ்ந்துவிட்டது என்பது அல்ல (ஊழலானது மனித வரலாற்றைப் போலவே பழமையானது) மாறாக அதை மறைக்க முடியவில்லை என்பதுதான். அவர்கள் எவ்வளவு முயற்சி செய்தாலும், அதை மறைக்க முடியவில்லை. ஏன்? இருளில் மறைந்திருக்கிறவைகள் வெளியரங்கமாக்கப்படுகின்ற காலத்தில் நாம் வாழ்ந்துகொண்டிருக்கிறோம். சோல்செனிட்சின் (Solzhenitsyn)*** விவகாரத்தில் பார்த்தபடி, ரஷ்யா போன்ற சர்வாதிகார அரசாங்கத்தாலும்கூட உண்மை வெளியாவதைத் தடுக்க வல்லமையில்லை. அவரது வெளியீடு உலகளாவிய கவனத்தைப் பெற்றது. இன்னும் கூடுதலான வெளியீடுகள் கம்யூனிஸ்ட் சாம்ராஜ்யத்தின் வீழ்ச்சிக்கு வழிவகுத்தன. இந்த உலகளாவிய ஊழலின் வெளிப்பாடுகளானது, நம் கர்த்தருடைய திரும்பி வருதல் மற்றும் உலகத்தின் முடிவுகாலத்தில் நாம் இருக்கின்றோம் என்பதற்கான மற்றொரு சான்றாகும்.

* வாட்டர்கேட் (Watergate) ஒரு அரசியல் ஊழலாகும். இதில் அமெரிக்க ஜனாதிபதி நிக்சனின் குழு சட்ட விரோத நடவடிக்கைகளை மறைக்க முயன்றது. இது அவரது ராஜினாமாவுக்கு வழிவகுத்தது.

** அமெரிக்க துணை ஜனாதிபதியான ஆக்னியூ (Agnew) என்பவர் லஞ்சம் மற்றும் வரி ஏய்ப்பில் சிக்கி முன்னதாகவே பதவி விலகினார்.

*** சோல்செனிட்சின் விவகாரம் (Solzhenitsyn Affair): சோல்செனிட்சின் என்ற ஒரு ரஷ்ய எழுத்தாளர், சோவியத் சிறைகளைப் பற்றிய கடுமையான உண்மையை வெளிப்படுத்தியபோது நடந்தது, மேலும் அரசாங்கத்தால் அவரை நிறுத்த முடியவில்லை.

## 6. பூமியில் சிறிதளவு விசுவாசம்

". . . மனுஷகுமாரன் வரும்போது, பூமியிலே விசுவாசத்தைக் காண்பாரோ?" லூக்கா 18:8.
". . அவருடைய பிரசன்னமாகுதலையும் . . அவர்கள் ஆரோக்கியமான உபதேசத்தைப் பொறுக்கமனதில்லாமல், . . . சத்தியத்துக்குச் செவியை விலக்கி, கட்டுக்கதைகளுக்குச் சாய்ந்துபோகுங்காலம் வரும்" (2 தீமோத்தேயு 4:1-4).

பல்கலைக்கழகம் முதல் பிரசங்கமேடை வரை விசுவாசத் துரோகமானது தீவிரமாக உள்ளது.

கிறிஸ்துவின் சபையென்று சொல்லப்படும் சபையில், தேவனுடைய வசனமானது இனிமேலும் விசுவாசத்தின் தரநிலையாகவோ, வாழ்க்கையின் வழிகாட்டியாகவோ இல்லை. அதன் இடத்தை மனிதத் தத்துவங்களும் கோட்பாடுகளும் எடுத்துக்கொள்கின்றன. முன்பு தங்களின் எல்லைக்கு அப்பால் இருந்த இடங்களில்கூட, புறஜாதிகளின் விநோதமான எல்லாப் பழக்கவழக்கங்களும் செழித்து வளர்கின்றன.

தேசிய கிறிஸ்தவ சபைகளுடைய குழுவின் பிரதிநிதிகளிடையே எடுக்கப்பட்ட ஒரு ஆய்வில் தெரியவந்தது என்னவென்றால், மூன்றில் ஒரு பங்கிற்கு மேற்பட்டோரால் தங்களுக்கு தேவனிடத்தில் உறுதியான நம்பிக்கை இருப்பதாகக் கூறமுடியவில்லை; முப்பத்தொன்று சதவீத மக்களால் மரணத்திற்குப் பிறகு வாழ்க்கை இருக்கிறது என்று கூறமுடியவில்லை. அறுபத்திரண்டு சதவீத மக்கள் வேதாகமம் கூறுவதுபோல் அற்புதங்கள் நடந்தன என்று நம்பவில்லை. எழுபத்தேழு சதவீத மக்கள் சாத்தான் உண்மையில் இருக்கிறான் என்று நம்பவில்லை, எண்பத்தேழு சதவீத மக்கள் பாவத்தை வழிவழியாக நாம் பெற்றுக்கொண்டோம் என்ற வேதாகமக் கருத்தை நிராகரித்தனர் என்பதாகும். கிறிஸ்தவ சபையின் வரலாற்று ஆசிரியர்கள், இதைக் கிறிஸ்தவ யுகத்திற்குப் பிற்பட்டக் காலம் (Post – Christian era) என்று பேசும் அளவிற்கு, நம்முடைய காலமானது கடந்த காலத்தைக்காட்டிலும் மிகவும் வேறுபட்டதாக இருக்கின்றது. இந்த உலகளாவிய விசுவாசக் குறைச்சலானது, மனுஷகுமாரன் வந்துவிட்டார் என்பதைக் குறிக்கின்றது.

## 7. கடைசி நாட்களின் அடையாளங்கள்

"கடைசி நாட்களில் கொடிய காலங்கள் வரும். மனுஷர்கள் தற்பிரியராயும், பணப்பிரியராயும் (ஐசுவரியமும் பொருளாசையும்) மாத்திரமே இருப்பார்கள்; நன்றியறியாதவர்களாயும், பரிசுத்தமில்லாதவர்களாயும், இணங்காதவர்களாயும், அவதூறு செய்கிறவர்களாயும், இச்சையடக்கமில்லாதவர்களாயும், கொடுமையுள்ளவர்களாயும் (போதைப்பொருளின் மீதான அடிமைத்தனம் மற்றும் அர்த்தமற்ற வன்முறை), நல்லோரைப் பகைக்கிறவர்களாயும், துரோகிகளாயும், தேவப்பிரியராயிராமல், சுகபோகப்பிரியராயும், தேவபக்தியின் வேஷத்தைத் தரித்து அதின் பெலனை மறுதலிக்கிறவர்களாயும் இருப்பார்கள்" - 2 தீமோத்தேயு 3:1-5.

இந்த வசனங்களானது இருபதாம் நூற்றாண்டின் தலைப்புச் செய்திகளைப் போல் உள்ளன. இந்த அடையாளங்களில் ஒன்றைப் பற்றி மேலும் ஒரு வார்த்தை:

"தேவப்பிரியராயிராமல் சுகபோகப்பிரியராயும்" இருப்பது என்பது இன்றைக்கு உள்ள பரவலான தத்துவத்தில் குறிப்பிடத்தக்க வகையில் நிறைவேறியுள்ளது. "இன்பவியல்" (Hedonism) என்பது, வாழ்க்கையின் முடிவும் நோக்கமும் இன்பம்தான் என்ற தத்துவமாகும்; இந்தத் தத்துவம் புதிதல்ல. ஆனால் முதன்முறையாக இன்று, உலகம் முழுவதும் பொதுவான அங்கீகாரத்தை இது பெற்றுள்ளது. 2 தீமோத்தேயு 3:1-5 - இல் முன்னறிவிக்கப்பட்ட பல்வேறு நிலைமைகளானது, "இப்பொழுதிருக்கிற பொல்லாத உலகத்தின்" "கடைசி நாட்களில்" நாம் இருக்கிறோம் என்பதற்கான சான்றாகும்.

## 8. முதலாளிகள் மற்றும் வேலைக்காரர்களின் போராட்டம்

"ஐசுவரியவான்களே, . . . அலறி அழுங்கள். உங்கள் ஐசுவரியம் அழிந்து . . .

அவைகளிலுள்ள துரு உங்களுக்கு விரோதமாகச் சாட்சியாயிருக்கும். . . கடைசி நாட்களிலே பொக்கிஷத்தைச் சேர்த்தீர்கள். இதோ, உங்கள் வயல்களை அறுத்த வேலைக்காரருடைய கூலி உங்களால் அநியாயமாய்ப் பிடிக்கப்பட்டுக் கூக்குரலிடுகிறது அறுத்தவர்களுடைய கூக்குரல் சேனைகளுடைய கர்த்தரின் செவிகளில் பட்டது" யாக்கோபு 5:1-4.

வேலைக்காரருடைய கூலிக்கானக் கூக்குரல்கள், வேலைநிறுத்தங்கள் மற்றும் வெளிநடப்புகள் ஆகியவை கடைசி நாட்களின் அடையாளங்கள் ஆகும். அவை தொடர்ந்து அதிகரிப்பதை நாம் கேள்விப்படுகிறோம். 2 பேதுரு 3:3,4 -இல் நாம் பார்த்தபடி, இந்தக் "கடைசி நாட்கள்" கிறிஸ்துவின் **பரோசியா** (Parousia) அல்லது பிரசன்னத்தின் (Presence) போது ("வருகை" என்று தவறாக மொழிபெயர்க்கப்பட்டுள்ளது) நிகழ்கின்றன. தொழிலதிபர்கள் மற்றும் முதலாளிகளின் அதிகப்படியான இலாபமானது "கடைசி நாட்கள்" வரை குவிந்து கிடக்கின்றது. "சேனைகளுடைய கர்த்தர்" வேலையாட்களின் கூக்குரலைக் கேட்டுள்ளார். கர்த்தரின் திரும்பி வருதலிலிருந்து, வேலையாட்களுக்கு எதிரான பெருமளவு அநீதியானது சரி செய்யப்பட்டுள்ளது. வேலையாட்களுடைய உரிமைகளின் பாதுகாப்பு என்பது, நம்முடைய காலக்கட்டத்தின் ஒரு நிகழ்வாகும். "கூட்டத்தில் சிலரைக் கொலைசெய்வது இராணுவத்திற்கு அவசியமாக இருக்கும். . . அவர்கள் ஆறு பேரை மட்டுமே இதுவரையில் கொன்றுள்ளனர் . . . இது ஒரு தாக்கத்தை ஏற்படுத்த போதுமானதாக இல்லை" என்று 1894 -இல் அப்போதைய எதிர்கால ஜனாதிபதி ஹோவர்ட் டா.ஃப்ட் (Howard Taft) என்பவர், "1894-இன் புல்மேன் வேலை நிறுத்தத்தைப்" (Pullman Strike of 1894) பற்றி எழுதியதை நாம் திரும்பிப் பார்த்தால் மட்டுமே போதும். (The Proud Tower by Barbara W. Tuchman, page 478).

அதிகக் கூலிக்காகவும் சிறப்பான வேலை சூழல்களுக்காகவும், வேலையாட்கள் நிர்வாகத்தை நெருக்கடிக்கு உள்ளாக்கும் அதிகாரம், மனித வரலாற்றில் இதற்கு முன் ஒருபோதும், சட்டங்களால் உறுதியளிக்கப்பட்டதில்லை. ஆனாலும் முதலாளியும் தொழிலாளியும், சுயநலம் என்கின்ற ஒரே பாவத்தால் கறைப்படுத்தப்பட்டுள்ளனர். தொழிலாளர்களின் நியாயமான மற்றும் மனம் விரும்பும் உரிமைகள் ஆகிய இரண்டிற்குமான கோரிக்கைகள் தொடர்ந்து அதிகரிக்கும். நிர்வாகமானது அதனுடைய இலாபத்தில் மிகக் குறைந்தப் பங்கை மட்டுமே பகிர்ந்தளிக்கும். அதினால், மரணப் போராட்டமானது நம்மீது இருக்கும். முதலாளிக்கும் தொழிலாளிக்கும் இடையேயான நீதியின் தராசுகளை இவ்வாறு சமநிலைப்படுத்துதலானது யாக்கோபு 5:1-4 - இல் சொல்லப்பட்டுள்ள "கடைசி நாட்களில்" நடப்பதைப் போலவே, தற்போதும் நடக்கிறதாகச் சுட்டிக்காண்பிக்கின்றது. கிறிஸ்து திரும்பி வந்துவிட்டார் என்பதற்கான மற்றுமொரு அடையாளம் இதுவாகும்.

## 9. புரட்சியும் ஒழுங்கின்மையும்

"கர்த்தருடைய நாள் சமீபித்திருக்கிறது; கர்த்தர் ஒரு யாகத்தை ஆயத்தம்பண்ணி, அதற்கு விருந்தாளிகளையும் அழைத்திருக்கிறார். கர்த்தருடைய யாகத்தின் நாளிலே நான் அதிபதிகளையும் ராஜகுமாரரையும் மறுதேசத்து வஸ்திரம் தரிக்கிற யாவரையும் தண்டிப்பேன். வாசற்படியைத் தாண்டி, கொடுமையினாலும் வஞ்சகத்தினாலும் தங்கள் எஜமான்களின் வீடுகளை நிரப்புகிற யாவரையும் அந்நாளிலே தண்டிப்பேன்." செப்பனியா 1:7-9.

கிறிஸ்தவ யுகம் முழுவதும், பொருளாதாரத்தின்படி பார்க்கும்போது, அடிப்படையாக இரண்டு வகுப்பினர் இருந்துள்ளனர்: அதாவது "இருப்பவர்கள்" மற்றும் "இல்லாதவர்கள்" ஆவர். ஒரு பெரிய நடுத்தர வகுப்பினராக இருப்பவர்கள், நமது யுகத்தின் தனித்தன்மை வாய்ந்தவர்களாக இருக்கின்றனர் மற்றும் இது நாம் கர்த்தருடைய நாளில் இருக்கின்றோம் என்பதைக் காட்டுகிறது. பல நூற்றாண்டுகளாக, செல்வந்தரானவர்கள் வெகுஜனங்களைச் சுரண்டுவதில், கிறிஸ்தவ சபையுடனும் அரசாங்கத்துடனும் இணைந்து செயல்பட்டு வருகின்றனர்.

செப்பனியா தீர்க்கதரிசியால் சொல்லப்பட்ட "கர்த்தருடைய நாளில்" நாம் இருக்கிறோம். கடந்த கால சுரண்டல்களை ஈடுசெய்ய, திரும்பி வந்துள்ள கர்த்தரானவர் செல்வந்தர்களின் பேராசையான சேமிப்புகளிலிருந்து ஒரு யாகத்தை ஆயத்தம் செய்துள்ளார். விருந்தாளிகள் (திரளானோர்) அதில் பங்குகொள்ள அழைக்கப்பட்டிருக்கிறார்கள். இந்தப் பொருளாதார சமநிலையானது நம்முடைய நாட்களிலுள்ள பெரிய நடுத்தர வகுப்பிற்கு வழிவகுத்துள்ளது.

ஆர்ப்பாட்டங்கள், கலகங்கள், முதலாளிக்கும் தொழிலாளிக்கும் இடையேயான போராட்டங்கள், இனம் சார்ந்த பெரும்பான்மையினருக்கும் சிறுபான்மையினருக்கும் இடையேயான போராட்டங்கள் ஆகியவை முழுமையான ஒழுங்கின்மைக்குள் சென்றடையும் வரைக்கும், கர்த்தருடைய பிரசன்னத்தின் நாளில் படிப்படியாக மோசமடையும். ஏற்கெனவே ஒழுங்கின்மையானது மேற்பரப்பிற்குக் கீழேதான் உள்ளது; சிறிய தூண்டுதல் ஏற்பட்டாலே அது வெடித்து வெளிவரத் தயாராக இருக்கின்றது.

செல்வாக்கு நிறைந்த வகுப்பினரால் செய்யப்பட்டக் கடந்தகாலத் தவறுகளுக்காக, கர்த்தர் நீதியின் தராசுகளைச் சமமாக்கும்போது, சுரண்டப்பட்ட வகுப்பினர் தங்களது நியாயமற்ற கோரிக்கைகள் மற்றும் வன்முறையின் மூலமாக, அவர்களால் இதைக்காட்டிலும் சிறந்ததைக் கொடுக்க தங்களிடம் எதுவும் இல்லை என்று காட்டுகிறார்கள். ஏனெனில் அவர்களுடைய கொள்கைகள் சுயநலத்தினாலும் வறுமையினாலும், துளையிடப்பட்ட ஒரு தேன்கூடுபோல, கலந்த கலவையாக உள்ளதால், நம்முடைய சமூக அமைப்பை அழித்துப்போடுவது என்ற ஒரே ஒரு காரியத்தை மாத்திரமே அவர்கள் செய்வார்கள்.

கர்த்தருடைய நாளின்போது, செப்பனியா முன்னறிவிக்கிற சம்பவங்கள் நிகழும். இந்தத் தீர்க்கதரிசனத்தின் காலஅளவானது 24 மணி நேரம் கொண்ட ஒரு நாளிலோ அல்லது குறுகிய காலத்திலோ நிறைவேறாது. செல்வந்தர்களின் பொருளாதார மிகுதியில் பங்குகொள்ள திரளானோருக்கு அழைப்பு கொடுக்கப்படுகிறது, மேலும் சுரண்டப்பட்டவர்கள் தற்போதைய நிலைக்கு விரோதமாகக் கலகம் செய்யும்போது, அவர்களுடைய வஞ்சகத்தையும் வன்முறையையும் வெளிப்படுத்த நேரம் தேவைப்படுகின்றது.

நமது காலக்கட்டத்தின் முழு புரட்சிகரமான போக்கும், அதோடுகூட அவ்வப்போது ஏற்படும் அதன் வன்முறை வெடிப்புகளும், கர்த்தர் திரும்பி வந்துவிட்டார் என்பதற்கான மற்றுமொரு அடையாளமாகும்.

## 10. யுத்தங்களும் யுத்தங்களுக்கான ஆயத்தங்களும்

"யுத்தத்துக்கு ஆயத்தம்பண்ணுங்கள், பராக்கிரமசாலிகளை எழுப்புங்கள்; யுத்தவீரர் எல்லாரும் சேர்ந்து ஏறிவரக்கடவர்கள். உங்கள் மண்வெட்டிகளைப் பட்டயங்களாகவும்,

உங்கள் அரிவாள்களை ஈட்டிகளாகவும் அடியுங்கள்; பலவீனனும் தன்னைப் பலவான் என்று சொல்வானாக. நீங்கள் சுற்றிலுமிருந்து . . . ஏகமாய் வந்து கூடுங்கள் . ." யோவேல் 3:9-11.

யோயேல் 3:1-ஆம் வசனமானது, இந்த அதிகாரத்தில் இடம்பெற்றுள்ள சம்பவங்கள், இஸ்ரயேல் மீண்டும் கூட்டிச்சேர்க்கப்படும் போது நிகழ்வதாகக் காண்பிக்கின்றது. ஏற்கெனவே பார்த்தபடி, இஸ்ரயேல் மீண்டும் கூட்டிச்சேர்க்கப்படும் காரியமானது, கிறிஸ்துவின் பிரசன்னத்திற்கு (Presence) ஒரு சான்றாகும். எனவே, இஸ்ரயேலின் கூட்டிச்சேர்த்தலின் நாட்களில் (யோயேல் 3:1) யுத்தங்களும் தீவிரப்படுத்தப்பட்ட யுத்த ஆயத்தங்களும் கிறிஸ்துவின் பிரசன்னத்திற்கு (Presence) கூடுதலான அடையாளங்களாகும்.

உலகத்தின் ஒவ்வொரு முனையிலும், பாதிப்பை ஏற்படுத்திய இரண்டு உலகப்போர்களானது நமது யுகத்தின் போது நடந்த ஒரு நிகழ்வாகும். 1980- க்குள், நாற்பது தேசங்களில் உள்ள பொது பயன்பாட்டு இனப்பெருக்க அணு உலைகளானது (civilian breeder reactors) வருடத்திற்கு 5,000 அணு குண்டுகளைத் தயாரிக்க புளுட்டோனியம் (Plutonuim) என்கிற துணைப் பொருளை போதுமான அளவில் உற்பத்தி செய்யும்.

யுத்தங்களைப்பற்றிய பிரபலமான நிபுணரான சமூகவியலாளர் ஆண்டரேஸ்கி (Socialogist Andreski) அவர்கள், "முந்தின நூற்றாண்டைக் காட்டிலும், இதுவரையிலும் நம்முடைய நூற்றாண்டே அதிக யுத்தங்கள் நிறைந்ததாக இருந்துள்ளது" என்று எழுதுகிறார். டைம் இதழ் (Time magazine) (மார்ச் 9,1970) இதை ஒப்புக்கொள்கையில் 20-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்து 10,00,00,000 பேர் யுத்தத்தில் இறந்துள்ளனர் என்றும், அதே சமயத்தில் 19-ஆம் நூற்றாண்டில் 38,45,000 பேர் மட்டுமே இறந்தனர் என்றும் குறிப்பிடுகிறது. அணு ஆயுதங்களுக்கே முன்னுரிமை அளிக்கப்படுகின்றது. யுத்தங்களும், தீவிரபடுத்தப்பட்ட யுத்த ஆயத்தங்களும் கிறிஸ்துவினுடைய திரும்பிவருதலின் கூடுதலான சான்றாகும்.

## 11. "பலவீனனும் தன்னைப் பலவான் என்று சொல்வானாக"

யுத்தமும் யுத்தத்திற்கான ஆயத்தங்களும் தீவிரமடையும்போது, பலவீனமான தேசங்களும்கூட, "தன்னைப் பலவான்" என சொல்லும் என்று முந்தின வேதவசனமாகிய யோயேல் 3:10 வெளிப்படுத்துகிறது. பல நூற்றாண்டுகளாக, விளைவுகளைப்பற்றின பயத்தினால், பலவீனமான தேசங்களானது, பலமுள்ள தேசங்களைச் சாந்தப்படுத்தி, அவர்களுடைய விருப்பங்களை நிறைவேற்றி வந்தன. இது நம்முடைய காலக்கட்டத்தில் மாறிவிட்டது. ஐக்கிய நாடுகள் சபையில், பலவீனமான வல்லமைகளானது (தேசங்களானது) மாபெரும் வல்லமைகளுக்கு (தேசங்களுக்கு) எதிர்த்து நின்று வாய்மொழியாகத் தாக்கி, இதுவரை முன் ஒருபோதும் இல்லாத வகையில் அவர்கள் மீது ஆதிக்கம் செலுத்துகின்றன. உலக மக்களின் அபிப்பிராயம் மற்றும் வல்லரசியல் ஆகியவை பெரிய வல்லரசுகளானது பலவீனமான தேசங்களைத் துன்புறுத்துவதைக் குறைக்கின்றன.

இன்றைய உலகின் மிகப்பெரிய வல்லரசான அமெரிக்கா "பலவீனன் தன்னைப் பலவான்" என்று சொல்வதைக் கசப்பான அனுபவமாக பெற்றுள்ளது. வட கொரியாவுடனான யுத்தத்திலும் மேலும் வட வியட்நாமுடனான மோதலிலும் உலக அபிப்பிராயத்தின் விளைவுகளுக்குப் பயந்து அமெரிக்கா

முழுமையான யுத்தத்தை நடத்த இயலாமல் போனது. சாத்தியமற்ற சூழலில் அதிக நன்மதிப்பை இழக்காமல் இருக்க விரும்பி, அமெரிக்கா சாந்தமாக வியட்நாமிலிருந்து கொஞ்சம் கொஞ்சமாகப் பின்வாங்கியது. பெரிய உலக வல்லரசுகளின் பொருளாதாரத்தை, சிறிய எண்ணெய் வளம் நிறைந்த நாடுகள் நெருக்கிப் பிடித்திருப்பதும் இந்த அடையாளத்தின் மற்றுமொரு நிறைவேறுதலாகும்.

பலவீனமான தேசங்கள் "தன்னைப் பலவான்" என்று சொல்வது கிறிஸ்து திரும்பி வந்துவிட்டார் என்பதற்குக் கூடுதலான அடையாளமாகும்.

## 12. சமாதானமும் சவுக்கியமும்

"பூமியின்மேல் வரும் ஆபத்துகளுக்குப் பயந்து எதிர்பார்த்திருக்கிறதினால் மனுஷருடைய இருதயம் சோர்ந்துபோம். சமாதானமும் சவுக்கியமும் உண்டென்று அவர்கள் சொல்லும்போது, . . . அழிவு சடிதியாய் அவர்கள் மேல் வரும் . . ." - லூக்கா 21:26, 1தெசலோனிக்கேயர் 5:3.

பயமுள்ள தேசங்கள் சமாதானத்திற்காக மாநாடுகளில் கூக்குரலிட்டும்கூட, அதினால் எந்தப் பிரயோஜனமும் இல்லை என்பது, இது "கர்த்தருடைய நாள்" என்பதை அடையாளப்படுத்துகின்றது. "கர்ப்பவதியானவளுக்கு வேதனை வருகிறதுபோல" உபத்திரவங்களானது அவர்கள் மீது சடுதியாய் வருகிறது.

1907 - ஆம் ஆண்டில் சர்வதேச வழக்குகளை நடுநின்று தீர்த்துவைப்பதற்காக நெதர்லாந்தின் ஹேக் (Hague, Netherlands) நகரில் சர்வதேச நீதிமன்றம் அமைக்கப்பட்டது. யுத்தமானது சட்டவிரோதமாக்கப்பட்டது. "சமாதானமும் சவுக்கியமும்" உறுதி செய்யப்பட்டன. பின்பு முதலாம் உலகப் போரானது உலகத்தையே அசைத்து, வரலாற்றில் முன் ஒருபோதும் இல்லாத ஒரு தாக்கத்தை ஏற்படுத்தியது; அதினால் ஒட்டுமொத்த உலக அமைப்பும் சீர்குலைய ஆரம்பித்தது. 1938 - இல் நெவில் சேம்பர்லைன் (Neville Chamberlain) செக்கோஸ்லோவாக்கியாவின் (Czechoslovakia) ஒரு பகுதியை ஹிட்லருக்கு விட்டுக்கொடுத்து அவரைச் "சமாதானப்படுத்தி", இங்கிலாந்துக்குத் திரும்பி "நமது நாட்களில் சமாதானம்" என்று அறிவித்தார். சிறிது காலத்திற்குப் பிறகு, இரண்டாம் உலகப் போரில் தேசங்கள் சிக்கின.

இரண்டாம் உலகப் போரின் முடிவிலிருந்து, ஐக்கிய நாடுகள் சபை அளவிலும், தேசங்களுக்கு இடையேயான பேச்சுவார்த்தைகளிலும், இத்தகைய சமாதான முயற்சிகளின் தீவிரமானது இதற்கு முன் எந்தத் தலைமுறையினரும் கண்டதில்லை. ஆனாலும் கொரியா, வியட்நாம், ஆசியா, ஆப்பிரிக்கா, மத்திய கிழக்கு போன்ற இடங்களில் போர் மற்றும் திடீர் அழிவானது தொடர்ந்து வெடித்தது. சோவியத் யூனியனின் வீழ்ச்சியுடன் பனிப்போர் (Cold War) முடிவுக்கு வந்தது. அமெரிக்கா மற்றும் சோவியத் யூனியன் (Soviet Union) ஆகிய இரண்டு வல்லரசுகளுக்கு இடையே இனியும் விரோதம் இல்லை. உலகம் இப்போது சமாதானமாக இருக்கும் என்று தோன்றியது. பின்னர் டெசர்ட் ஸ்டார்ம் (Desert Storm) மற்றும் யூகோஸ்லாவியா இனப் போர்கள் (Yugoslavian ethnic) போன்ற சிறிய போர்கள் வெடித்தன. ரஷ்யா மீண்டும் வல்லரசாக எண்ணப்படக்கூடிய நிலைக்கு மாறும் என்று வேதவசனங்களும் குறிப்பிடுகின்றன. முன் ஒருபோதும் இல்லாத இந்த சமாதான முயற்சிகளானது, கிறிஸ்துவின் பிரசன்னத்தை (Presence) நிரூபிக்கின்றன.

## 13. இதுவரைக்கும் சம்பவித்திராத உபத்திரவம்

"ஏனெனில், உலகமுண்டானதுமுதல் இதுவரைக்கும் சம்பவித்திராததும், இனிமேலும் சம்பவியாததுமான மிகுந்த உபத்திரவம் அப்பொழுது உண்டாயிருக்கும். அந்நாட்கள் குறைக்கப்படாதிருந்தால், ஒருவனாகிலும் தப்பிப்போவதில்லை . . ." மத்தேயு 24:21,22.

இதுவரைக்கும் சம்பவித்திராத இந்த உபத்திரவமானது, கிறிஸ்துவினுடைய பரோசியாவின் (Parousia) (வருகை அல்ல, பிரசன்னம்) அடையாளமாகும். இந்த "மகா உபத்திரவத்தின்" போது கிறிஸ்து காணக்கூடாதவராய் வந்திருக்கிறார் என்பதை விழிப்புள்ள கிறிஸ்தவர்கள் உணர்கிறார்கள். எனவே இது "ஒரு இரகசிய எடுத்துக்கொள்ளப்படுதலுக்கும்", அவருடைய வெளிப்படையான வருகைக்கும் இடையே உள்ள ஏழு வருட காலத்திற்குப் பொருந்தாது.*

*"ஏழு வருட உபத்திரவம்" பற்றின பெயர்சபையினுடைய கோட்பாட்டின் விரிவான விளக்கத்திற்கு, பின்னிணைப்பு - B (Appendix-B) -ஐ பார்க்கவும்.

இதுவரைக்கும் சம்பவித்திராத இத்தகைய உபத்திரவங்கள் நிறைந்த ஒரு யுகத்தில் நாம் இருக்கிறோம் என்பதை வரலாற்றாசிரியர்கள் ஒப்புக்கொள்கிறார்கள். உதாரணமாக:

> தற்போதிருக்கிற ஒரு மேலான இடத்திலிருந்து பின்னோக்கிப் பார்க்கும் போது, முதலாம் உலகப் போரானது வெடித்து, இருபதாம் நூற்றாண்டின் "உபத்திரவக் காலத்தைத்" துவக்கி வைத்தது. . . அதிலிருந்து நம்முடைய நாகரிக வாழ்க்கை முறையானது எந்த வகையிலும் இன்னும் எழுச்சிப் பெறவில்லை. கடந்த அரை நூற்றாண்டு காலத்தின் அனைத்து கொந்தளிப்புகளும் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ 1914 -ஆம் ஆண்டுக்கும் சாரஜெவோவுக்கும் (Sarajevo) பின்னோக்கிச் செல்கின்றன: அதாவது இரண்டு உலகப் போர்கள், போல்ஷிவிக் (Bolshevik) புரட்சி, ஹிட்லரின் (Hitler) எழுச்சியும், வீழ்ச்சியும், தூர கிழக்கு மற்றும் அருகாமை கிழக்கில் (Far and Near East) ஏற்படும் தொடர்ச்சியான கொந்தளிப்புகள், கம்யூனிஸ்ட் உலகத்திற்கும் நமக்கும் இடையேயான ஆதிக்கப் போராட்டம். . . இவைகளைக் குறித்து, 1963 -ஆம் ஆண்டு டபுள்டே (Doubleday), N.Y. (New york) வெளியிட்ட பேரரசுகளின் வீழ்ச்சி (The Fall of the Dynasties) என்ற புத்தகத்தில் பக்கம் 16-இல் எட்மண்ட் டெய்லர் (Edmond Tylor) என்பவர் எழுதுகிறார்.

இருபதாம் நூற்றாண்டின் போர்களில் 100 மில்லியன் மக்கள் கொல்லப்பட்டதை நாம் கண்டுள்ளோம், ஆனால் இதுவரைக்கும் சம்பவித்திராத போர்களானது, இந்த மகா உபத்திரவத்தின் ஒரு அம்சம் மட்டுமேயாகும்.

கிறிஸ்துவினுடைய பிரசன்னத்தின் (Presence) விளைவாக, உபத்திரவங்கள் எங்குமுள்ளது. அது முன் ஒருபோதும் இல்லாத வகையில் பரவலாகவும் தீவிரமாகவும் உள்ளது.

**மக்கள் தொகை அதிகரிப்பு :** கி.பி 1650 - க்கு முன்னதாக ஒவ்வொரு 1000 வருடங்களுக்கும் மக்கள் தொகையானது இரு மடங்காகியது; 1850-இல் (200 வருடங்கள் கழித்து) இரு மடங்காகியது; 1930 - இல் (வெறும் 80 வருடங்கள் கழித்து) மீண்டும் இரு மடங்காகியது; 1965 - இல் (வெறும் 35 வருடங்கள்

கழித்து) மீண்டும் இரு மடங்காகியது; 1990 - இல் உலக மக்கள் தொகையானது 5.5 பில்லியனாக இருந்தது. கி.பி.2000 - இல் இது 1 பில்லியனாக அதிகரிக்கும். ஆண்டுதோறும் 15 மில்லியன் வரை மக்கள் பட்டினியால் இறக்கின்றனர். 30 மில்லியன் அகதிகளும் 100 மில்லியன் வீடற்றவர்களும் உள்ளனர். நாய்கள் மற்றும் பூனைகளுக்கு உணவளிப்பதற்காக, ஆண்டுதோறும் 900 மில்லியன் டாலர்களுக்கு மேல் அமெரிக்கர்கள் செலவழித்துக்கொண்டிருக்கின்ற அதே நேரத்தில், மூன்றாம் உலக நாடுகளில் (Third World Countries) (பொதுவாக இது வளர்ந்து வரும் நாடுகளைக் குறிக்கின்றது) ஒவ்வொரு நாளும் 40,000 குழந்தைகள் பட்டினியால் இறக்கின்றனர்.

**மாசுபடுதல்:** அமெரிக்கா உலக மக்கள் தொகையில் 5 சதவீதம் மட்டுமே கொண்டுள்ளது, ஆனால் ஆண்டுதோறும் 290 மில்லியன் டன் நச்சுக் கழிவுகளை வெளியேற்றுகிறது, உலகின் எண்ணெயில் 26 சதவீதத்தை பயன்படுத்துகிறது, உலகின் நைட்ரஜன் ஆக்சைடுகளில் 26 சதவீதத்தை வெளியேற்றுகிறது, உலகின் கார்பன்-டை-ஆக்சைடு கசிவுகளில் 22 சதவீதத்தை ஏற்படுத்துகிறது. திடக் கழிவுகள், கதிரியக்க மற்றும் நச்சுக் கலந்த இரசாயனக் கழிவுகளானது, நமது ஆறுகளையும் ஏரிகளையும் கடல்களையும் மாசுபடுத்துகின்றன. வாகனப் புகை மற்றும் தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறுகிற, காற்றை மாசுபடுத்தும் பொருட்களானது, நோயை உருவாக்குகின்றன. ஒவ்வொரு ஐந்து வருடங்களுக்கும் சுவாச நோய்களால் ஏற்படும் இறப்புகள் இரட்டிப்பாகின்றன. ஓசோன் படலம் குறைவதால் ஏற்படும் தோல் புற்றுநோயானது, விரைவாக அதிகரித்து வருகின்றது. அமில மழை நமது காடுகளை அழிக்கின்றது, அதினால் "புவி வெப்பமயமாதல்" (Global Warming) ஏற்படும். இந்தப் "பசுமை இல்ல விளைவானது" (Green House Effect), துருவ பனிப்பாறைகளை உருகச் செய்து, கடல்நீர் மட்டம் உயரவும், நூறாயிரக்கணக்கான மைல் தூரத்திற்கு அதிகமான மக்கள் தொகை கொண்ட கடலோர நிலங்களை அழிக்கவும் கூடும் (இது 2 பில்லியன் மக்களை பாதிக்கிறது). மேலும் இது வெப்பநிலை மாற்றங்களை மிகப்பெரிய அளவில் அதிகரிக்கும். இது உயிருக்கு ஆபத்தான வறட்சிகளையும் வெப்ப அலைகளையும் தூண்டி, (நமது மத்திய மேற்கு நாடுகளைப் போன்ற) "உணவுப் பொருள் உற்பத்தி நிலத்தை" தரிசு பாலைவனமாக மாற்றும். கடுமையான உணவுப் பற்றாக்குறை ஏற்படும். பெரிதும் மதிக்கப்படக்கூடிய வேர்ல்ட்வாட்ச் (WorldWatch) நிறுவனத்தின் தலைவரான லெஸ்டர் ஆர். பிரவுன் (Lester R.Brown) என்பவர், "நேரம் குறைந்து கொண்டு வருகிறது" என்று கூறுகிறார். "முந்தின தலைமுறையினர் எப்பொழுதும் எதிர்காலத்தைப் பற்றிக் கவலைக்கொண்டிருந்தனர் ஆனால் நம்முடைய பிள்ளைகள் சுதந்தரிக்கப்போகும் பூமியானது, வாழ்வதற்கு ஏற்றதாக இருக்குமா என்பதைத் தீர்மானிக்கும் முடிவுகளை எதிர்கொள்ளும் முதல் தலைமுறையினர் நாம்தான்." மக்கள் தொகை பெருக்கமானது, புவி வெப்பமடைதலின் தாக்கத்தை துரிதப்படுத்தி அதிகப்படுத்தக்கூடும் என்று விஞ்ஞானிகள் இப்பொழுது கவலைப்படுகின்றனர். (நியூயார்க் டைம்ஸ், ஜனவரி 18, 1990). பல நாடுகளில் பொருளாதாரப் பேரழிவை ஏற்படுத்தும் தீவிர காலநிலை மாற்றங்களானது, உயிர்வாழ்வதற்கான போர்களைத் தூண்டக்கூடும்.

**குற்றமும் வன்முறையும்:** குற்றமும் வன்முறையும் தொடர்ந்து அதிகரித்து வருகின்றன. தெருவில் உள்ள "சிறுவனுக்கும்" தானியங்கி ஆயுதங்கள் எளிதாகக் கிடைக்கின்றன. ஒவ்வொரு நாளும் சுமார் 1,00,000 துப்பாக்கிகள் அமெரிக்கப் பள்ளிகளுக்குள் கொண்டு செல்லப்படுகின்றன. பெரிய நகரங்களில், மாணவர்கள் பள்ளிக்குள் நுழையும்போது ஆயுதங்களுக்கான சோதனையில் ஈடுபடுகின்றனர், மேலும் ஆயுதம் ஏந்திய காவல் துறையினர் பள்ளி அறைகளில் ரோந்து செல்கின்றனர். சகல இனத்தவர், பிரிவினர் மற்றும் வாழ்க்கை முறைகளைக் கொண்ட இளம் பருவத்தினரிடையே, மிகக்கொடூரமான குற்றங்கள் அதிகரித்துள்ளன. ஒரு காலத்தில் கொள்ளையர்கள் ஒரு நபரைக்

கொள்ளையிட்டு ஓடிவிடுவார்கள். இப்பொழுதோ, இவர்கள் அவர்களை அடித்து, வன்கொடுமை செய்து கொலை செய்கிறார்கள். 1990-ஆம் ஆண்டில் நியூயார்க் நகரில் 2200-க்கும் மேற்பட்ட கொலைகள் நடந்தன. மேலும் நியூயார்க்கில் ஒவ்வொரு 2 ½ வாரங்களுக்கு ஒரு குழந்தை, பெற்றோரால் கொலை செய்யப்படுகின்றன. அமெரிக்காவில் ஆண்டுதோறும் மூன்று மில்லியனுக்கும் அதிகமான மனைவிகள் கொடுமைப்படுத்தப்படுகிறார்கள்.

**போதைப் பொருட்கள்:** பெரிய இலாபங்கள் அதிக ஊழலை உண்டாக்குவதால், போதை மருந்து போரில் (Drug War) நாம் தோல்வியடைகிறோம். 1989- ஆம் ஆண்டில் அமெரிக்காவின் பெரும்பாலான இரசாயன நிறுவனங்கள் 18.5 மில்லியன் பவுண்டு இரசாயனங்களை, தென் அமெரிக்காவில் உள்ள "மறைமுக நிறுவனங்களுக்கு" விற்றனர், அவர்கள் இந்த இரசாயனங்களை போதைப்பொருள் கடத்தல்காரருக்கு விற்றனர். அமெரிக்காவில் தீவிரமாக போதைப்பொருள் பயன்படுத்துபவர்கள் 2.2 மில்லியன் நபர்கள் உள்ளனர். நியூயார்க் நகரத்தில் மட்டுமே 40 நபர்களில் ஒருவர், தீவிரமாக போதைப்பொருள் பயன்படுத்துபவராக இருக்கும்போது, நாடு முழுவதும் 100 நபர்களில் ஒருவர் தீவிரமாக போதைப்பொருள் பயன்படுத்துகிறார்கள். சாதாரணமாக பயன்படுத்துபவர்களின் எண்ணிக்கையானது கணிசமாக அதிகரித்துள்ளது. குற்றங்களின் எண்ணிக்கை அதிகரிப்பதில் ஆச்சரியம் ஏதும் இருக்கின்றதா? நியூயார்க் நகரத்தில் போதைப்பொருள் உபயோகிப்பவர்களில் 70 சதவீதம் செல்வந்தர்கள் ஆவார்கள். ஒவ்வொரு நாளும், போதைக்கு அடிமையாகக்கூடிய குழந்தைகள் ஆயிரம் பிறக்கின்றன.

**பொருளாதார சீர்குலைவு:** 3 டிரில்லியனுக்கும் அதிகமான திடுக்கிடும் கடனுடனும், அபாயகரமான அயல்நாட்டு வணிக ஏற்றத்தாழ்வுடனும் அமெரிக்காவானது 1990-களில் காலடி எடுத்துவைத்தது. சேமிப்பு மற்றும் கடன் நிறுவனங்கள் (S & L Associations) முழுமையான சரிவின் விளிம்பில் இருந்தன; வணிக வங்கிகள் கடுமையான சிக்கலில் இருந்தன; காப்பீட்டு நிறுவனங்கள் தோல்வியடைந்தன; வாரத்திற்கு 1300 நிறுவனங்கள் திவால் நிலையை அறிவித்தன. பல தொழிற்துறை ஜாம்பவான்கள் திவாலானதை 1990 -கள் கண்டது.

1983-ஆம் ஆண்டில் உலகின் மிகப்பெரிய கடன் வழங்கும் நாடாக அமெரிக்கா இருந்தது. 1990-ஆம் ஆண்டில், அது மிகப்பெரிய கடன் வாங்கும் நாடாக மாறியது (C.Fred Bergsten, head of the INSTITUTE FOR INTERNATIONAL ECONOMICS, 1990). வாராந்திர கண்காணிப்பானது, அமெரிக்காவின் கடன் 4 டிரில்லியனுக்கும் அதிகமாக உயர்ந்துள்ளதைக் காட்டுகிறது. இது விரைவில் 5 டிரில்லியனைத் தாண்டும் என்று பல பொருளாதார வல்லுநர்கள் கணிக்கின்றனர். அமெரிக்கா இனியும், உலகின் போட்டியற்ற பொருளாதார வல்லரசு நாடாக இருக்கப்போவதில்லை.

2,500 சேமிப்பு மற்றும் கடன் நிறுவனங்களில் 1,000-க்கும் மேற்பட்டவைகள் காப்பாற்றப்பட வேண்டியிருந்தது. இது அதிக அபாயகரமானக் கடன்கள் மற்றும் தவறான நிர்வாகத்தின் தோல்வியைக் காட்டிலும் அதிகமானது. சேமிப்பு மற்றும் கடன் நிறுவனங்களின் தலைவர்கள், பெரிய அளவிலான பணத்தை மோசடி செய்துள்ளனர். தேர்தல் பிரச்சனைகளைத் தவிர்க்க அரசாங்க கட்டுப்பாட்டாளர்கள் உண்மைகளை மறைப்பதாகக் குற்றம் சாட்டப்படுகிறார்கள்.

உண்மையில் "யாதொரு ஜாதியாரும் தோன்றினது முதல் அக்காலமட்டும் உண்டாயிராத ஆபத்துக் காலத்தை" நமது சந்ததியினர் அனுபவித்து வருகின்றனர்.

இதுவரைக்கும் சம்பவித்திராத இந்த உபத்திரவமானது, கிறிஸ்துவின் வருகை சீக்கிரத்தில் நிகழக்கூடியது அல்ல, மாறாக அவர் ஏற்கெனவே வந்து விட்டார் என்பதற்கான அடையாளமாகும்.

## 14. தப்பியோடும் தேசங்கள் - மற்றுமொரு குறிப்பிடத்தக்க தீர்க்கதரிசனம்

"கர்த்தருடைய நாளை விரும்புகிறவர்களுக்கு ஐயோ! அதினால் உங்களுக்கு என்ன உண்டு? கர்த்தருடைய நாள் வெளிச்சமாயிராமல் அந்தகாரமாயிருக்கும். சிங்கத்துக்குத் தப்பினவனுக்குக் கரடி எதிர்ப்பட்டதுபோலவும், அல்லது வீட்டுக்குள்ளே வந்து சுவரின்மேல் தன் கையை வைத்தபோது பாம்பு அவனைக் கடித்ததுபோலவும் இருக்கும்." - ஆமொஸ் 5:18,19.

ஆமோஸின் தீர்க்கதரிசனத்தில், தப்பியோடுகிற மனிதனானவன் இந்த இருண்ட "உபத்திரவக்காலத்தில்", உலகம் அனுபவிக்கின்ற அனுபவங்களை அடையாளப்படுத்துகிறான். நம்முடைய யுகத்தின் துவக்கத்தில், கிரேட் பிரிட்டன் நாடானது, பூமியில் மிகப்பெரிய சாம்ராஜ்யத்தை ஆட்சி செய்தது. இந்தத் தீர்க்கதரிசனத்தில் உள்ள சிங்கம் அதாவது பிரிட்டனின் தேசிய சின்னமானது, பலவீனமான தேசங்களை அடிமைப்படுத்தின (குடியேற்றின) வல்லமைமிக்க தேசத்தைப் பொருத்தமாக விளக்கியுள்ளது. காலனியாதிக்கத்தின் (colonialism) இறுக்கமான பிடியானது, உலகத்தை வேறொரு அரசாங்க முறைமைக்குத் தப்பிச்செல்ல வழிவகுத்தது.

ஆமோஸ் 5:19 -இல் குறிப்பிடப்பட்டுள்ள மனிதன், சிங்கத்திடமிருந்து தப்பி கரடிக்கு எதிர்ப்பட்டான். இது காலனித்துவத்தின் பேராசைக்கு முற்றிலும் வேறுபட்ட அரசாங்க முறைமையான கம்யூனிசத்தைக் குறிக்கின்றது! ஆமோஸின் தீர்க்கதரிசனத்தில் உள்ள "கரடியை" அடையாளப் படுத்தும் முன்னாள் சோவியத் யூனியனானது (Soviet Union) இந்த உபத்திரவக் காலத்தில் மனிதனுக்குப் பாதுகாப்பிற்கான மற்றொரு நம்பிக்கையை அளித்தது. மனிதனைக் காப்பாற்றத் தவறிய கம்யூனிசத்தின் தோல்வியானது, அதன் திடீர் வீழ்ச்சியால் அடிக்கோடிட்டுக் காட்டப்பட்டது. தேசியவாதம் என்கிற பாதுகாப்பிற்கான வேறொரு நம்பிக்கையைத் தேசங்கள் இப்போது தேடுகின்றன.

தேசியவாதத்தின் "வீட்டிற்குள்" நுழைவது என்பது, உலகிற்குச் சௌகரியமாக இருந்ததில்லை. உள்நாட்டுப் போர், பொருளாதார மந்தநிலை, புதிய "வெறுப்புக் குழுக்களின்" (hate group) எழுச்சி மற்றும் பிற பிரச்சனைகளால் போஸ்னியா (Bosnia), செர்பியா (Serbia), ஜெர்மனி (Germany) மற்றும் தேசியவாதத்தில் பாதுகாப்பைத் தேடும் பிற தேசங்களானது, பாதிக்கப்படுகின்றன. அதித் தீவிர தேசியவாதத்தின் பாதுகாப்பு (சபையும் அரசாங்கமும் மீண்டும் ஒன்றிணையுமா?) என்று நம்பப்படும் நிலையில் மக்கள், சுவரின்மேல் அவர்களுடைய கைகளை வைத்துக்கொள்கிறார்கள். மனித அரசாங்கத்தின் ஆதரவுள்ள கட்டமைப்பில் இளைப்பாற முயல்வது, பாம்பினால் கடிக்கப்படுவதில் போய் முடியும். ஒரு காலத்தில் தேசங்களை கிறிஸ்துவின் இராஜ்யம் என்று வஞ்சித்த பிசாசு மற்றும் சாத்தான் என்கிற அந்தப் பழைய பாம்பானது, (வெளி.12:9) அவர்களை மீண்டும் கடிக்கும். அப்பொழுது தேசங்களானது மகா உபத்திரவக் காலத்தில் யெகோவாவின் கடிந்துக்கொள்ளுதலை உணர்வார்கள்.

தப்பியோடும் தேசங்கள் என்பது "கர்த்தருடைய நாள்" அதாவது கிறிஸ்துவின் பிரசன்ன நாளின் அடையாளங்களில் ஒன்றாகும்.

கிறிஸ்து ஏற்கெனவே திரும்பி வந்துவிட்டார் என்பதை நிரூபிக்கும் கூடுதலான அடையாளங்கள் பல உள்ளன, ஆனால் நாம் கருத்தில் கொண்டவைகளானது ஒரு காரியத்தை நிலைநாட்டுவதற்கு

போதுமானதற்கும் அதிகமாக உள்ளது. "உம்முடைய பரோசியாவின் (Parousia) (பிரசன்னத்தின்-Presence) அடையாளங்கள் என்ன?" என்று சீஷர்கள் இயேசுவிடம் கேட்ட இந்த அடையாளங்கள் நம்முடைய நாட்களில் நிறைவேறியதைக் கண்டோம் என்ற உண்மையானது, "கண்கள் யாவும் அவரைக் காணும்" முன்னதாக இருக்கும் காலப்பகுதியான, கிறிஸ்துவின் இரகசியப் பிரசன்னக் (Presence) காலப்பகுதியில் நாம் வாழ்ந்துகொண்டிருக்கிறோம் என்பதை நிரூபிக்கின்றது.

## அத்தியாயம் 3

# ஏன் சில கிறிஸ்தவர்கள் அறியாமல் இருக்கிறார்கள்?

கிறிஸ்து திரும்பி வரும்போது, சில கிறிஸ்தவர்கள் அவருடைய பிரசன்னத்தை (Presence) அறியாமல் இருப்பார்கள் என்று லூாக்கா 21:34-36 வரையிலான வசனங்கள் எச்சரிக்கின்றன. இந்த "நாளானது" இரண்டு வகையான கிறிஸ்தவர்களின் மேல், ஒரு கண்ணியாக வருகிறது. சிலர் இந்த லவுகீக கவலைகளினால் பாரம் அடைந்திருக்கிறார்கள்; மற்றவர்கள் தேவனுடைய வார்த்தையையும் ஆவியையும் புறக்கணித்து அவர்களைத் தவறாக வழிநடத்தும் தலைவர்களைப் பின்பற்றுகிறார்கள்.

லூாக்கா 21:34-36 வரையிலான வசனங்களை வாசியுங்கள். இந்த அதிகாரம் கிறிஸ்துவின் இரண்டாம் பிரசன்னத்தின் (Presence) அடையாளங்களைப் பற்றி கூறுகிறது என்பதை நினைவில் வைத்துக்கொள்ளுங்கள். கர்த்தருடைய நாளானது விழித்திருக்கும் கிறிஸ்தவர்கள் மேல் வரும்போது, அவர்கள் எவ்வாறு அறிந்திருக்கிறார்கள் என்பதையும், அதேசமயம் உலகமும் விழித்திராத கிறிஸ்தவர்களும் எவ்வாறு அறியாமல் இருக்கிறார்கள் என்பதையும் கவனியுங்கள்.

"உங்கள் இருதயங்கள் பெருந்திண்டியினாலும் வெறியினாலும் லவுகீக கவலைகளினாலும் பாரமடையாதபடிக்கும், நீங்கள் நினையாத நேரத்தில் அந்த நாள் உங்கள்மேல் (கிறிஸ்தவர்கள்) வராதபடிக்கும் எச்சரிக்கையாயிருங்கள். பூமியிலெங்கும் குடியிருக்கிற அனைவர்மேலும் (உலகம்) அது ஒரு கண்ணியைப்போல வரும். ஆகையால் இனிச் சம்பவிக்கப்போகிற இவைகளுக்கெல்லாம் நீங்கள் தப்பி, மனுஷகுமாரனுக்கு முன்பாக நிற்கப் பாத்திரவான்களாக எண்ணப்படுவதற்கு, எப்பொழுதும் ஜெபம்பண்ணி விழித்திருங்கள் (உங்களையும் தீர்க்கதரிசன வார்த்தையையும் கவனியுங்கள்)" என்று நம்முடைய கர்த்தர் கூறுகிறார்.

King James Version -இல் 36-வது வசனத்திலுள்ள "நீங்கள் தப்பி . . பாத்திரவான்களாக எண்ணப்படுவதற்கு" என்ற வாக்கியமானது, மிகச் சரியான ஒரு மொழிபெயர்ப்பு அல்ல. பின்வரும் மொழிபெயர்ப்புகளை ஒப்பிட்டு பார்க்கவும்; Revised Standard Version -இல் "சம்பவிக்கவிருக்கும் இவைகளெல்லாவற்றிலிருந்தும் நீங்கள் தப்பிப்பதற்கு பலம் பெறும்படி ஜெபம் பண்ணுங்கள்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. ரோதர்ஹாம் - இல் "சம்பவிக்கப்போகிற இவைகளெல்லாவற்றிற்கும் நீங்கள் தப்பிப்பதற்கு முழு பலத்தைப் பெறும்படிக்கு விண்ணப்பம் செய்யுங்கள்" என்று மொழிபெயர்க்கப் பட்டுள்ளது. New English Bible - இல் "விரைவில் வரவிருக்கும் இந்த உபத்திரவங்களிலெல்லாம் நீங்கள் பாதுகாப்பாகக் கடந்து செல்ல பலம் பெறும்படிக்கு எப்பொழுதும் ஜெபம்பண்ணுங்கள்" என்று கூறுகிறது.

விழித்திருந்து ஜெபம் செய்யும் கிறிஸ்தவர்கள் அந்த "நாளின்" ஆரம்ப காலப்பகுதியின்போது உபத்திரவங்களைக் கடந்துச்செல்லப் பலத்தைப் பெறுவார்கள் என்பதே கிரேக்கச் சிந்தனையாக உள்ளது என்பதை இந்த மொழிபெயர்ப்புகள் சுட்டிக்காட்டுகின்றன. சபை வகுப்பார் இன்னும் பூமியில்தான் உள்ளார்கள் என்பதைக் கவனியுங்கள். கர்த்தர் உங்களை விடுவிக்கப்போகிற அனுபவத்திற்காக பலம் அவசியமில்லை, ஆனால் உபத்திரவத்தில் கிறிஸ்தவர்கள் எதிர்கொள்ளப் போகும் ஆபத்துக்களைத் தாங்குவதற்குக் கர்த்தர் பலம் கொடுக்கிறார். இருப்பினும், விழித்திராத கிறிஸ்தவர்கள் இந்த ஆபத்துகளால் சிக்கிக்கொள்கிறார்கள். இந்த வேதவசனத்தின் உட்கருத்தை நன்றாகக் கவனியுங்கள்.

விசுவாசமுள்ள கிறிஸ்தவர்கள் உபத்திரவக் காலத்தின் ஒரு பகுதியில் இங்கே இருக்கிறார்கள், ஆனால் அவர்கள் கர்த்தரின் பலத்தால் தாங்கப்படுகிறார்கள்.

லூக்கா 21:36 - இல் King James Version - இல் "பாத்திரவான்களாக எண்ணப்படுவதற்கு" என்று மொழிபெயர்க்கப்பட்ட கிரேக்க வாரத்தையானது, மிகவும் நம்பகமான மூலப் பிரதிகளில் காணப்படவில்லை என்று வைன்ஸ் (Vines) அவர்களுடைய புதிய ஏற்பாட்டு வார்த்தைகளின் விளக்க அகராதி மற்றும் தேயர் (Thayer) அவர்களின் புதிய ஏற்பாட்டின் கிரேக்க - ஆங்கில அகராதியும் குறிப்பிடுகின்றன. அதற்குப் பதிலாக, "முழு பலம்" என்று பொருள்படும் கிரேக்க வார்த்தையான "Katischuo" காணப்படுகிறது. "தப்பிப் பிழைக்க" என்பது "பாதுகாப்புத் தேடுதல்" என்று பொருள்படும் கிரேக்க வார்த்தையான "ekpheugo" என்பதன் மொழிபெயர்ப்பாகும். "Katischuoekpheugo" என்பதற்கு "ஜெயம்கொள்ள அல்லது மேற்கொள்ள பலம் பெறுதல்" என்று தேயர் (Thayer) வரையறுக்கிறார்.

## உபத்திரவக் காலத்தின் ஒரு பகுதி வரை சபை ஜீவிக்கிறது

நாகூம் 1:5-8 வரையிலான வசனங்கள், இந்தச் சிந்தனையை உறுதிப்படுத்துகின்றன. 5-வது வசனம் பர்வதங்கள் அதிர்கிறது என்றும், மலைகள் கரைந்துபோகிறது என்றும், கர்த்தருடைய பிரசன்னத்தினால் (Presence) பூமியனைத்தும் எடுபட்டுப்போகும் என்றும் வெளிப்படுத்துகிறது. 6-வது வசனமானது, "அவருடைய உக்கிர கோபத்திலே தரிப்பவன் யார்?" என்று கேட்கிறது. 7 மற்றும் 8 ஆகிய வசனங்கள் இந்தக் கேள்விக்கு இவ்வாறாகப் பதிலளிக்கின்றன: "கர்த்தர் நல்லவர், இக்கட்டுநாளிலே அரணான கோட்டை; தம்மை நம்புகிறவர்களை அறிந்திருக்கிறார்." கர்த்தருடைய பிரசன்னத்தோடுகூட (Presence) வரும் "இக்கட்டு நாள்" என்பது (தானியேல் 12:1; செப்பனியா 1:14,15 - ஆகிய வசனங்களையும் பார்க்கவும்) சபையானது இன்னும் பூமியில் இருக்கின்றது என்பதைக் கண்டறிகின்றது. இந்த உபத்திரவத்தின்போது கர்த்தர் அவர்களின் அரணான கோட்டையாக இருக்கிறார்; அதேசமயம், 8 - வது வசனத்தில், அவர் தமது சத்துருக்களைப் புரண்டு வருகிற வெள்ளத்தோடும் இருளோடும் பின்தொடருகிறார்.

தற்போதைய உலகத்தை முடிவுக்குக் கொண்டுவரும் உபத்திரவக் காலத்தைப் பற்றி பேசுகிற சங்கீதம் 46:1-6 வரையிலான வசனங்களை ஆராயுங்கள். பூமி நிலைமாறும்போதும், மலைகள் நடுச்சமுத்திரத்தில் சாய்ந்துபோகும்போதும், அதின் ஜலங்கள் கொந்தளித்துப் பொங்கும்போதும், அதின் பெருக்கினால் பர்வதங்கள் அதிரும்போதும், சபையானது அதாவது 4- வது வசனத்தில் சொல்லப்பட்டுள்ள "தேவனுடைய நகரமானது" பூமியில் இன்னும் இருப்பதைக் காண்கிறோம். உபத்திரவத்தின்போது "அது ஏன் அசைக்கப்படுவதில்லை?" அது கிறிஸ்துவுடன் பரலோகத்தில் இருப்பதினாலா? இல்லை! அது இன்னும் பூமியில் இருக்கும்போதே "தேவன் அதின் நடுவில் இருக்கிறார்" என்பதினாலேயே ஆகும். சபை ஏற்கெனவே பரலோகத்திற்கு எடுத்துக்கொள்ளப் பட்டிருந்தால் இந்தப் பாதுகாப்பு அதற்குத் தேவையில்லை. ஆனால் சபையானது உபத்திரவக் காலத்தில் இன்னும் இங்கே இருக்கும்போது பாதுகாப்பு அதற்குத் தேவைப்படுகின்றது. தேவன் ஆரம்ப கட்டங்களில் அதைப் பாதுகாப்பது மட்டுமல்லாமல், கூடுதலாக அவர் "அதிகாலையிலே அதற்குச்

சகாயம் பண்ணுவார்". சபையினுடைய உயிர்த்தெழுதலின் மாற்றத்திற்கு முன்பு உபத்திரவத்தின் ஒரு பகுதியை மட்டுமே அது அனுபவிக்கும். இது "மிகுந்த உபத்திரவத்திலிருந்து வருகிற பரிசுத்தவான்களை" (திரள்கூட்ட வகுப்பார்) அடையாளப்படுத்த முடியாது, ஏனெனில் சபை வகுப்பார் மட்டுமே அதாவது கிறிஸ்துவின் மணவாட்டி வகுப்பார் மட்டுமே வேதாகமத்தில் தேவனுடைய நகரமாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளது (சங்கீதம் 46:5 மற்றும் வெளி. 21:2 ஆகிய வசனங்களை ஒப்பிடவும்).

வேதாகமத்தில் பயன்படுத்தப்படும் மலை என்ற வார்த்தையின் அர்த்தத்திலிருந்து சங்கீதம் 46 - இல் சொல்லப்பட்டுள்ள உபத்திரவத்தின் தன்மையைப் பற்றிய ஆழமான புரிதலைப் பெறலாம். பல இராணுவ வெற்றிகளின் காரணமாக பாபிலோன் தேசமானது, எரேமியா 51:24,25 - ஆகிய வசனங்களில் "கேடான பர்வதமே" (Destroying Mountain) என்று அழைக்கப்படுகிறது. இஸ்ரயேலை எதிர்த்த தேசங்களைப் பற்றிப் பேசும்போது, ஏசாயா 41:15 -இல் இஸ்ரயேல் "மலைகளை மிதித்து நொறுக்கி, குன்றுகளைப் பதருக்கு ஒப்பாக்கிவிடும்" என்று கூறுகிறார். தானியேல் 2:35,44,45 - ஆகிய வசனங்களில் தேவனுடைய இராஜ்யமானது "பெரிய பர்வதமாகவும், பூமியையெல்லாம் நிரப்பினதாகவும்" பேசப்படுகின்றது. கொந்தளிக்கும் கடலானது, மனுக்குலத்தின் அமைதியற்ற அல்லது ஒழுங்கின்மையான நிலையைக் குறிக்கும். சங்கீதம் 46, "அதின் ஜலங்கள் கொந்தளித்துப் பொங்கி, அதின் பெருக்கினால் பர்வதங்கள் அதிர்ந்தாலும்" மற்றும் "மலைகள் நடுச்சமுத்திரத்தில் சாய்ந்துபோனாலும்" என்று கூறும்போது, "மகா உபத்திரவமானது" சமுதாயத்தின் ஒழுங்கற்ற செயல்களால் தேசங்களின் அழிவுக்கு வழிவகுக்கும் என்று பொருள்படும்.

உபத்திரவத்தின் ஒரு பகுதியில் சபையானது இன்னும் இங்கே இருக்கும் என்பதற்கு, மத்தேயு 24:21 -ஆம் வசனமானது கூடுதலான ஒரு ஆதாரமாகும். மத்தேயு 24 -ஆம் அதிகாரம், கிறிஸ்துவின் விரைவான வருகையைக் குறிக்காமல், அவருடைய இரகசியப் பிரசன்னத்தைக் (Presence) குறிக்கின்ற தொடர்ச்சியான அடையாளங்கள் அல்லது நிகழ்வுகளைக் கொண்டுள்ளது என்பதை நினைவில் கொள்ளுங்கள். விசுவாசமுள்ள ஜாமக்காரர்கள் கிறிஸ்துவினுடைய பிரசன்னத்தின் (Presence) இந்த அடையாளங்களை உணர்ந்துகொள்வார்கள். மத்தேயு 24:21 - இல் சொல்லப்பட்டுள்ள இதுவரைக்கும் சம்பவித்திராத உபத்திரவக் காலமானது, கிறிஸ்துவினுடைய பிரசன்னத்தின் (Presence) அடையாளங்களில் ஒன்றாகப் பேசப்படுகின்றது. விசுவாசமுள்ள ஜாமக்காரர்கள் இந்த அடையாளங்களைக் காண்பார்கள். எனவே, உபத்திரவம் தொடங்கும்போது சபையின் ஒருபகுதியினர், இது கிறிஸ்துவினுடைய பிரசன்னத்தின் (Presence) அடையாளம் என்பதை பூமியிலிருந்தே உணர்ந்துகொள்வார்கள்.

இந்த வேதவசனங்கள், உபத்திரவத்தின் ஒரு பகுதியில் சபை இன்னும் பூமியிலிருக்கும் என்பதை வெளிப்படுத்துகிற சில வேத வசனங்கள் மட்டுமேயாகும்.

## உபத்திரவக் காலமானது ஏழு வருடங்களைக் கொண்ட ஒரு காலப்பகுதியா?

உபத்திரவக் காலத்தைக் குறித்து வேதாகமத்தில் பல்வேறு விதமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது:

"உலகமுண்டானதுமுதல் இதுவரைக்கும் சம்பவித்திராததும், இனிமேலும் சம்பவியாததுமான மிகுந்த உபத்திரவம்" மத்தேயு 24:21; "யாதொரு ஜாதியாரும் தோன்றினதுமுதல் அக்காலமட்டும்

உண்டாயிராத ஆபத்துக்காலம்" தானியேல்12:1; "இக்கட்டு நாள்", ஏசாயா 22:5; ஒபதியா 14; நாகூம் 1:7; ஆபகூக் 3:16; செப்பனியா 1:15; எசேக்கியேல் 7:7. இந்த உபத்திரவக் காலம் பற்றின வசனங்களில் எங்குமே, ஏழு வருடக் காலத்தைப் பற்றிக் குறிப்பிடப்படவில்லை என்பது கவனிக்கத்தக்கது. தானியேல் 9:24-27 வரையிலான வசனங்களை அடிப்படையாக வைத்து ஏழு வருட உபத்திரவக் காலம் என்று தவறாகப் புரிந்துகொள்ளப்பட்டது என்பதை பல அடிப்படைக் கோட்பாட்டாளர்கள் அறியாதிருக்கிறார்கள். இந்த வசனப்பகுதியானது, கிறிஸ்தவ யுகத்தை முடிவுக்குக் கொண்டுவருகிற "உபத்திரவத்தைக்" குறித்து ஒன்றும் சொல்வதற்கில்லை. (ஏழு வருட உபத்திரவக் கோட்பாட்டின் தோற்றம் மற்றும் வேதப்பூர்வ மதிப்பீடு பற்றிய விரிவான விளக்கத்திற்கு பின்னிணைப்பு- B (Appendix-B) - ஐ பார்க்கவும்.

## அத்தியாயம் 4

# "அவரோடே கூட எடுத்துக்கொள்ளப்படுதல்"

பவுல், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பிரசன்னத்தைப் (Presence) பற்றிக் கூறும்போது, அதை "நாம் நம்பியிருக்கிற ஆனந்த பாக்கியம்" என்று அழைத்தார் (தீத்து 2:13). நம்முடைய பிரியமான மணவாளனாகிய கிறிஸ்துவுடன் இறுதியாக ஒன்றிணைக்கப்படும்போது உண்மையிலேயே அது எவ்வளவு பாக்கியமான நம்பிக்கையாக இருக்கும்! விரைவில் யுத்தம் முடிவுக்கு வரும், வருத்தமும் வேதனையும் முடிவடையும். விரைவில் நாம் அவரை முகமுகமாகப் பார்த்து, நித்தியத்திற்கும் அவருடைய ஐக்கியத்தின் பிரசன்னத்தைப் (Presence) பகிர்ந்துகொள்ளும் சந்தோஷத்தை அனுபவிப்போம். கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்காக கிறிஸ்தவர்கள் நீண்ட காலமாகக் காத்திருந்தார்கள்; தாங்கள் மிகவும் நேசிக்கின்ற அவருடன் ஒன்றிணைக்கப்படும் தருணத்திற்காக அவர்கள் நீண்ட காலமாகத் தீவிரமாக ஜெபம் செய்திருக்கிறார்கள். பல பாடல்கள், இந்த மகிமையான நிகழ்வின் ஊக்கமளிக்கும் சிந்தனைகளுக்கு அடிப்படையாக இருந்துள்ளன. இந்த மகிழ்ச்சியான எதிர்பார்ப்பிலிருந்து உருவான ஒரு சொற்றொடர் "எடுத்துக்கொள்ளப்படுதல்" (Rapture) என்பதாகும். "எடுத்துக்கொள்ளப்படுதல்" (Rapture) என்ற வார்த்தையானது வேதாகமத்தில் காணப்படவில்லை என்பதை மனதில் கொள்வது நல்லது. இதன் விளைவாக, பிரபலமாக இருக்கின்ற "எடுத்துக்கொள்ளப்படுதல்" (Rapture) என்ற கோட்பாடானது உண்மையில் வேதப்பூர்வமானதா என்பதை நாம் தீர்மானிக்க வேண்டும். பரிசுத்தவான்களின் உயிர்த்தெழுதல் பற்றிய அனைத்து வேதவசனங்களையும் கருத்தில் கொள்ளும் போது, கிறிஸ்து திரும்பி வரும்போது "கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள்" எழுப்பப்படுகிறார்கள் என்பதையும்; பின்னர் அவருடைய திரும்பி வருதலுக்கும் அவருடைய இராஜ்யம் முழுமையாக ஸ்தாபிக்கப்படுவதற்கும் இடைப்பட்டக் காலத்தில், உயிரோடிருக்கும் பரிசுத்தவான்கள் ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் மரிப்பதினால் ஒவ்வொருவராக அவரிடத்தில் சேர்க்கப்படுகிறார்கள் என்பதையும் வெளிப்படுத்துகிறது.

## வேதவாக்கியங்கள் என்ன சொல்கின்றன?

1தெசலோனிக்கேயர் 4:16, 17 ஆகிய வசனங்கள் கிறிஸ்துவின் இரண்டாம் வந்திருத்தலின் போது, பரிசுத்தவான்களின் உயிர்த்தெழுதலை விவரிக்கின்றது. கிறிஸ்துவுக்குள் மரித்தவர்களின் உயிர்த்தெழுதலுக்கும், உயிரோடிருக்கும் பரிசுத்தவான்கள் எடுத்துக்கொள்ளப்படுவதற்கும் இடையே உள்ள கால வரிசையை கவனியுங்கள்.

> "ஏனெனில், கர்த்தர் தாமே. . . வானத்திலிருந்து இறங்கி வருவார்; அப்பொழுது கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள். பின்பு உயிரோடிருக்கும் நாமும் கர்த்தருக்கு எதிர்கொண்டுபோக, . .அவர்களோடேகூட எடுத்துக்கொள்ளப்பட்டு . ."

கிறிஸ்து தமது முதலாம் வருகைக்குப் பிறகிலிருந்து, மரணமடைந்த அதாவது மரணத்தில் நித்திரையடைந்த பரிசுத்தவான்களை, முதலாவது உயிர்த்தெழுப்புவார் என்று இந்த வேதப்பகுதி

தெளிவாகக் கூறுகின்றது. "பின்பு" [கிரேக்க மொழியில் "எபெய்தா" (epeita) - அதன் பின்னர்] உயிரோடிருக்கும் பரிசுத்தவான்கள் கர்த்தருக்கு எதிர்கொண்டுபோக "எடுத்துக்கொள்ளப்படுவார்கள்". "முதலாவது" மற்றும் "பின்பு" என்ற வேறுபாடானது கால அளவின் வித்தியாசத்தைக் குறிக்கின்றது. இந்தக் கால அளவின் வித்தியாசம் எவ்வளவு என்று பவுல் இங்கு கூறவில்லை, ஆனால் மற்ற வேதப்பகுதிகள் கூறுகின்றன. மற்றொரு முக்கியமான காரியத்தைக் கவனியுங்கள். "அவர்களோடேகூட எடுத்துக்கொள்ளப்படுதல்" என்பது நேரத்தைக் குறிக்காமல் மாறாக அவர்கள் ஒன்றாக இருக்கும் இடத்தைக் குறிக்கின்றது என்பது தெளிவாகின்றது. ஏனென்றால் "நாம் விழித்திருப்பவர்களானாலும், நித்திரையடைந்தவர்களானாலும் தம்முடனேகூட நாம் ஏகமாய்ப் பிழைத்திருப்போம்" என்ற 1 தெசலோனிக்கேயர் 5:10 ஆம் வசனத்தில் "ஹமா" (hama) என்ற அதே கிரேக்க வார்த்தையானது, "கூட" என்று மீண்டுமாக மொழிபெயர்க்கப்பட்டுள்ளது மற்றும் இது ஒரு இடத்தைக் குறிக்கின்றது என்பது தெளிவாகின்றது. எனவே 1தெசலோனிக்கேயர் 4:16,17 ஆகிய வசனங்களில் கிறிஸ்துவுக்குள் மரித்தவர்களும் உயிரோடிருக்கும் சபையும் ஒரே நேரத்தில் எடுத்துக்கொள்ளப்படுகிறார்கள் என்று எதுவும் குறிப்பிடப்படவில்லை.

1கொரிந்தியர் 15:51,52 ஆகிய வசனங்கள் பரிசுத்தவான்களுடைய உயிர்த்தெழுதலின் இரண்டு பகுதிகளை விவரிக்கின்றன. "நாமெல்லாரும் நித்திரையடைவதில்லை; ஆகிலும் கடைசி எக்காளம் தொனிக்கும்போது, ஒரு நிமிஷத்திலே, ஒரு இமைப்பொழுதிலே, நாமெல்லாரும் மறுரூபமாக்கப் படுவோம்." ( KJV ஆங்கில மொழிபெயர்ப்பில் "at" அதாவது "அந்நேரத்தில்" என்று மொழி பெயர்க்கப்பட்டுள்ளது; அது மிகச் சரியான மொழிபெயர்ப்பு அல்ல. ஆனால் ரோதர்ஹாம் (Rotherham) அதை நம்முடைய தமிழ் வேதாகமத்தில் உள்ளவாறு "During" அதாவது "போது" (அந்தக் காலப்பகுதியில்) என்று சரியாக மொழிபெயர்க்கிறார்). "கடைசி எக்காளம்" என்ற வாக்கியமானது, முந்தின எக்காளங்களும் இருக்கின்றது என்பதைக் குறிக்கின்றது. மற்ற எக்காளங்கள் வரிசையான ஏழு எக்காளங்களாக புதிய ஏற்பாட்டிலுள்ள வெளிப்படுத்தலில் மட்டுமே காணப்படுகின்றது. "இரகசிய எடுத்துக்கொள்ளப்படுதலின்" போது தொனிக்கக்கூடிய எக்காளமானது 1கொரிந்தியர் 15:51 -இல் சொல்லப்பட்டுள்ள எக்காளமாகும் என்றும், இரகசிய எடுத்துக்கொள்ளப்படுதலைத் தொடர்ந்து "ஏழு வருட உபத்திரவமானது" இருக்கும் என்றும், அதில் மற்ற நிகழ்வுகளுடன் சேர்ந்து வெளிப்படுத்தலில் எழுதியிருக்கிறபடியே ஏழு எக்காளங்களும் தொனிக்கும் என்றும் சிலர் தவறாக நம்புகிறார்கள். இருப்பினும், 1 கொரிந்தியர் 15:51-ஆம் வசனத்திலுள்ள எக்காளமானது, கடைசி எக்காளம் என்று அழைக்கப்படுவதால் அது வெளிப்படுத்தல் புத்தகத்தின் ஏழு எக்காளங்களில் கடைசி எக்காளத்தோடு ஒத்திருக்க வேண்டும். இந்தக் காரியமானது, முந்தைய ஆறு எக்காளங்களும் ஏற்கெனவே ஒலித்திருக்கும் என்று அர்த்தப்படுத்தும். ஏனெனில் இந்த ஆறு எக்காளங்களின் வெளிப்படையான தொனிப்பானது உலகளாவிய கவனத்தை ஈர்த்திருக்கும் என்கிறபடியால் இவைகளின் தொனிப்பானது, எழுதியிருக்கிறபடி வெளிப்படையான தொனிப்பு அல்ல என்பது தெளிவாகின்றது. எனவே, ஆறு எக்காளங்களும் அடையாளமானவை என்று நாம் நியாயமாக முடிவு செய்யலாம். மேலும் முதல் ஆறு எக்காளங்களும் அடையாளமானவை என்றால் ஏழாவது எக்காளமும் அடையாளமானதேயாகும். சத்தியத்தைப் பிரகடனப்படுத்துதல் என்பது எக்காளங்களின் அடையாள அர்த்தம் என்பதற்கான வேதப்பூர்வ ஆதாரமானது பின்னர் விவாதிக்கப்படும். கடைசி எக்காளம் தொனிக்கின்ற இந்தக் காலகட்டத்தில்தான் சபையின் உயிர்த்தெழுதலானது நிகழும், "கர்த்தருடைய நாள்" என்பது "எக்காளத்தின் நாளும்" ஆகும். செப்பனியா 1:15,16-ஆம் வசனமானது சத்தியத்தைப் பிரகடனப் படுத்துதல் என்கிற இந்த அடையாளமான எக்காளமானது, "கர்த்தருடைய நாள்" முழுவதும் தொனிக்கின்றது.

## "நாமெல்லாரும் நித்திரையடைவதில்லை, ஆகிலும் நாமெல்லாரும் மறுரூபமாக்கப்படுவோம்"

சிலர் கிறிஸ்துவின் திரும்பி வருதலுக்குப் பிற்பாடு நடக்கவிருக்கும் தங்களின் உயிர்த்தெழுதலுக்கு முன்பே, மரித்து நித்திரையில் இருப்பார்கள். இருப்பினும் கிறிஸ்துவின் பிரசன்னத்தின்போது (Presence) வாழும் கிறிஸ்தவர்கள் மரித்து நித்திரையடையாமல் ஒரு இமைப்பொழுதில் மறுரூபமாக்கப்படுவார்கள். மரிக்கும் அந்நொடியிலே, அவர்கள் ஒவ்வொருவரும் அழியாமையை அடையும்படி எழுந்திருப்பார்கள்.

கிறிஸ்து திரும்பி வந்திருக்கும்போது உயிரோடிருக்கும் பரிசுத்தவான்களுடைய உயிர்த்தெழுதலின் கால அளவை வெளிப்படுத்தல் 14:13-ஆம் வசனம் நமக்குக் கொடுக்கின்றது: "கர்த்தருக்குள் மரிக்கிறவர்கள் இதுமுதல் பாக்கியவான்கள்; அவர்கள் தங்கள் பிரயாசங்களை விட்டொழிந்து இளைப்பாறுவார்கள்; அவர்களுடைய கிரியைகள் அவர்களோடே கூடப்போம்..." இன்று வாழும் பரிசுத்தவான்கள் உட்பட, எல்லா பரிசுத்தவான்களும் இந்த வசனத்தில் "மரித்தவர்கள்" என்று கருதப்படுகிறார்கள்.

"நீங்கள் மரித்தீர்கள், உங்கள் ஜீவன் கிறிஸ்துவுடனே தேவனுக்குள் மறைந்திருக்கிறது". (கொலோசெயர் 3: 3) இந்த வசனத்தில் "மரித்தவர்கள்" என்று குறிப்பிடப்பட்டவர்களும் சரீரத்தில் மரிப்பார்கள். "இதுமுதல்" என்ற வார்த்தையின் மூலம் ஒரு குறிப்பிட்ட காலப்பகுதியானது சுட்டிக்காட்டப்படுகின்றது. அந்தக் குறிப்பிட்ட காலப்பகுதியானது கிறிஸ்துவின் திரும்பி வருதலாகும். முந்தின வசனங்கள் கிறிஸ்துவின் பிரசன்னத்தின்போது நடக்கும் நிகழ்வுகளை விவரிக்கின்றன; பின்னர் "இதுமுதல்" அதாவது கிறிஸ்துவின் பிரசன்னத்திலிருந்து (Presence) நடக்கின்ற ஒன்றைப்பற்றி வெளிப்படுத்தல் 14:13 -ஆம் வசனம் கூறுகிறது. அந்தக் காலப்பகுதியிலிருந்து மரிக்கின்ற பரிசுத்தவான்கள் பாக்கியவான்கள், ஏனென்றால் அவர்கள் சரீரத்தில் தங்கள் பிரயாசங்களை விட்டொழிந்து இளைப்பாறினாலும் மரணம் என்கின்ற நித்திரையில் அவர்கள் காத்திருக்க வேண்டிய அவசியமில்லை. அவர்கள் கர்த்தருக்கு எதிர்கொண்டுபோக எழுப்பப்படும்போது அவர்களுடைய "கிரியைகள்" உடனடியாக அவர்களோடே கூடப்போகும். இவ்வாறு இந்த வேதவாக்கியங்களானது, இந்தத் திரும்பி வந்திருத்தலின்போது நித்திரையடைந்த பரிசுத்தவான்களின் உயிர்த்தெழுதலையும்; பின்னர் மீதமுள்ள உயிரோடிருக்கும் பரிசுத்தவான்கள் ஒவ்வொருவரும் மரித்து "ஒரு இமைப்பொழுதில்" மறுரூபமாக்கப்படுகிற, தனிப்பட்ட உயிர்த்தெழுதலையும் போதிக்கின்றன என்பதை நாம் காண்கிறோம்".

## ஒரு பகுதியளவு மேற்கோளினால் வரும் பிரச்சனை

உயிரோடிருக்கும் பரிசுத்தவான்கள் ஆகாயத்தில் கிறிஸ்துவிடம் உடனடியாக சேர்க்கப்படுவதை நிரூபிக்க, நம் கர்த்தருடைய இந்தப் பெரிய தீர்க்கதரிசனத்திலுள்ள சில வசனங்களானது, அடிக்கடி பயன்படுத்தப்படுகின்றன. இருப்பினும், உயிரோடிருக்கும் பரிசுத்தவான்கள் பரலோகத்திற்கு எடுத்துச் செல்லப்படுவதற்கும், இந்த வசனங்களுக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை என்பதைக் காணலாம்.

> "அந்த இராத்திரியில் ஒரே படுக்கையில் படுத்திருக்கிற இரண்டுபேரில் ஒருவன் ஏற்றுக்கொள்ளப்படுவான், மற்றவன் கைவிடப்படுவான். திரிகை திரிக்கிற இரண்டு ஸ்திரீகளில் ஒருத்தி ஏற்றுக்கொள்ளப்படுவாள் மற்றவள் கைவிடப்படுவாள். வயலிலிருக்கிற இரண்டுபேரில் ஒருவன் ஏற்றுக்கொள்ளப்படுவான், மற்றவன் கைவிடப்படுவான் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்" லூக்கா 17:34-36.

இது ஒரு "பகுதியளவு மேற்கோளின்" ஆபத்திற்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும். இந்த வரையறுக்கப்பட்ட மேற்கோளின் அடிப்படையில் ஏற்றுக்கொள்ளப்படுகிறவர்கள் பரலோகத்திற்கு எடுத்துக்கொள்ளப்படுகிறார்கள் என்ற யோசனை வரலாம், ஆனால் 37- ஆம் வசனமானது இந்தச் சாத்தியக்கூறுகளை நிராகரிக்கின்றது:

> "அவர்கள் அவருக்குப் பிரதியுத்தரமாக: எங்கே, ஆண்டவரே, என்றார்கள். அதற்கு அவர்: பிணம் எங்கேயோ அங்கே கழுகுகள் வந்து கூடும் என்றார் (கிரேக்கத்தில் கழுகுகள் அல்லது பிணந்தின்னிக் கழுகுகள்)"

பல்வேறு சூழ்நிலைகளில் இரண்டு பேர் இருப்பார்கள் என்றும் அதில் ஒருவன் எடுத்துக் கொள்ளப்படுவான் என்றும், இயேசு கூறிய வார்த்தைகளானது, அவைகளைக் கேட்ட சீஷர்களின் பேராவலைத் தட்டியெழுப்பினது. அவர்கள் எங்கே எடுத்துச் செல்லப்படுவார்கள் என்று குறிப்பாகக் கேட்டார்கள். இயேசு தாம் திரும்பி வரும்போது அவர்கள் அவரோடுகூட எடுத்துக்கொள்ளப்படுவார்கள் என்று சொல்லவில்லை என்பதைக் கவனியுங்கள். "பிணம் எங்கேயோ அங்கே கழுகுகள் வந்து கூடும்" என்பதே அவருடைய பதிலாகும். இங்கே பிணம் என்பது இயேசுவின் சரீரத்தைக் குறிக்கிறது என்று சிலர் நினைக்கிறார்கள்.

இருப்பினும் பிணம் எங்கேயோ அங்கே கழுகுகள் வந்து கூடும் என்று மத்தேயு 24:28 -ஆம் வசனம் குறிப்பிடுகின்றது. பிணம் (கொல்லப்பட்ட உடல்) என்ற பயன்பாட்டை, யோபு 39:30-இல் கழுகைப் பற்றிய பாடமானது உறுதிப்படுத்துகின்றது. மேலும் இந்தச் சரீரமானது இயேசுவின் சரீரத்தை நேரடியாகக் குறிப்பதாக இருந்தால், கழுகுகளையும் நேரடியாக குறிப்பதாக இருக்கவேண்டும்.

மேலும் அது இந்த வசனப்பகுதியை அர்த்தமற்றதாக்கும். சரீரமும் கழுகுகளும் அடையாள அர்த்தம் கொண்டவையாகும். யோபு 39:27-30 வரையிலான வசனங்களில் காணப்படுகின்ற கழுகுகளின் இரண்டு பண்புகளை அடிப்படையாக வைத்து இயேசு இந்தப் பாடத்தை போதிக்கிறார் என்பது வெளியரங்கமாகின்றது. ஒன்று, கழுகுகள் தூரத்திலிருந்தே அவற்றின் இரையைப் (உணவை) பார்க்கும் திறன்; மற்றொன்று, இந்த உணவைப் பெறுவதற்காகத் தொலைதூரத்திற்கும் செல்ல அவைகள் தயாராக இருக்கும் என்பதாகும் - பிணம் (இரை) எங்கேயோ அங்கே கழுகுகளும் இருக்கும். இந்த விஷயத்தில் உண்மையுள்ள கிறிஸ்தவர்களை வேதம் கழுகுகளுடன் ஒப்பிடுகின்றது. அவர்கள் தூரத்திலிருந்தே ஆவிக்குரிய உணவைக் காணவோ அல்லது பகுத்தறியவோ திறன் பெற்றவர்களாவார்கள். மேலும், அதைப் பெறுவதற்காக அவர்கள் நீண்ட தூரம் பயணம் செய்வார்கள்.

## ஒரு கொழுமையான விருந்து

லூக்கா 17:34-36 வரையிலான வசனங்களின் இந்தப் பாடம் அழகானது. லூக்கா 17 மற்றும் மத்தேயு 24 ஆகிய அதிகாரங்களானது, நம்முடைய கர்த்தரின் மாபெரும் தீர்க்கதரிசனத்தின் குறிப்புகள் என்பதை நினைவில் கொள்ளுங்கள்; அதில் அவர் தமது பரோசியாவாகிய (Parousia) பிரசன்னத்தின் (Presence) அடையாளங்களைக் கொடுத்தார். கிறிஸ்துவின் திரும்பி வருதலின் அந்தக் கணப்பொழுதில் உயிரோடிருக்கும் சபையானது எடுத்துக்கொள்ளப்பட முடியாது. ஏனென்றால் அவர்கள் கிறிஸ்துவினுடைய பிரசன்னத்தின் (Presence) அடையாளங்களை உணர்ந்துகொண்டு இங்கே பூமியில் இருப்பார்கள். ஆனால் திரும்பி வந்தக் கர்த்தருடனான அவர்களின் உறவு ஆசீர்வதிக்கப்பட்டதும் தனித்துவமானதுமாகும்.

வெளிப்படுத்தல் புத்தகத்தில் இரண்டு மற்றும் மூன்று ஆகிய அதிகாரங்கள் ஏழு சபைகளை விவரிக்கின்றன. வேதாகமத்தை நம்பும் பல கிறிஸ்தவர்கள் இவை கிறிஸ்தவ யுகம் முழுவதும் சபையின் ஏழு நிலைகளைக் குறிக்கின்றன என்ற கருத்தைக் கொண்டுள்ளனர். பிலதெல்பியா அல்லது ஆறாம் கால சபைக்கு, "இதோ, சீக்கிரமாய் வருகிறேன்" (வெளி 3:11) என்று கர்த்தர் கூறினார். ஆனால் லவோதிக்கேயா அல்லது ஏழாம் கால சபைக்கோ "வாசற்படியிலே நின்று தட்டுகிறேன்; ஒருவன் என் சத்தத்தைக்கேட்டு, கதவைத் திறந்தால், அவனிடத்தில் நான் பிரவேசித்து, அவனோடே போஜனம்பண்ணுவேன், அவனும் என்னோடே போஜனம்பண்ணுவான்" (வெளி. 3:20) என்று கர்த்தர் கூறுகிறார்.

சபையினுடைய சரித்திரத்தின் ஆறாம் காலத்தின் முடிவிலே, கர்த்தர் சமீபமாய் வருகிறார் ("இதோ, நான் சீக்கிரமாய் வருகிறேன்"). ஆனாலும் கர்த்தர் மெய்யாகவே, ஏழாம் அல்லது லவோதிக்கேயா கால சபையின்போது வந்துவிட்டார். உதாரணமாக ஒருவன் நம்முடைய கதவைத் தட்டுகிறானென்றால், அவன் நம்மைக் காண இனிமேல் வரப்போவதில்லை, மாறாக அவன் ஏற்கெனவே வந்துவிட்டான். கதவைத் தட்டுகிற சத்தத்தை நாம் கேட்க மறுக்கலாம் அல்லது கதவைத் திறக்கவும் மறுக்கலாம், ஆனாலும் அவன் வந்துவிட்டான் என்கிற உண்மையை இது அவமாக்காது.

திரும்பி வந்தக் கர்த்தருடனும் இவ்வாறாகவே உள்ளது. நம்முடைய கர்த்தரின் மாபெரும் தீர்க்கதரிசனத்தின் நிறைவேறிய அடையாளங்களானது, நாம் லவோதிக்கேயா அல்லது சபை வரலாற்றின் ஏழாம் சபையின் காலப் பகுதியில் இருக்கின்றோம் என்பதை நிரூபிக்கின்றன. அதாவது கர்த்தர் பிரசன்னமாக (Presence) இருக்கின்றதும் மற்றும் சபை வகுப்பாரில் சிலர் பூமியில் இங்கே மீந்திருக்கின்றதுமான காலப்பகுதியாகும். அவர் தட்டுகிற சத்தத்தைக் கேட்க நாம் மறுக்கலாம்; அதாவது அவருடைய பிரசன்னத்தின் (Presence) சத்தியத்தைப் புரிந்து கொள்ள மறுக்கலாம் அல்லது திரும்பி வந்தக் கர்த்தருக்காக நம் இருதயங்களின் கதவைத் திறக்கக்கூட மறுக்கலாம். இருப்பினும், நாம் அதை ஏற்றுக்கொண்டாலும் சரி இல்லாவிட்டாலும் சரி அவர் பிரசன்னமாகிவிட்டார் (Presence).

அதை ஏற்றுக்கொள்பவர்களுக்கு, மாபெரும் ஆவிக்குரிய விருந்து ஒன்று இருக்கின்றது. அவர்கள் திரும்பி வந்தக் கர்த்தருடன் ஒன்றாகப் போஜனம்பண்ணுகிறார்கள். கர்த்தர் திரும்பி வருகிறபோது இந்த சத்திய விருந்தானது பூமியில் இருக்கும் சபை வகுப்பாரின் ஆசீர்வதிக்கப்பட்ட பங்காக இருக்க வேண்டுமென்று லூக்கா 12:37-40 வரையிலான வசனங்களிலும் வெளிப்படுத்தப் படுகின்றது.

> "எஜமான் வரும்போது, விழித்திருக்கிறவர்களாகக் காணப்படுகிற ஊழியக்காரரே பாக்கியவான்கள். அவர் அரை கட்டிக்கொண்டு, அவர்களைப் பந்தியிருக்கச்செய்து, சமீபமாய் வந்து, அவர்களுக்கு ஊழியஞ்செய்வார் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். அவர் இரண்டாம் ஜாமத்திலாவது மூன்றாம் ஜாமத்திலாவது வந்து, அவர்கள் அப்படியே இருக்கக்கண்டால், அவ்வூழியக்காரர் பாக்கியவான்கள். திருடன் இன்ன நேரத்தில் வருவான் என்று வீட்டெஜமானுக்குத் தெரிந்திருந்தால், அவன் விழித்திருந்து, தன் வீட்டைக் கன்னமிடவொட்டான் என்று அறிந்திருக்கிறீர்கள். அந்தப்படியே நீங்கள் நினையாத நேரத்தில் மனுஷகுமாரன் வருவார், ஆகையால் நீங்களும் ஆயத்தமாயிருங்கள் என்றார்" லூக்கா 12:37-40.

விசுவாசமுள்ள சபையானது கர்த்தரின் திரும்பி வருதலுக்காக விழித்திருக்கும். அவர் திரும்பி

வரும்போது அவர்கள் அதை அறிவார்கள் மேலும் அவர், அவர்களுக்குச் சத்தியத்தின் சிறப்பான விருந்தளிப்பார். இந்த விருந்து பரலோகத்தில் இல்லை. பூமியிலுள்ள விழித்திருக்கும் ஊழியக்காரர்களால் இது கொண்டாடப்படுகின்றது. நம்முடைய கர்த்தர் திரும்பி வந்தபிறகு, ஒரு குறிப்பிட்ட காலத்திற்குப் பூமியில் மீந்திருக்கும் விசுவாசமுள்ள கிறிஸ்தவர்களின் ஆசீர்வதிக்கப்பட்ட நிலைமைகளை இந்த வசனங்கள் எடுத்துரைக்கின்றன. நாம் கருத்தில் கொள்கிற கழுகுகளின் இரண்டு வகையான பாடத்தின் ஒரு அம்சம் இதுவாகும். கர்த்தர் திரும்பி வரும்போது, கழுகு வகுப்பினராகிய விசுவாசமுள்ள கிறிஸ்தவர்கள் இந்தக் கொழுமையான ஆவிக்குரிய விருந்துக்குக் கூட்டிச் சேர்க்கப்படுவார்கள். இரண்டாவது பாடம் என்னவென்றால் கழுகு தூரத்திலிருந்து உணவைப் பார்த்து அதைப் பெற்றுக்கொள்வதற்காக நீண்ட தூரம் பயணிக்கும். வெளிப்படுத்தல் 18:1-5 வரையிலான வசனங்கள் இந்தப் பயணத்தில் என்ன இருக்கின்றது என்பதை வெளிப்படுத்துகின்றது.

## பாபிலோனை விட்டு ஓடுதல்

"இவைகளுக்குப்பின்பு, வேறொரு தூதன் மிகுந்த அதிகாரமுடையவனாய், வானத்திலிருந்து இறங்கிவரக்கண்டேன்; அவனுடைய மகிமையினால் பூமி பிரகாசமாயிற்று. அவன் பலத்த சத்தமிட்டு: மகா பாபிலோன் விழுந்தது! விழுந்தது! அது பேய்களுடைய குடியிருப்பும், சகலவித அசுத்த ஆவிகளுடைய காவல்வீடும், அசுத்தமும் அருவருப்புமுள்ள சகலவித பறவைகளுடைய கூடுமாயிற்று. அவளுடைய வேசித்தனத்தின் உக்கிரமான மதுவை எல்லா ஜாதிகளும் குடித்தார்கள்; பூமியின் இராஜாக்கள் அவளோடே வேசித்தனம்பண்ணினார்கள்; பூமியின் வர்த்தகர் அவளுடைய செல்வச்செருக்கின் மிகுதியினால் ஐசுவரியவான்களானார்கள் என்று விளம்பினான். பின்பு, வேறொரு சத்தம் வானத்திலிருந்து உண்டாகக் கேட்டேன். அது: என் ஜனங்களே, நீங்கள் அவளுடைய பாவங்களுக்கு உடன்படாமலும், அவளுக்கு நேரிடும் வாதைகளில் அகப்படாமலும் இருக்கும்படிக்கு அவளைவிட்டு வெளியே வாருங்கள். அவளுடைய பாவம் வானபரியந்தம் எட்டினது, அவளுடைய அநியாயங்களைத் தேவன் நினைவுகூர்ந்தார்" வெளிப்படுத்தல் 18:1-5.

முதலாம் வசனத்திலுள்ள வல்லமைமிக்கத் தூதனானவர், நம்முடைய திரும்பி வந்தக் கர்த்தரே என்று பலர் நம்புகிறார்கள். இங்கு "தூதன்" என்று மொழிபெயர்க்கப்பட்ட கிரேக்க வார்த்தையான "Aggelos" என்பது வெறுமனே தூதுவர் என்று பொருள்படும். வெளிப்படுத்தல் 20:1-3 வரையிலான வசனங்களும், வானத்திலிருந்து இறங்கி சாத்தானைக் கட்டிப்போட திரும்பி வந்தக் கிறிஸ்துவைக் குறிப்பிடும்போது "தூதன்" அல்லது "தூதுவர்" என்ற வார்த்தையைப் பயன்படுத்தியுள்ளது. வெளிப்படுத்தல் 18:1-5 வரையிலான வசனங்களுக்கு இணையான பகுதியாயிருக்கிற மல்கியா 3:1-3 வரையிலான வசனங்களானது நம்முடைய திரும்பி வந்தக் கர்த்தரை "உடன்படிக்கையின் தூதன்" என்று கூறுகின்றது.

வெளிப்படுத்தல் 18:1-ஆம் வசனத்தில் கூறப்பட்டுள்ள வல்லமைமிக்கத் தூதனாகிய நம்முடைய திரும்பி வந்தக் கர்த்தரானவர் தமது மகிமையினால் பூமியைப் பிரகாசமாக்குகிறார். ( பூமியை அதிரச் செய்கின்ற (சங்கீதம் 97:1,4) விஞ்ஞானம், மனிதாபிமானம், தத்துவம், மதம் போன்ற ஒவ்வொரு துறைகளிலுமுள்ள சத்தியத்தின் மாபெரும் தெளிவைக் காட்டும் பிற வேதப்பகுதிகளைப் பற்றிப் பின்னர் விவாதிப்போம்).

வெளிப்படுத்தல் 18:2-4 வரையிலான வசனங்கள், திரும்பி வந்தக் கர்த்தர் பாபிலோனுக்கு எதிராக ஒரு செய்தியை வைத்திருக்கிறார் என்பதை வெளிப்படுத்துகின்றது. பாபிலோன் ஒரு பொய்யான கிறிஸ்தவ அமைப்பு என்று பலரும் ஒப்புக்கொள்கிறார்கள். வெளிப்படுத்தல் 17:5 - ஆம் வசனமானது பாபிலோனின் தாய் மற்றும் சேய் அமைப்புகள் இரண்டையும் குற்றஞ்சாட்டுகின்றது. எனவே, பாபிலோன் பல பொய்யான கிறிஸ்தவ அமைப்புகளை அடையாளப்படுத்துகின்றது. அவளுடைய வாதைகள் வருவதற்கு முன்பாக வெளிப்படுத்தல் 18:2-4 வரையிலான வசனங்களில் பாபிலோனின் வீழ்ச்சிக்கும், வாதைகள் வரும்போது வெளிப்படுத்தல் 18:8 - இல் பாபிலோனின் அழிவிற்கும் இடையேயுள்ள வித்தியாசத்தைக் கவனியுங்கள். எனவே, கர்த்தர் பாபிலோனின் அழிவுக்கு முன்பு ஒரு குறிப்பிட்ட காலத்திற்குப் பிரசன்னமாக (Presence) இருக்கிறார். அவர் திரும்பி வருவதற்கு முன்பு, கர்த்தர் பாபிலோனைக் "குணமாக்கும்படிப்" பார்த்தார் (எரேமியா 51:9) ஆனால் அவள் குணமடைய மறுத்துவிட்டாள். அவர் திரும்பி வந்தபோதோ, அவர் அவளைத் தயவிலிருந்து தள்ளிவிட்டார். வெளிப்படுத்தல் 18:2-4 வரையிலான வசனங்களானது தெய்வீக தயவிலிருந்து பாபிலோன் விழுந்ததைக் குறிக்கின்றது. பின்னர் வெளிப்படுத்தல்18:4-இல் "என் ஜனங்களே, நீங்கள் அவளுடைய பாவங்களுக்கு உடன்படாமலும், அவளுக்கு நேரிடும் வாதைகளில் அகப்படாமலும் இருக்கும்படிக்கு அவளைவிட்டு வெளியே வாருங்கள்" என்று பாபிலோனில் உள்ள அனைத்து உண்மையான கிறிஸ்தவர்களுக்கும் நம்முடைய திரும்பி வந்தக் கர்த்தரானவர் ஒரு செய்தியை வைத்திருக்கிறார்.

இது கழுகினிடத்திலிருந்து கிடைக்கின்ற பாடமாகும். திரும்பி வந்தக் கர்த்தர் சத்தியத்தின் ஒரு மாபெரும் ஆவிக்குரிய விருந்தை வாக்களித்துள்ளார். இருப்பினும், அவர் திரும்பி வரும்போது பெரும்பாலான கிறிஸ்தவர்கள் பாபிலோனில் இருக்கிறார்கள். கழுகு தூரத்திலிருந்து உணவைப் பார்த்து அதைப் பெற்றுக்கொள்வதற்காக நீண்ட தூரம் பயணிப்பது போல விசுவாசமுள்ள கிறிஸ்தவர்கள் பாபிலோனில் ஆவிக்குரிய உணவின் பற்றாக்குறையை உணர்ந்து வெளியேறுவார்கள். திரும்பி வந்தக் கர்த்தரிடமிருந்து ஆவிக்குரிய விருந்தை அனுபவிப்பதற்கு அவர்கள் பாபிலோனை விட்டு ஓடிப்போக வேண்டும் (எரேமியா 51:6)

உயிரோடிருக்கின்ற பரிசுத்தவான்கள் படிப்படியாக கர்த்தரிடமாக எடுத்துக்கொள்ளப்படுகின்ற காலப்பகுதியான கிறிஸ்துவினுடைய பிரசன்னத்தின் (Presence) ஆரம்பகாலக் கட்டத்திற்கு, வெளிப்படுத்தல் 18:1-5 வரையிலான வசனங்களைப் பொருத்துவதற்கான உறுதிப்பாடானது, வெளிப்படுத்தல் 14-ஆம் அதிகாரத்தில் காணப்படுகின்றது. வெளிப்படுத்தல் 14:8 -ஆம் வசனத்தின் கால அளவும் செய்தியும் வெளிப்படுத்தல் 18:2 -ஆம் வசனத்திற்கு சரியாக ஒத்திருக்கின்றது.

> "வேறொரு தூதன் பின்சென்று: பாபிலோன் மகா நகரம் விழுந்தது! விழுந்தது! தன் வேசித்தனமாகிய உக்கிரமான மதுவைச் சகல ஜாதிகளுக்கும் குடிக்கக் கொடுத்தாளே என்றான்." வெளிப்படுத்தல்14:8.

பாபிலோன் தேவதயவிலிருந்து வீழ்ச்சியடையும் என்பதை பிரகடனப்படுத்துகின்ற இந்தக் காலப்பகுதியின்போதுதான் "கர்த்தருக்குள் மரிக்கிறவர்கள் இதுமுதல் பாக்கியவான்கள்" என்று வெளிப்படுத்தல் 14:13 -இல் சொல்லப்பட்டுள்ள "இதுமுதல்" என்ற காலப்பகுதியானது நமக்கு வழங்கப்படுகின்றது. ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் உயிரோடிருக்கும் சபையின் தனிப்பட்ட உயிர்த்தெழுதலை வெளிப்படுத்தல் 14:13 -ஆம் வசனம் நிரூபிக்கின்றது என்பதை நாம் ஏற்கெனவே கண்டுள்ளோம். நம்முடைய கர்த்தர் திரும்பி வரும்போது, உயிரோடிருக்கிற சபை வகுப்பாரின்

உயிர்த்தெழுதலானது படிப்படியாகவே நடக்கும், மாறாக கிறிஸ்துவோடு உடனடியாகக் கூட்டிச்சேர்க்கப் படுவது அல்ல என்பதற்கான மேலுமொரு சான்றாக, வெளிப்படுத்தல் 18:1-5 வரையிலான வசனங்கள் மற்றும் வெளிப்படுத்தல் 14-ஆம் அதிகாரம் ஆகியவற்றினுடைய காலஅளவு இசைந்திருக்கின்றது.

நம்முடைய கர்த்தருடைய பிரசன்னத்தின் (Presence) காலப்பகுதியில் தற்போது வாழ்ந்து கொண்டிருக்கின்ற அனைத்து கிறிஸ்தவர்களுக்கும் லூக்கா 17:34-37 வரையிலான வசனங்களின் பாடமானது முக்கியமானதாகும். 37 - ஆம் வசனத்தில் சொல்லப்பட்டுள்ள "கழுகுகள்" என்பது விசுவாசமுள்ள கிறிஸ்தவர்களை அடையாளப்படுத்துகிறது. 34 முதல் 36 வரையிலான வசனங்களில் சொல்லப்பட்டுள்ள படுக்கை, எந்திரம் மற்றும் வயல் முதலானவைகளும் அடையாளமாகச் சொல்லப்பட்ட வைகளேயாகும். அவை பெயர் கிறிஸ்தவ சபைகளில் உள்ள வெவ்வேறு ஆவிக்குரிய நிலைமைகளைக் குறிக்கின்றது. எந்திரம், வயல் மற்றும் படுக்கையில் இருந்து எடுத்துக்கொள்ளப்பட்டவர்கள் விசுவாசமுள்ள கிறிஸ்தவர்களைக் குறிக்கிறது. கர்த்தர் திரும்பி வரும்போது, அவர் தமது ஜனங்களை பாபிலோனிலிருந்து வெளியே அழைப்பார். கூர்மையான பார்வையைக்கொண்டதினாலும் இரைக்கான பசியின் காரணத்தினாலும் கழுகுகள் இரையினிடமாகக் கூட்டிச் சேர்க்கப்படுகிறதுபோல, அவர் அவர்களைத் தம்மிடத்தில் கூட்டிச் சேர்ப்பார். விழித்திருப்பவர்களும் தகுதியானவர்களும் ஏற்றுக் கொள்ளப்படுகிறார்கள், அதாவது, அவர்கள் பாபிலோனை விட்டு வெளியேறுவார்கள். மற்றவர்கள் பாபிலோனை அழிக்கின்ற வாதைகளை அனுபவிக்கவிடப்படுகிறார்கள். பிரசன்னமாகியிருக்கின்ற (Presence) நம்முடைய கர்த்தரால் இப்போது வழங்கப்படுகின்ற "ஏற்றக்கால சத்திய" உணவானது அதன்மூலமும் அதனிடமுமாகத் தமது பரிசுத்தவான்களைக் கூட்டிச் சேர்க்கிற அதினுடைய எதிர்பார்க்கப்பட்ட முடிவை அடைகின்றது. இது ஒரு மனிதனாலோ அல்லது பல மனிதர்களாலோ தங்களுக்குள்ளேயோ அல்லது ஒரு புதிய பிரிவிலேயோ கூட்டிச் சேர்க்கப்படுவது அல்ல மாறாக உண்மையான ஒரே எஜமானரும் போதகருமான கிறிஸ்துவினிடமே கூட்டிச் சேர்க்கப்படுவதாகும்.

## கூடுதலான ஒரு சான்று

படுக்கையில் இருப்பவன், எந்திரத்தில் இருப்பவள் மற்றும் வயலில் இருப்பவன் (லூக்கா 17:34-36) ஆகிய உருவகங்கள், உயிரோடிருக்கும் சபையானது பரலோகத்திற்கு எடுத்துக்கொள்ளப் படுவதைச் சித்தரிக்கவில்லை என்பதற்கு மேலும் ஒரு சான்றானது, லூக்கா 17:30-33 வரையிலான வசனங்களில் காணப்படுகின்றது.

> "மனுஷகுமாரன் வெளிப்படும் நாளிலும் அப்படியே நடக்கும். அந்த நாளிலே வீட்டின்மேலிருப்பவன் வீட்டிலுள்ள தன் பண்டங்களை எடுத்துக்கொண்டுபோக இறங்காமல் இருக்கக்கடவன்; அப்படியே வயலிலிருக்கிறவன் பின்னிட்டுத் திரும்பாமலும் இருக்கக்கடவன். லோத்தின் மனைவியை நினைத்துக்கொள்ளுங்கள். தன் ஜீவனை இரட்சிக்க வகைதேடுகிறவன் அதை இழந்துபோவான்; இழந்துபோகிறவன் அதை உயிர்ப்பித்துக்கொள்ளுவான்" லூக்கா 17:30-33.

உயிரோடிருக்கும் கிறிஸ்தவர்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டால் எடுத்துக்கொள்ளப்படுதலானது உடனடியாக நடக்கும் என்றும் அப்போது ஏற்றுக்கொள்ளப்பட்டவர்களுக்கு ஒரு முடிவை எடுக்கவோ அல்லது வேறு எதையாகிலும் செய்யவோ நேரம் இருக்காது என்றும் சிலர் நினைக்கிறார்கள். இக்காரியமானது 30- 33 வரையிலான வசனங்களுக்கு முரண்பாடாய் உள்ளது.

மனுஷகுமாரன் வெளிப்படும்போது வயலிலிருக்கிறவன் பின்னிட்டுத் திரும்புவதைத் தேர்வு செய்யவும் வீட்டின்மேலிருப்பவன் வீட்டிலுள்ள தன் பண்டங்களை எடுத்துக்கொண்டுபோவதற்கு வீட்டிற்குள் இறங்குவதை முடிவு செய்யவும் முடியும். இந்த வசனங்களானது லூக்கா17:34-37 ஆகிய வசனங்களோடு ஒன்றிணைகின்றன. அங்கே படுக்கையிலிருக்கிற ஒருவனும் எந்திரத்திலிருக்கிற ஒருத்தியும் வயலிலிருக்கிற ஒருவனும் கழுகுகளைப் போல ஒரு விருந்துக்குக் கூட்டிச் சேர்க்கப் படுகிறார்கள்.

கர்த்தர் திரும்பிவந்து அவர் தமது ஜனங்களைப் பாபிலோனிலிருந்து (பெயர் கிறிஸ்தவ சபைகள்) வெளியே அழைக்கும்போது வீட்டின்மேல் இருப்பவர்கள் (உயர்ந்த ஆவிக்குரிய நிலையிலுள்ள கிறிஸ்தவர்கள்) பாபிலோனின் சுமைகளை அவர்களோடு எடுத்துக் கொள்ளாமல் உடனடியாக வெளியேற வேண்டும். பாபிலோனிலிருந்து வெளியேறுதல் துவங்கியிருந்தாலும்கூட 32 - ஆம் வசனத்தில் லோத்தின் மனைவி செய்ததுபோல ஒருவரும் திரும்பிப் பார்க்கக்கூடாது.

இந்த வசனங்கள் இங்கே பூமியில் ஒரு பிரிவினையின் நிலையைக் குறிக்கின்றன என்பதை 33 - ஆம் வசனமானது மேலும் உறுதிப்படுத்துகின்றது. ஒருவர் எடுத்துக்கொள்ளப்பட்ட பின்னரும்கூட மற்றொருவருக்குத் திரும்பச் செல்ல வாய்ப்பு இருக்கிறது என்பதைக் கவனியுங்கள். கூட்டிச்சேர்க்கப் படுதல் துவங்கியப் பிறகு அவர் ஜீவனை இழக்கிறாரா அல்லது அதைக் காத்துக்கொள்கிறாரா என்பதை அவர் செயல்படும் முறையே தீர்மானிக்கும்.

இந்த அதிகாரத்தில் விவாதிக்கப்பட்ட மேற்கூறிய வேதவசனங்களிலிருந்து, அவர் திரும்பிவரும் தருணத்தில் உயிரோடிருக்கின்ற மற்றும் கிறிஸ்துவுக்குள் மரித்தவர்களுடைய உடனடி மாற்றம் மற்றும் உயிர்த்தெழுதலானது ஒரு வேதப்பூர்வமான கருத்து அல்ல என்பது தெளிவாகிறது. 1 கொரிந்தியர் 15: 50, 51 மற்றும் 1தெசலோனிக்கேயர் 4:16,17 ஆகிய வசனங்கள் இரண்டாம் வருகைக்கு முன்பு மரிக்கின்ற விசுவாசமுள்ள கிறிஸ்தவர்கள் அனைவரும், அவருடைய வருகையில் தங்கள் கர்த்தருடன் ஒன்றாக இருக்கும்படிக்கு எழுப்பப்படுவார்கள் என்பதை வெளிப்படுத்துகின்றன. அந்நேரத்திலிருந்து வெளிப்படுத்தல் 14:13-ஆம் வசனமானது, பூமியில் உயிரோடிருக்கிற சபையின் அங்கங்கள் தங்களின் பூமிக்குரிய ஓட்டத்தை முடிக்கும்போது, தங்களுடைய திரும்பிவந்தக் கர்த்தரிடமாக ஒவ்வொருவரும் தனித்தனியாக எடுத்துக்கொள்ளப்படுவார்கள் என்பதை வெளிப்படுத்துகிறது. திரும்பிவந்தக் கர்த்தர் பூமியில் விசுவாசமுள்ள கிறிஸ்தவர்களுக்கு மிகவும் விசேஷித்த ஒரு வழியில் தன்னை வெளிப்படுத்தி, ஆவிக்குரிய சத்தியத்தின் கொழுமையான விருந்தை வழங்குவார் என்பதைப் பல வேதவசனங்கள் காட்டுகின்றன.

## அத்தியாயம் 5

# "கண்கள் யாவும் அவரைக் காணும்"

கிறிஸ்துவின் இரண்டாம் வந்திருத்தலானது சபை வகுப்பார் மட்டுமே விசுவாசக் கண்களால் உணரக்கூடிய ஒரு இரகசியமான, அதாவது கண்ணுக்குத் தெரியாத பிரசன்னத்துடன் (Presence) துவங்குகிறது என்பதை வேதப்பூர்வமாக நிரூபித்தபின்பு, ஒட்டுமொத்த மனுக்குலத்திற்கான எதிர்கால வெளிப்பாடானது மனதளவிலான உணர்ந்துகொள்ளுதலாக இருக்குமா அல்லது நேரடிக் காட்சியாக இருக்குமா என்பதைப் பற்றிய கேள்வி நியாயமாக எழுகிறது.

இந்த விஷயத்தில் தொடர்புடைய இரண்டு வசனத்தொகுப்புகளுக்கு இடையே ஒற்றுமைக் காணப்பட வேண்டும். மத்தேயு 24:30-31 மற்றும் வெளிப்படுத்தல் 1:7 ஆகிய வசனங்களை நேரடியான அர்த்தத்தில் எடுத்துக்கொண்டால், ஒட்டுமொத்த மனுக்குலமும் திரும்பி வந்துள்ள கிறிஸ்துவை தங்கள் நேரடியான கண்களால் காண்பார்கள் என்று விளக்கமளிக்கப்படலாம். இதற்கு மாறாக பின்வரும் நான்கு வேதவசனங்கள் கிறிஸ்து பரலோகத்திற்கு ஏறிய பிறகு மனுக்குலம் அவரை நேரடியான கண்களால் காண முடியாது என்று தெளிவாகக் கூறுகின்றன.

(1) "இன்னும் கொஞ்சக்காலத்திலே உலகம் என்னைக் காணாது, நீங்களோ என்னைக் காண்பீர்கள்; நான் பிழைக்கிறபடியினால் நீங்களும் பிழைப்பீர்கள்" யோவான் 14:19. இயேசு தமது மரணம் மற்றும் உயிர்த்தெழுதலுக்கு சற்று முன்பு, உலகம் இனி ஒருபோதும் தன்னைக் காணாது என்று ஒரு தெளிவான அறிக்கையை இங்கே தருகிறார். பின்னர் அவர், "நீங்கள்" அதாவது அப்போஸ்தலர்களும் சபை வகுப்பார் அனைவரும் தன்னைக் காண்பார்கள் என்று கூறுகிறார். ஏன்? ஏனென்றால் "நீங்களும் பிழைப்பீர்கள்" அதாவது கிறிஸ்து உயிர்த்தெழுந்தது போலவே அவருடைய விசுவாசமுள்ள பின்னடியார்களும் அவருடைய இரண்டாம் வந்திருத்தலில் எழுப்பப்படுவார்கள். "உலகம் என்னைக் காணாது", கிறிஸ்து திரும்பி வரும்போது உலகம் அவரை நேரடியான கண்களால் காணாது, ஆனால் அவருடைய பின்னடியார்களோ அவர்களுடைய உயிர்த்தெழுதலின் சரீரங்களில் அவரோடுகூட எடுத்துக்கொள்ளப்படும்போது, அவரை நேரடியான கண்களால் காண்பார்கள். 1யோவான் 3:2

(2) எபிரெயர் 1:1-3 வரையிலான வசனங்கள் மகிமையடைந்த கிறிஸ்துவானவர் பிதாவினுடைய தன்மையின் சொரூபம் என்று கூறுகின்றது. கொலோசெயர் 1:15 - ஆம் வசனம் "அவர் அதரிசனமான தேவனுடைய தற்சுரூபமும்" என்று கிறிஸ்துவைப் பற்றிக் கூறுகிறது. இந்த வேதவசனங்கள் கிறிஸ்துவானவர் தேவனுடைய சமூகத்திற்கு ஏறிச்சென்றபோது அவர் பிதாவின் தற்சுரூபமாக இருந்தார் என்பதைக் காட்டுகின்றன. 1தீமோத்தேயு 6:16-ஆம் வசனத்திலிருந்து கிறிஸ்துவானவரும் "சேரக்கூடாத ஒளியில் வாசம்பண்ணுகிறவரும், (இனி) மனுஷரில் ஒருவரும் கண்டிராதவரும், காணக்கூடாதவருமாயிருக்கிறவர்" என்று அறிந்துகொள்கிறோம். கிறிஸ்துவானவர் பரலோக பிதாவின் மகிமையான தற்சுரூபமாக இருப்பதால் அவர் பரலோகத்திற்கு ஏறிச்சென்ற பிற்பாடு மனுஷரில் ஒருவரும் அவரைக் காணமுடியாது என்றால் மகிமையுடன் திரும்பி வந்துள்ள கிறிஸ்துவையும் மனுஷரில் ஒருவரும் காணமுடியாது.

(3) மகிமையடைந்த கிறிஸ்துவின் ஒரு சிறிய காட்சிக்கூட தர்சு பட்டணத்தானாகிய சவுலை

முழுமையாகக் குருடாக்கியது என்பதை அப்போஸ்தலர் 22:6-8 மற்றும் 11-14 வரையிலான வசனங்கள் வெளிப்படுத்துகின்றன. சவுலின் பார்வையை ஓரளவு மீட்டெடுப்பதற்காக அனனியா மூலம் தேவனுடைய வல்லமை தேவைப்பட்டது.

(4) லூக்கா 17:20-ஆம் வசனமானது இராஜாவாகிய இயேசு யாரும் கவனிக்காத வகையில் திரும்பி வருவார் என்பதை வெளிப்படுத்துகின்றது. லூக்கா 17-ஆம் அதிகாரமானது கிறிஸ்து தமது இராஜ்யத்தை ஸ்தாபிப்பதற்காக திரும்பி வருகின்ற அவரின் இரண்டாம் பிரசன்னத்தைப் (Presence) பற்றிப் பேசுகிறது. "தேவனுடைய ராஜ்யம் பிரத்தியட்சமாய் வராது" என்று 20-ஆம் வசனம் கூறுகிறது. கிறிஸ்துவின் வந்திருத்தலானது மனிதனுக்குப் பிரத்தியட்சமாக இருந்தால் தேவனுடைய இராஜ்யமும் பிரத்தியட்சமான விதத்தில் வந்திருக்கும்.

## நேரடியானதா அல்லது அடையாளமானதா?

மகிமையடைந்தக் கிறிஸ்துவானவர் அவருடைய திரும்பி வருதலின்போது காணக்கூடாத வராகவும், காணப்பட முடியாதவராகவும் இருப்பார் என்பதை இந்த நான்கு வேதவசனங்களும் காண்பிக்கின்றன. இருப்பினும் வெளிப்படுத்தல் 1:7 மற்றும் மத்தேயு 24:30 ஆகிய வசனங்கள் திரும்பி வந்தக் கர்த்தரை ஒட்டு மொத்த மனுக்குலமும் காண்பார்கள் என்று குறிப்பிடுவது போல் தெரிகிறது. காண்பார்கள் என்பது நேரடியான காட்சியினாலா அல்லது மனதளவிலான உணர்ந்துகொள்ளுதலினாலா? [உதாரணமாக, "நீங்கள் சொல்வது என்ன என்பதை என்னால் காண (புரிந்துக்கொள்ள) முடிகிறது" என்று நாம் சொல்வது போல] கிறிஸ்தவர்களாகிய நாம் நம்முடைய கண்ணோட்டங்களோடுப் பொருந்தாத வசனங்களின் தொகுப்பு ஒன்றையே அடிப்படையாகக் கொண்டு நமது முடிவுகளை எடுக்க முடியாது. "... சத்திய வசனத்தை நிதானமாய்ப் பகுத்துப் போதிக்கிறவனாயும் உன்னைத் தேவனுக்கு முன்பாக உத்தமனாக நிறுத்தும்படி ஜாக்கிரதையாயிரு" என்கிற இந்த ஒரு சவாலை நாம் ஏற்க வேண்டும். எந்தவொரு வேதாகம உபதேசமானாலும், அதன் சரியான கண்ணோட்டத்தைக் கண்டறிய முறையான ஒரே வழி என்னவென்றால், கொடுக்கப்பட்டத் தலைப்பிலுள்ள அனைத்து வேதவசனங்களையும் தொகுத்து, அவற்றை நிதானமாய்ப் பகுப்பதாகும், அதாவது அவற்றை ஒன்றிணைப்பதாகும். அப்போது தான் சரியான புரிதல் நமக்கு உறுதியாகக் கிடைக்கும். கொடுக்கப்பட்டத் தலைப்பிலுள்ள அனைத்து வேதவசனங்களும் ஒன்றாகக் கொண்டுவரப்படும்போது அவை ஒன்றிணையுமே தவிர, அவை முரண்படாது.

சில வேதவசனங்களானது, அடையாளமானவை என்பது பொதுவாக ஒப்புக்கொள்ளப்படுகிறது. உதாரணமாக, மத்தேயு 24:32 -ஆம் வசனத்தில் சொல்லப்பட்டுள்ள அத்திமரமானது இஸ்ரயேல் தேசத்தையும், லூக்கா 17:37-ஆம் வசனத்தில் சொல்லப்பட்டுள்ள கழுகுகளானது விசுவாசமுள்ள கிறிஸ்தவர்களையும் குறிக்கின்றன. ஒரு வாக்கியம் நேரடியானதா அல்லது அடையாளமானதா என்பதை எவ்வாறு தீர்மானிப்பது என்பதே பிரச்சனையாக இருக்கிறது. நம்முடைய அறிவுக்கு எதிராகவோ அல்லது வேதத்தின் தெளிவான அறிக்கைகளுக்கு முற்றிலும் எதிராகவோ நேரடியான ஒரு விளக்கமானது எப்பொழுதெல்லாம் இருக்கிறதோ, அந்தப் பகுதியை உருவகமாகவும், அதன் விளக்கத்தை வெளிப்படையாகவே தெளிவான மற்றும் நேரடியான வாக்கியங்களுக்கு இசைவாக உள்ள ஒரு அடையாளமாகவும் கருதப்பட வேண்டும் என்பதற்கு இது ஒரு நல்ல அறிகுறியாகும்.

யோவான் 14:19; 1 தீமோத்தேயு 6:16; அப்போஸ்தலர் 22:6-8, 11-14 மற்றும் லூக்கா 17:20 ஆகிய வசனங்களானது, திரும்பி வந்தக் கர்த்தர், மனிதக் கண்களால் காணக்கூடாதவராகவும்

காணப்பட முடியாதவராகவும் இருப்பார் என்கின்ற விளைவுக்கு ஏற்றபடியான தெளிவான வாக்கியங்கள் என்பதை நினைவில் கொள்ளுங்கள். இந்த வேதவசனங்களை மீண்டும் மீண்டுமாக படிக்கவேண்டும். அவை அடையாளமாக எடுத்துக்கொள்ள முடியாத நேரடியான வாக்கியங்களாகும்.

## நேரடியானதா அல்லது அடையாளமானதா?

மகிமையடைந்தக் கிறிஸ்துவானவர் அவருடைய திரும்பி வருதலின்போது காணக்கூடாத வராகவும், காணப்பட முடியாதவராகவும் இருப்பார் என்பதை இந்த நான்கு வேதவசனங்களும் காண்பிக்கின்றன. இருப்பினும் வெளிப்படுத்தல் 1:7 மற்றும் மத்தேயு 24:30 ஆகிய வசனங்கள் திரும்பி வந்தக் கர்த்தரை ஒட்டு மொத்த மனுக்குலமும் காண்பார்கள் என்று குறிப்பிடுவது போல் தெரிகிறது. காண்பார்கள் என்பது நேரடியான காட்சியினாலா அல்லது மனதளவிலான உணர்ந்துகொள்ளு தலினாலா? [உதாரணமாக, "நீங்கள் சொல்வது என்ன என்பதை என்னால் காண (புரிந்துக்கொள்ள) முடிகிறது" என்று நாம் சொல்வது போல] கிறிஸ்தவர்களாகிய நாம் நம்முடைய கண்ணோட்டங்களோடுப் பொருந்தாத வசனங்களின் தொகுப்பு ஒன்றையே அடிப்படையாகக் கொண்டு நமது முடிவுகளை எடுக்க முடியாது. ". . . சத்திய வசனத்தை நிதானமாய்ப் பகுத்துப் போதிக்கிறவனாயும் உன்னைத் தேவனுக்கு முன்பாக உத்தமனாக நிறுத்தும்படி ஜாக்கிரதையாயிரு" என்கிற இந்த ஒரு சவாலை நாம் ஏற்க வேண்டும். எந்தவொரு வேதாகம உபதேசமானாலும், அதன் சரியான கண்ணோட்டத்தைக் கண்டறிய முறையான ஒரே வழி என்னவென்றால், கொடுக்கப்பட்டத் தலைப்பிலுள்ள அனைத்து வேதவசனங்களையும் தொகுத்து, அவற்றை நிதானமாய்ப் பகுப்பதாகும், அதாவது அவற்றை ஒன்றிணைப்பதாகும். அப்போது தான் சரியான புரிதல் நமக்கு உறுதியாகக் கிடைக்கும். கொடுக்கப்பட்டத் தலைப்பிலுள்ள அனைத்து வேதவசனங்களும் ஒன்றாகக் கொண்டுவரப்படும்போது அவை ஒன்றிணையுமே தவிர, அவை முரண்படாது.

சில வேதவசனங்களானது, அடையாளமானவை என்பது பொதுவாக ஒப்புக்கொள்ளப்படுகிறது. உதாரணமாக, மத்தேயு 24:32 -ஆம் வசனத்தில் சொல்லப்பட்டுள்ள அத்திமரமானது இஸ்ரயேல் தேசத்தையும், லூாக்கா 17:37-ஆம் வசனத்தில் சொல்லப்பட்டுள்ள கழுகுகளானது விசுவாசமுள்ள கிறிஸ்தவர்களையும் குறிக்கின்றன. ஒரு வாக்கியம் நேரடியானதா அல்லது அடையாளமானதா என்பதை எவ்வாறு தீர்மானிப்பது என்பதே பிரச்சனையாக இருக்கிறது. நம்முடைய அறிவுக்கு எதிராகவோ அல்லது வேதத்தின் தெளிவான அறிக்கைகளுக்கு முற்றிலும் எதிராகவோ நேரடியான ஒரு விளக்கமானது எப்பொழுதெல்லாம் இருக்கிறதோ, அந்தப் பகுதியை உருவகமாகவும், அதன் விளக்கத்தை வெளிப்படையாகவே தெளிவான மற்றும் நேரடியான வாக்கியங்களுக்கு இசைவாக உள்ள ஒரு அடையாளமாகவும் கருதப்பட வேண்டும் என்பதற்கு இது ஒரு நல்ல அறிகுறியாகும்.

யோவான் 14:19; 1 தீமோத்தேயு 6:16; அப்போஸ்தலர் 22:6-8, 11-14 மற்றும் லூாக்கா 17:20 ஆகிய வசனங்களானது, திரும்பி வந்தக் கர்த்தர், மனிதக் கண்களால் காணக்கூடாதவராகவும் காணப்பட முடியாதவராகவும் இருப்பார் என்கின்ற விளைவுக்கு ஏற்றபடியான தெளிவான வாக்கியங்கள் என்பதை நினைவில் கொள்ளுங்கள். இந்த வேதவசனங்களை மீண்டும் மீண்டுமாக படிக்கவேண்டும். அவை அடையாளமாக எடுத்துக்கொள்ள முடியாத நேரடியான வாக்கியங்களாகும்.

## மனதளவிலான உணர்ந்துகொள்ளுதல்

திரும்பி வந்தக் கர்த்தரை மனுக்குலம் முழுவதும் காண்பார்கள் என்று கூறுகின்ற மற்ற

வேதவசனங்களின் தொகுப்பை (மத்தேயு 24:30-31 மற்றும் வெளி. 1:7) இப்பொழுது கவனிக்கலாம். அவை நேரடியானவையா அல்லது அடையாளமானவையா? இரண்டு வாக்கியங்களிலும், "காணும்" என்று மொழிபெயர்க்கப்பட்ட கிரேக்க வார்த்தையானது ஆப்டோமை (Optomai) ஆகும். W.E. வைன் (Vine) அவர்கள் எழுதிய புதிய ஏற்பாட்டு வார்த்தைகளின் விளக்க அகராதியிலிருந்து விளக்கம் பின்வருமாறு:

> ஆப்டோமை (OPTOMAI) - பார்க்க; அதாவது ஒருவேளை (a) வெளிப்புறமாக, பார்க்கப்படக்கூடிய நபர் அல்லது பொருளைக் குறிக்கும் அல்லது (b) உட்புறமாக, உள்மனதில் ஏற்படும் ஒரு உணர்வு அல்லது ஒரு ஆவிக்குரிய அனுபவம் அல்லது ஒரு மனதை ஆக்கிரமிக்கும் ஒரு செயலைக் குறிக்கும்.

எனவே ஆப்டோமை (Optomai) என்பது நேரடியான காட்சியையோ அல்லது மனதளவிலான உணர்ந்துகொள்ளுதலையோ குறிக்கும் என்பதை நாம் காண்கிறோம். மனதளவிலான உணர்ந்து கொள்ளுதலை சுட்டிக்காட்டுவதற்கு, வேதத்தில் கிரேக்க வார்த்தையான ஆப்டோமை (Optomai) எவ்வாறு பயன்படுத்தப்படுகின்றது என்பதற்கான எடுத்துக்காட்டுகள் பின்வருமாறு:

லூக்கா 3:5 - "மாம்சமான யாவரும் தேவனுடைய இரட்சிப்பைக் காண்பார்கள் (ஆப்டோமை)". ஒருவர் இரட்சிப்பை நேரடியான காட்சியாகக் காண்பதில்லை மாறாக அதைப் புரிந்துகொள்கிறார்.

யோவான் 1:51 - "பின்னும், அவர் (இயேசு) அவனை (நாத்தானியேல்) நோக்கி: வானம் திறந்திருக்கிறதையும், தேவதூதர்கள் மனுஷகுமாரனிடத்திலிருந்து ஏறுகிறதையும் இறங்குகிறதையும் நீங்கள் இதுமுதல் காண்பீர்கள் (ஆப்டோமை) என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்." நாத்தானியேல் இதை நேரடியான காட்சியாக ஒருபோதும் காணவில்லை. யாக்கோபின் ஏணியை மறைமுகமாகக் குறிப்பிட்டு, மனுஷகுமாரன் வானத்திற்கும் பூமிக்கும் இடையே தொடர்புக்கான நிஜமான ஏணியாக மாறுவார் என்று இயேசு கூறுகிறார்.

ஆப்டோமை (Optomai) என்ற கிரேக்க வார்த்தைக்கான மூன்று கூடுதலான எடுத்துக்காட்டுகள் பின்வருவனவற்றில் காணப்படுகின்றன:

- வெளிப்படுத்தல் 19:10 - "அவன் என்னை நோக்கி இப்படிச் செய்யாதபடிக்குப் பார் (ஆப்டோமை) என்றான்."
- மத்தேயு 27:4 - "அதற்கு அவர்கள்: . . . அது உன்பாடு என்றார்கள். ['அது உன்பாடு' என்றில்லாமல் 'நீயே அதை பார்த்துக்கொள் (ஆப்டோமை)' என்று தமிழில் சரியாக மொழிபெயர்த்திருக்க வேண்டும் ]."
- மத்தேயு 27:24 - " . . . நான் குற்றமற்றவன் . . . நீங்களே பார்த்துக்கொள்ளுங்கள் (ஆப்டோமை) என்றார்."

மத்தேயு 24:30,31 மற்றும் வெளிப்படுத்தல் 1:7 -இல் "காணும்" என்று மொழிபெயர்க்கப்பட்ட ஆப்டோமை (Optomai) என்ற வார்த்தையானது, மனதளவிலான உணர்ந்துகொள்ளுதலைச் சுட்டிக் காட்டுவதற்காக, அடையாளமான பொருளில் வேதாகமம் பயன்படுத்துகின்றது என்பதை இந்த வேதவசனங்கள் வெளிப்படுத்துகின்றன.

மத்தேயு 24:30,31 மற்றும் வெளிப்படுத்தல் 1:7 ஆகிய வசனங்களைக் கவனமாகப் படிக்கும்போது, அவைகள் அடையாளங்களுக்கு வழிவகுக்கும் பதங்களை (Terminology) வெளிப்படுத்துகின்றன, மேலும் உண்மையில், இவை வேதாகமத்தில் அடையாளங்களாக அடிக்கடிப் பயன்படுத்தப்படுகின்றன. உதாரணமாக, மத்தேயு 24:30,31 ஆகிய வசனங்களின் மேற்கோளில் அடையாளங்களாக அடிக்கடிப் பயன்படுத்தப்படும் வார்த்தைகளானது, இங்கே சாய்வான எழுத்துக்களில் (Italics) காட்டப்பட்டுள்ளன. "அப்பொழுது, மனுஷகுமாரனுடைய அடையாளம் வானத்தில் காணப்படும். அப்பொழுது, மனுஷகுமாரன் வல்லமையோடும் மிகுந்த மகிமையோடும் வானத்தின் மேகங்கள் மேல் வருகிறதைப் பூமியிலுள்ள சகல கோத்திரத்தாரும் கண்டு (Optomai) புலம்புவார்கள். வலுவாய்த் தொனிக்கும் எக்காள சத்தத்தோடே அவர் தமது தூதர்களை அனுப்புவார்; அவர்கள் அவரால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களை வானத்தின் ஒரு முனை முதற்கொண்டு மறுமுனைமட்டும் நாலு திசைகளிலுமிருந்துக் கூட்டிச் சேர்ப்பார்கள்."

இந்த வேதவசனத்தை நேரடியாக எடுத்துக்கொள்ள முடியாது. அதனுடன் இணங்கிவருகின்ற எந்தவொரு கருத்திற்கும் அடையாளமான விளக்கம் தேவைப்படுகின்றது. உதாரணமாக, சிலர் இந்த வேதவசனத்தை உயிரோடிருக்கும் பரிசுத்தவான்கள் கிறிஸ்துவுடன் வானத்திற்கு எடுத்துக்கொள்ளப் படுவார்கள் என்ற கருத்திற்கு பயன்படுத்துகிறார்கள். ஆனால் இங்கே மத்தேயு 24:30,31 - இல் அவர்கள் "வானத்தின் ஒருமுனை முதற்கொண்டு மறுமுனைமட்டும்" கூட்டிச் சேர்க்கப்படுகிறார்கள் என்று சொல்லப்படுகிறது. இதை நேரடியாகப் புரிந்துகொண்டால், கிறிஸ்து திரும்பி வரும்போது பரிசுத்தவான்கள் ஏற்கெனவே வானத்தில் இருப்பார்கள், மேலும் இந்த வேதவசனமானது, பரிசுத்தவான்கள் அந்த நேரத்தில் வானத்திற்கு எடுத்துக்கொள்ளப்படாமல், வானத்திலிருந்து வெளியே எடுக்கப்படுகிறார்கள் என்று போதிக்கும். இது மத்தேயு 24: 30,31 - இன் நேரடியான விளக்கத்தை நிராகரிக்கின்றது. அவர்கள் "நாலு திசைகளிலிருந்தும்" கூட்டிச் சேர்க்கப்படுகிறார்கள் என்றும் கூறுகின்றது. பரிசுத்தவான்கள் நான்கு நேரடியான திசைகளிலிருந்தும் கூட்டிச் சேர்க்கப் படுகிறார்களா? "எடுத்துக்கொள்ளப்படுதல்" (Rapture) என்ற கருத்தைப் போதிப்பவர்கள் இந்தச் சிக்கலை உணர்ந்து, நாலு திசைகள் என்பதையும் வசனம் 31-இல் உள்ள "வானம்" என்ற வார்த்தையையும், பூமி முழுவதிலுமிருந்து சபை வகுப்பார் கூட்டிச்சேர்க்கப்படுவர் என்று அடையாளப் படுத்துகிறார்கள். இருப்பினும், இது ஒரு பெரிய சிக்கலை முன்வைக்கின்றது. வசனம் 30-இல் "மனுஷகுமாரனுடைய அடையாளம்" வானத்தில் காணப்படும் மற்றும் "வானத்தின் மேகங்கள்மேல் வருகிறதையும்" குறிப்பிடும்போது மட்டும், அது நேரடியான அர்த்தம் கொண்டது என்று வலியுறுத்தி விட்டு, வசனம் 31 -இல் உள்ள "வானம்" என்ற வார்த்தையை, அது ஒரு அடையாள வார்த்தை என்று எந்த விதியின் மூலம் நாம் நம்முடைய விருப்பத்திற்கேற்ப அடையாளப்படுத்த முடியும்? மத்தேயு 24:30,31 ஆகிய வசனங்கள் நேரடியானதாகவோ அல்லது அடையாளமானதாகவோ இருக்க வேண்டும்; இது இரண்டாகவும் இருக்க முடியாது. நேரடியான பயன்பாடானது அர்த்தமற்றது; எனவே இரண்டு வசனங்களும் சீரான முறையில் அடையாள அர்த்தம் கொண்டதாகவே இருக்க வேண்டும்.

## மத்தேயு 24: 30,31 ஆகிய வசனங்களின் அடையாள அர்த்தம்

வானம் மற்றும் வானங்கள் ஆகியவை பெரும்பாலும் ஒழுங்கற்ற மத அமைப்புகளுக்கு அடையாளமாக உள்ளன (2பேதுரு 3:5-10; ஏசாயா 34:4,5; யோயேல் 2:9-11). காணுதல் என்பது மனதளவிலான உணர்ந்துகொள்ளுதலைக் குறிக்கக்கூடும் (லூக்கா 3:5; யோவான் 1:51; வெளி. 19:10;

மத்தேயு 27:4,24). யோயேல் 2:1,2 ஆகிய வசனங்களில் இருப்பது போல மேகங்கள் பெரும்பாலும் உபத்திரவத்தைக் குறிக்கின்றன; இது மத்தேயு 24:30,31 ஆகிய வசனங்களுக்கு இணையான வசனங்களாகும். தூதர்கள் என்ற வார்த்தையானது, அங்கெலோஸ் (Aggelos) என்ற கிரேக்க வார்த்தையிலிருந்து மொழிபெயர்க்கப்பட்டுள்ளது; இதற்குத் தூதுவர் என்பது நேரடியான அர்த்தமாகும் பெரும்பாலும் தேவனுடைய எந்தத் தூதுவரையும் இது குறிக்கும் (வெளி. 2 மற்றும் 3-ஆம் அதிகாரங்களில், சபைக்கான ஏழு தூதர்கள் அல்லது தூதுவர்கள் குறித்து சொல்லப்பட்டுள்ளது). எக்காளங்களானது பெரும்பாலும் சத்தியத்தின் பிரகடனத்தைக் குறிக்கப் பயன்படுகின்றன (1 கொரிந்தியர் 14:8; யோயேல் 2:1).

இந்த அடையாளங்களை மனதில் கொண்டோமானால், மத்தேயு 24: 30,31ஆகிய வசனங்களின் விளக்கமானது அர்த்தமுள்ளதாகின்றது. வசனம் 30-இல் கிறிஸ்துவின் திரும்பி வருதலின் முதல் அடையாளங்களில் அல்லது சான்றுகளில் ஒன்றானது, வானத்தில் இருக்கும் அதாவது ஒழுங்கற்ற மத அமைப்புகளில் இருக்கும் என்று இங்கே நமது எஜமான் கூறுகிறார். 29 - ஆம் வசனமானது வானத்தின் சத்துவங்கள் அசைக்கப்படுவதைப் பற்றி கூறுகிறது. தேவனை அறியமுடியாத புரட்சிகரமான (Agnostic revolution) தாக்கங்கள் தேவாலயங்களில் ஊடுருவப்பட்டன. அடிப்படைவாதிக்கும் நவீனத்துவ வாதிக்கும் இடையேயான போரின் விளைவானது, வானம் என்கிற மத உலகில் பெரும் பிளவை ஏற்படுத்தியுள்ளது. இரண்டாம் வாடிகனுக்குப் (Vatican II) பிறகு, கத்தோலிக்கமும் இதேபோல் அசைக்கப்படுகிறது. மனுஷகுமாரன் "வானத்தின் மேகங்களின்மேல்", அதாவது தேவாலயங்களை அசைத்துக் கொண்டிருக்கும் இந்த உபத்திரவத்தின்போது வருகிறார். லூக்காவின் குறிப்பானது, "ஜனங்களுக்குத் தத்தளிப்பும் இடுக்கணும்" உண்டாகிறது என்பதையும் உள்ளடக்குகின்றது. தேவாலயங்களிலும் தேசங்களிலும் நிலவுகின்ற இந்த உலகளாவிய உபத்திரவமானது, பூமியில் உள்ள அனைத்து ஜனங்களும் அதினால் புலம்பும் வரையிலும் அதின் தீவிரம் அதிகரிக்கும். இறுதியாக "அவர்கள் உபத்திரவத்தின் மேகங்களின்மேல் மனுஷகுமாரன் வருவதைக் காண்பார்கள் (உணர்ந்து கொள்வார்கள்)", அதாவது நமது கர்த்தருடைய திரும்பி வந்திருப்பதின் விளைவே, இந்த உபத்திரவம் என்பதை அவர்கள் உணர்வார்கள். மத்தேயு 24:30 - ஆம் வசனத்தில் சொல்லப்பட்டுள்ள வானங்கள் (பெயர் கிறிஸ்தவ சபைகள்) அசைக்கப்படுகிறபோது வசனம் 31 வெளிப்படுத்துகிறபடி திரும்பி வந்தக் கர்த்தர் "வலுவாய்த் தொனிக்கும் எக்காள சத்தத்தோடே அவர் தமது தூதர்களை (தூதுவர்களை) அனுப்புவார்; அவர்கள் அவரால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களை வானத்தின் (ஒழுங்கற்ற மத அமைப்புகள்) ஒரு முனை முதற்கொண்டு மறுமுனைமட்டும் . . . கூட்டிச்சேர்ப்பார்கள்." இதன் இணையான பகுதியான வெளிப்படுத்தல் 18:1-4 வரையிலான வசனங்கள், இந்த எக்காளமானது சத்தியத்தின் பிரகடனம் என்பதை மேலும் உறுதிப்படுத்துகின்றது. சத்தியத்தின் இந்த மாபெரும் பிரகடனத்தின் மூலம், தேவனுடைய உண்மையுள்ள ஊழியக்காரர்கள் பாபிலோனிலிருந்து கர்த்தருடைய ஜனங்களை வெளியே அழைப்பார்கள்.

## வெளிப்படுத்தல் 1:7 - ஆம் வசனத்தின் அடையாள அர்த்தம்

"இதோ, மேகங்களுடனே (உபத்திரவக் காலத்தில்) வருகிறார்; கண்கள் யாவும் அவரைக் காணும் (ஆப்டோமை, உணர்ந்துகொள்ளுதல்) (உபத்திரவம் தீவிரமடையும்போது, தேவனுடைய கோபாக்கினையின் நாள் வந்துவிட்டது என்பது வெளியரங்கமாகும்); அவரைக் குத்தினவர்களும் [அநேக தேசங்களின் படையெடுப்பிலிருந்து அவர்கள் விடுவிக்கப்படும்போது (எசேக்கியேல் 38,39;

சகரியா 12:10), உபத்திரவக் காலத்தின் இறுதி கட்டத்தில் யூத தேசமானது, கிறிஸ்துவின் பிரசன்னத்தை (Presence) விசேஷமாக உணரும்] பூமியின் கோத்திரத்தாரெல்லாரும் அவரைப் பார்த்து புலம்புவார்கள் (கோபாக்கினையின் நாள் தீவிரமடையும்போது அனைவரும் அதிகமான இடுக்கத்தையும் வேதனையையும் அனுபவிப்பார்கள்)."

இயேசுவை உண்மையிலேயே நேரடியாகக் குத்தினவர்கள், நீண்ட காலத்திற்கு முன்னதாகவே இறந்துவிட்டதால், வெளிப்படுத்தல் 1:7 -ஆம் வசனத்தை நேரடியான அர்த்தத்தில் எடுத்துக்கொள்ள முடியாது. "அவரைக் குத்தினவர்களும்" என்பது, உயிரோடிருக்கும் யூத ஜனங்களைக் குறிக்கும் அடையாளமாக இருந்தால், "மேகங்கள்" மற்றும் "கண்கள் யாவும்" அவரைக் காண்பதும் அடையாளமாகவே இருக்க வேண்டும்.

இவ்வாறு வேதாகமமானது தனக்குத்தானே முரண்படாது என்பதை நாம் காண்கிறோம். திரும்பிவந்தக் கர்த்தரை மனிதன் நேரடியாகப் பார்க்க முடியாது என்று பல வேதவசனங்கள் தெளிவாகக் கூறுகின்றன. இதற்கு இசைவாக, திரும்பிவந்தக் கிறிஸ்துவை மனுக்குலம் காணும் என்று குறிப்பிடும் சில வேதவசனங்கள் அடையாளமாகக் குறிப்பிடப்பட்டவையே; மேலும் அவைகள் கிறிஸ்துவினுடைய பிரசன்னத்தின் (Presence) மனதளவிலான உணர்ந்துகொள்ளுதலைக் குறிக்கின்றன.

[மத்தேயு 24:30,31 , வெளி. 1:7 மற்றும் "காணும்" என்ற வார்த்தையானது, திரும்பி வந்தக் கிறிஸ்துவின் மனதளவிலான உணர்ந்துகொள்ளுதலைக் குறிக்கின்ற, மற்ற அனைத்து வேதவசனங்களின் அடையாள விளக்கத்தினுடைய, விரிவான வேதப்பூர்வமான ஆதாரமானது பின்னிணைப்பு - C (Appendix - C) -இல் காணப்படும்]

## அத்தியாயம் 6

# பாவ மனுஷன்

அப்போஸ்தலனாகிய பவுல், தெசலோனிக்கேயருக்கு எழுதின தனது இரண்டாவது நிரூபத்தில் நம்முடைய கர்த்தரின் இரண்டாம் பிரசன்னத்திற்கு (Presence) முன்பாக இரண்டு நிகழ்வுகள் நடக்க வேண்டும் என்று காட்டுகிறார்:

(1) அப்போஸ்தலர்களின் உண்மையான விசுவாசத்திலிருந்து மாபெரும் விழுகை; மற்றும்

(2) பாவ மனுஷனாகிய அந்திக்கிறிஸ்துவின் வெளிப்பாடு (2 தெசலோனிக்கேயர் 2:3).

இந்த இரண்டு நிகழ்வுகளையும் அடையாளம் காணத் தவறுகின்ற, நம்முடைய கர்த்தரின் இரண்டாம் வருகையின் எந்த விளக்கத்தையும், தீவிரமாக கருத்தில் கொள்ளக் கூடாது. நம்முடைய கர்த்தர் ஏற்கெனவே திரும்பி வந்துவிட்டார் என்பது நிரூபனமாகிவிட்டது, இப்போது, பாவ மனுஷன் உண்மையில் வந்து, தீர்க்கதரிசன விளக்கத்தின் ஒவ்வொரு விவரத்தையும் நிறைவேற்றிக் கொண்டிருக்கிறான் என்பதைக் காணமுற்படுவோம்.

இருப்பினும், இந்தத் தீர்க்கதரிசனத்திற்கும் தற்போதிருக்கும் சிலக் கண்ணோட்டங்களுக்கும் இடையே உள்ள பொருத்தமின்மையை முதலில் நாம் கவனிக்கலாம். கர்த்தராகிய இயேசு முதலில் தமது பரிசுத்தவான்களை அழைத்துச் செல்ல இரகசியமாக வருகிறார் என்றும் பின்னர் பாவ மனுஷன் தோன்றுவான் என்றும் சிலர் கூறுகின்றனர். ஆரம்பகால சபையில் ஏற்பட்ட ஒரு தவற்றின் ஆய்வானது இந்த விஷயத்தில் நமக்கு கற்றுக்கொடுக்கிறது. பவுலின் காலத்தில் சில விசுவாசிகள், கிறிஸ்து ஒரு திருடனைப்போல கண்ணுக்குத் தெரியாதவராக வரவிருந்தார் என்பதை உணர்ந்து (1 தெசலோனிக்கேயர் 5:4, வெளி. 16:15) இயேசு ஏற்கெனவே வந்து விட்டார் என்றும் அதினால் கிறிஸ்துவுக்குள் மரித்தவர்களின் உயிர்த்தெழுதல் நிகழ்ந்துவிட்டது என்றும் முடிவு செய்தனர் (2 தெசலோனிக்கேயர் 2:1,2; 2 தீமோத்தேயு 2:18). இந்தத் தவறைச் சரிசெய்ய, "கிறிஸ்துவினுடைய நாள் வந்து விட்டதாக [கிரேக்கம், எனிஸ்டெமி (Enistemi)] சொல்லப்பட்டால், உடனே சஞ்சலப்படாமல் . . . இருங்கள். எவ்விதத்தினாலும் ஒருவனும் உங்களை மோசம்போக்காதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்; ஏனெனில் விசுவாச துரோகம் முந்தி நேரிட்டு, கேட்டின் மகனாகிய பாவமனுஷன் வெளிப்பட்டாலொழிய, அந்த நாள் வராது" (2 தெசலோனிக்கேயர் 2:2,3) என்று அறிவுறுத்த வேண்டியது பவுலுக்கு அவசியமாக இருந்தது. Revised Standard Version உடன் ஒப்பிடவும். அந்திக்கிறிஸ்து வெளிப்படுவது, கிறிஸ்துவின் கண்ணுக்குப் புலப்படாத பிரசன்னமாகுதலுக்கு முன்னதாகவே வருகிறது, மாறாக பின்பு அல்ல என்பதைக் கவனிக்கவும். பாவ மனுஷன் இரண்டு காரியங்களுக்கு முன்னதாக வருகிறான் என்று வசனங்கள் 1 மற்றும் 3 கற்பிக்கின்றன: (1) "நம்முடைய கர்த்தரின் வந்திருத்தல்;" மற்றும் (2) "நாம் அவரிடத்திலே சேரக்கப்படுதல்". பாவ மனுஷன் வெளிப்படுவதற்கு முன்பு கிறிஸ்தவர்கள் பரலோகத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும் சாத்தியத்தை இது நீக்குகிறது.

மேலும், அவர்கள் தங்கள் நேரடியான கண்களால் இயேசுவைக் கண்டார்களா அல்லது தங்கள் காதுகளால் நேரடியான எக்காள சத்தத்தைக் கேட்டார்களா அல்லது ஏராளமான கிறிஸ்தவர்கள்

திடீரென மறைந்துப் போவதைப் பார்த்தார்களா என்று அவர்களின் தவற்றை சரிசெய்ய முயற்சிப் பதற்காக, பவுல் இவ்வாறு கேட்கவில்லை என்பதைக் கவனிக்க வேண்டும். இத்தகைய வாதங்கள் பொருத்தமானதாக இருந்திருந்தால், பவுல் நிச்சயமாகவே அவற்றைப் பயன்படுத்தியிருப்பார். கண்ணுக்குத் தெரியாத பிரசன்னத்தின் (Presence) கருத்து சரியானது: கர்த்தருடைய நாள் உலகத்தின் மீது அமைதியாக திருடனைப்போல வரும், பலர் அறியாமல் அதினால் பிடிக்கப்படுவார்கள் (1 தெசலோனிக்கேயர் 5:2-4). அந்த நாளில் (ஆதிகால சபையின் காலத்தில்) விசுவாசிகளின் தவறானது அவர்கள் எதை எதிர்பார்க்க வேண்டும் என்பதில் அல்ல மாறாக எப்போது எதிர்பார்க்க வேண்டும் என்பதில் இருந்தது. கிறிஸ்துவின் திரும்பி வருதலைத் தங்களுடைய எல்லா நம்பிக்கைகளின் பலனாக மிகுந்த ஆர்வத்துடன் எதிர்பார்த்ததினால், அவர்கள் ஏங்கின கர்த்தர் வந்துவிட்டார் அல்லது சமீபத்தில் இருக்கிறார் என்று கூறுகின்ற எந்தப் போதனையையும் விமர்சனமின்றி ஏற்றுக்கொள்ளும் மனநிலையில் இருந்தனர்.

## அக்கிரமத்தின் இரகசியம்

2 தெசலோனிக்கேயர் 2:3-8 வரையிலான வசனங்களை மீண்டுமாக வாசிக்கலாம். வசனங்கள் 7 மற்றும் 8-இல் பவுல் "பாவ மனுஷனை" "அக்கிரமத்தின் இரகசியம்" என்று அழைத்து, அவன் என்று சொல்லாமல், "அது" என்று கூறுகிறார்; மேலும் ஏற்கெனவே அது அவருடைய நாட்களிலேயே நடந்துகொண்டிருந்த ஒரு கிரியையாக இருக்கின்றது என்று கூறுகிறார். இது சொல்லர்த்தமான மனிதனாக இருக்க முடியாது. அவ்வாறு இருந்தால், அவர் இப்போது கிட்டத்தட்ட இரண்டாயிரம் வயதுடையவராக இருந்திருப்பார். பவுல் "பாவ மனுஷனை" "அக்கிரமத்தின் இரகசியம்" என்று ஏன் அழைத்தார்? எபேசியர் 5:30-32, கொலோசெயர் 1:25,27 மற்றும் 1 கொரிந்தியர் 12:12-28 ஆகிய வசனங்களில் பவுல் காண்பித்த அழகான இரகசியத்தை நினைவில் கொள்ளுங்கள். "கிறிஸ்து என்ற சரீரமானது ஒரே அவயவமாயிராமல் அநேக அவயவங்களாயிருக்கிறது." மனிதனுடைய உடலானது பல அவயவங்கள் ஒன்று சேர்ந்திருப்பது போலவே, சபையானதும் கிறிஸ்துவின் சரீரமாகும். இதை வேறுபடுத்திக் காண்பித்ததில் உள்ள பவுலின் பாடமானது தெளிவாக உள்ளது. கிறிஸ்து என்ற சரீரத்தை உருவாக்குகிற, நீதியுள்ள அல்லது நீதிமானாக்கப்பட்ட விசுவாசிகளின் இரகசிய வகுப்பார் இருப்பது போலவே, அந்திக்கிறிஸ்துவை உள்ளடக்குகிற அக்கிரமத்தின் (தீமையான வேலைக்காரர்கள்) இரகசியமான வகுப்பாரும் இருக்கிறார்கள். வசனங்கள் 7 மற்றும் 8-இல் பவுல் பயன்படுத்திய வாக்கியங்களானது "பாவ மனுஷன்" மற்றும் "அக்கிரமத்தின் இரகசியம்" ஆகிய இரண்டும் ஒன்றுதான் என்பதை நிரூபிக்கின்றது.

## பாவ மனுஷனின் ஆரம்பம்

பாவ மனுஷனின் ஆரம்பத்தைக் கண்டறிய, நாம் பவுலின் காலத்திலிருந்தே துவங்க வேண்டும். தெசலோனிக்கே சபைக்கு எழுதிய அவர், அவர்களை எச்சரித்து கூறியதாவது: "அக்கிரமத்தின் இரகசியம் இப்பொழுதே கிரியைசெய்கிறது; ஆனாலும் தடைசெய்கிறவன் (Greek, restrains) நடுவிலிருந்து நீக்கப்படுமுன்னே அது வெளிப்படாது. நீக்கப்படும்போது, அந்த அக்கிரமக்காரன் வெளிப்படுவான்" 2 தெசலோனிக்கேயர் 2:7,8. Revised Standard Version உடன் ஒப்பிடவும். "கர்த்தருடைய சுதந்திரத்தை இறுமாப்பாய் ஆளுகிறவர்களாக" (1 பேதுரு 5:3) இருக்க வேண்டும் என்ற தலைவர்களுடைய இலட்சியங்களினாலும், இயேசு நியமித்த பலியின் பாதையைப் புறக்கணிக்கிற சிலருடைய, விருப்பத்தினாலும் அந்திக்கிறிஸ்துவின் கொள்கையானது செழிப்பாக வளர்வதற்கு ஏதுவான சூழ்நிலையைக் கண்டது. தடைசெய்பவராகிய ரோம பேரரசர், கிறிஸ்தவத்திற்கு எதிரான

தனது எதிர்ப்பை நிறுத்தியபோது, இந்த உலகத்திற்குரிய இலட்சியத்தின் ஆவியானது, போப் மார்க்கத்திற்குள் அதிவிரைவாக மலர்ந்தது. "அந்திக்கிறிஸ்து வருகிறானென்று நீங்கள் கேள்விப் பட்டபடி இப்பொழுதும் அநேக அந்திக்கிறிஸ்துகள் இருக்கிறார்கள்" என்று அப்போஸ்தலனாகிய யோவான் எழுதினார் (1யோவான் 2:18). அந்திக்கிறிஸ்துவின் ஆவியானது ஏற்கெனவே கிரியை செய்துகொண்டிருக்கிறது என்பதைக் காண்பித்து, அது வரும்போது அதன் தாக்கத்திலிருந்து எப்படி தப்பிப்பது என்று, இந்த அதிகாரத்தின் மீதமுள்ள பகுதியில் தொடர்ந்து அறிவுறுத்துகிறார்.

சுவிசேஷ யுகத்தின் ஆரம்ப நூற்றாண்டுகளில் உண்மையான கிறிஸ்தவ விசுவாசத்திலிருந்து ஒரு பெரிய "விழுந்து போகுதல்" இருந்தது என்பதை எந்தப் புராட்டடஸ்டன்டும் மறுக்க மாட்டார்கள். பகட்டான சடங்குகளும், பிரம்மாண்டமான விழாக்களும், சுவிசேஷத்தின் எளிய பிரசங்கத்தை மாற்றின. இனிமேலும், இரட்சிப்பானது கிறிஸ்துவின் இரத்தத்தின் மூலம் மட்டும் அல்ல மாறாக புனித நீர், புனிதர்களின் நினைவுச்சின்னங்கள், பதக்கங்கள் மற்றும் தாயத்துக்கள், ஜெபமாலை மற்றும் மரியாளின் பரிந்துரையின் மூலம் தேடப்பட்டது. புறஜாதிகள் சிறிது காலத்திற்கு முன்பு வணங்கிய அதே சிலைகளை வணங்கவும் வழிபடவும், மாற்றப்பட்ட புறஜாதி கோயில்களுக்கு ஏராளமானோர் படையெடுத்தனர். புறஜாதி தெய்வங்கள் மற்றும் வீரர்களின் பெயர்களிலிருந்து சிலைகளின் பெயர்களானது, இரத்த சாட்சிகளாக மரித்த கிறிஸ்தவர்கள் மற்றும் புனிதர்களின் பெயர்களுக்கு எளிமையாக மாற்றப்பட்டன. போண்டி.்.பெக்ஸ் மாக்சிமஸ் (Pontifex Maximus) (தலைமை மத ஆளுநர்) ஆக இருந்த ரோமப் பேரரசர், அனைத்துப் புறஜாதி ஆசாரியர்களுக்கும் தலைவராக இருந்தார்; ரோமின் பிஷப்பான புதிய போண்டி.்.பெக்ஸ் மாக்சிமஸிற்காகத் தனது பதவியை இராஜினாமா செய்தார். ஜானஸ் (Janus) மற்றும் சைபெல் (Cybele) என்ற ரோமக் கடவுள்களின் திறவுகோல்களை வைத்திருப்பதாகக் கூறிவந்த நிலையில், புதிய மற்றும் தலைச்சிறந்த போண்டி.்.ப்களும் (pontififs) அவர்களுடைய முன்னோடிகளைப் போலவே அதே ஆடைகளை அணிந்துகொண்டு, புனிதப் பேதுருவின் திறவுகோல்களை தாங்கள் வைத்திருப்பதாகக் கூறி, அப்போஸ்தலனாகிய பேதுரு ஒரு காலத்தில் ரோமின் பிஷப்பாக இருந்தார் என்பதை நிரூபிக்க முயன்றனர்; இது வரலாற்றால் முற்றிலும் நிரூபிக்கப்படாத ஒன்றாகும்.

பவுல் முன்னறிவித்தபடி, விசுவாச துரோகத்திலிருந்து வளர்ந்து வெளிவந்த இந்தப் பாவ மனுஷனானவன், "தேவனென்னப்படுவதெதுவோ, ஆராதிக்கப்படுவதெதுவோ, அவையெல்லா வற்றிற்கும் மேலாகத் தன்னை உயர்த்துகிறவனாயும், தேவனுடைய ஆலயத்தில் தேவன்போல உட்கார்ந்து, தன்னைத்தான் தேவனென்று காண்பிக்கிறவனாயும் இருப்பான்" 2 தெசலோனிக்கேயர் 2:4. பவுல் குறிப்பிடும் ஆலயங்களானது, சொல்லர்த்தமான கட்டிடம் அல்ல, மாறாக அது தேவனுடைய சபையாகும், ஏனென்றால் அவர் வேறொரு இடத்தில் "நீங்கள் ஜீவனுள்ள தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்கள்" (2 கொரிந்தியர் 6:16) என்று கூறுகிறார். தேவனுடைய ஆலயத்தில் (சபை) ரோமின் பிஷப்புகளுடைய தற்புகழ்ச்சியானது, அளவுக்கு மிஞ்சிய ஆடம்பரமாக இருந்தது. தெய்வீக உரிமைகளைத் தங்களுக்கே சூட்டிக்கொண்டு, ஒவ்வொரு மனிதனும் தங்கள் அதிகாரத்திற்கு உட்பட்டவனாக இருக்க வேண்டும் என்று கூறினார். "போப் உண்மையான தேவனுடைய இடத்தை வகிக்கிறார்" என்று போப் இன்னோசென்ட் III (Pope Innocent III) (கி.பி 1198-1216) அறிவித்தார். லேட்டரன் கவுன்சிலானது (Lateran Council) (கி.பி 1123) போப்பிற்கு, "பிரபஞ்சத்தின் இளவரசன்" என்று புகழாரம் சூட்டியது. புனித பெர்னார்ட் (St.Bernard) (கி.பி 1090-1153) அவர்கள் "பரலோகத்திலோ அல்லது பூமியிலோ தேவனைத் தவிர வேறு எவருமே போப்பைப் போல இல்லை" என்று எழுதினார். "கான்ஸ்டன்டைன் (Constantine) என்பவர் போப்புக்கு தேவனுடைய பெயரை வழங்கினார், எனவே போப் தேவனாக இருப்பதால் மனிதனால் நியாயந்தீர்க்கப்பட முடியாது" என்று போப் நிக்கோலஸ் (Pope Nicholas) என்பவர் (கி.பி 858-867) பெருமை பாராட்டினார்.

இந்தத் தவறான கூற்றுகள் அதிர்ச்சியளிப்பதாக இருந்தாலும், போப்புடைய இருண்ட ஆட்சியின் (வெளி. 13:5,6) பெரும்பகுதியில் அவர்கள் முழு கிறிஸ்தவ உலகத்தையும் வஞ்சித்தனர். ஒரு சில விசுவாசமானவர்கள் மட்டுமே அவர்களின் தீங்கு விளைவிக்கும் செல்வாக்கிலிருந்து தப்பித்து, தங்கள் உண்மையான கர்த்தருக்கும் தலைக்கும் விசுவாசமாக இருந்தனர். மேலும் கிரேக்க முன்னொட்டான (Prefix) "ஆண்டி" (anti) என்பதற்கு, வெறுமனே "எதிராக" அல்லது "எதிர்க்கும்" என்று மட்டுமல்லாமல் மாறாக "பதிலாக", "ஒருவர் இருக்கும் இடத்தில்" என்றும் குறிக்கிறது என்பது கவனிக்கப்படத்தக்கது. (ஸ்ட்ராங் அல்லது வைன் என்பவரின் வேதாகம அகராதியைப் பார்க்கவும்). இவ்வாறாக அந்திக்கிறிஸ்து வெறுமனே நம்முடைய கர்த்தருக்கும் அவருடைய சத்தியத்திற்குமான எதிராளி மட்டுமல்ல மாறாக போலியானவராகவும், கர்த்தருடைய பதவியை அபகரிப்பவராகவும் இருக்கிறார். போப்புகளுக்கு மிகத் தூய்மையான நோக்கங்களைச் சாட்டினாலும், போப்புமார்க்கமானது இன்னும் அந்திக்கிறிஸ்துவாகவே இருக்கும்; பூமியில் "Vicar of Christ" என்றும் உச்சபட்ச "சபையின் தலைவராகவும்" கூறி, ஒவ்வொரு போப்பும் வேதத்தின் மேசியாவைக்குறித்த வாக்குத்தத்தங்களையும் பெயர்களையும் தனக்குத்தானே பயன்படுத்தினர். "குமாரன் கோபங்கொள்ளாமலும் . . . இருக்கும்படிக்கு, அவரை முத்தஞ் செய்யுங்கள்" என்ற சங்கீதம் 2:12 - ஆம் வசனத்தை நிறைவேற்றுவதாகக் கூறி, இராஜாக்கள்கூட போப்பினுடைய காலின் பெருவிரலை முத்தமிட வேண்டியிருந்தது.

## இது ஒரு அமைப்பு, தனிநபர்கள் அல்ல

நிச்சயமாக எந்தவொரு தனிப்பட்ட போப்பையும் அந்திக்கிறிஸ்து என்று நாங்கள் கூறவில்லை; எந்த ஒரு தனிப்பட்ட கத்தோலிக்கரையும் அல்லது போப்பையும் பாவ மனுஷன் என்றும் சொல்லவில்லை. நாங்கள் சொல்வது என்னவென்றால், பாவ மனுஷன் அந்திக்கிறிஸ்து மற்றும் "அக்கிரமத்தின் இரகசியம்" என்பது போப் மார்க்கத்தையே குறிக்கின்றது. இது ஒரு தனிநபர் அல்ல.

## மற்ற தீர்க்கதரிசனங்களில் அந்திக்கிறிஸ்து

தானியேல் 7-ஆம் அதிகாரத்தில் சொல்லப்பட்டுள்ள நான்காவது மிருகத்தின் மேலுள்ள "சிறிய கொம்பு" மற்றும் வெளிப்படுத்தல் 13 -ஆம் அதிகாரத்தில் சொல்லப்பட்டுள்ள சிறுத்தை மிருகம் ஆகியவை அந்திக்கிறிஸ்துவின் அடையாளங்கள் என்பதில் பொதுவான உடன்பாடு உள்ளது. இவை நேரடியான ஒரு பாவ மனுஷனைக் குறிக்கின்றதா அல்லது ஒரு அமைப்பைக் குறிக்கின்றதா என்பதுதான் கேள்வியாகும். தானியேல் 7-ஆம் அதிகாரத்தில் சொல்லப்பட்டுள்ள நான்கு மிருகங்களும் நான்கு இராஜ்யங்களைக் குறிக்கின்றன என்று சிலர் கருதுகின்றனர். நான்காவது மிருகமானது ரோமப் பேரரசாகும் மற்றும் இந்த மிருகத்தின் மேலுள்ள "சிறிய கொம்பானது" பாவ மனுஷனாகிய ஒரு தனி நபரை அடையாளப்படுத்துகின்றது. ஆனாலும், வெளிப்படுத்தல் 13-ஆம் அதிகாரத்தில் சொல்லப்பட்டுள்ள சிறுத்தை மிருகமானது ஒரு இராஜ்யத்தையல்ல, மாறாக ஒரு தனிப்பட்ட பாவ மனுஷனையும், மற்றும் பத்துக் கொம்புகளானது இந்த உலகளாவிய சர்வாதிகாரியை ஆதரிக்கிற பத்து இராஜ்யங்களையும் குறிக்கின்றது என்று அவர்கள் கூறுகின்றனர்.

இங்கே நாம் வேதப்பூர்வ விளக்கத்தின் அடிப்படை மீறலை எதிர்கொள்கிறோம். வேதாகமம் ஒரு அடையாளத்தைக் கண்டறியும்போது, அந்த அடையாளத்திற்கு வேறு அர்த்தம் கொடுப்பது ஆபத்தானதாக இருக்கும். மிருகங்கள் இராஜ்யங்களைக் குறிக்கின்றன என்று தானியேல் 7-ஆம் அதிகாரமானது தெளிவாகக் கூறுகின்றது. மேலும் பாபிலோன், மேதிய-பெர்சியா, கிரேக்கம் மற்றும் ரோம் ஆகிய இராஜ்யங்களைப் பட்டியலிடுகின்றது. தானியேலில் வருகிற மிருகங்களானது

இராஜ்யங்களுக்கு அடையாளமாக இருக்கின்றது என்று ஒப்புக்கொள்ளப்படும்போது, வெளிப்படுத்தலில் வருகிற மிருகங்களானது, ஒரு தனிநபருக்கு அடையாளமாக இருக்கிறதென்று எந்த நியாயத்தின் அடிப்படையில் ஒப்புக்கொள்ளப்படுகின்றது? மேலும், தானியேலில் உள்ள "சிறிய கொம்பு" ஒரு மனிதன் என்றும், வெளிப்படுத்தலில் உள்ள கொம்புகள் இராஜ்யங்கள் என்றும் கூறுவது முரண்பாடாக இருக்கிறதல்லவா? ஒரு நிலையான தன்மைக்கு அவசியமானது என்னவென்றால், தானியேல் மற்றும் வெளிப்படுத்தல் ஆகிய இரண்டிலுமுள்ள மிருகங்கள் மற்றும் கொம்புகள் ஆகியவற்றை ஒரே மாதிரியாகப் பயன்படுத்துவதாகும். இந்த விளக்கத்தைத் தலைகீழாக மாற்றுவதற்கான காரணம் என்னவென்றால், வெளிப்படுத்தல் 13-ஆம் அதிகாரத்தில் சொல்லப்பட்ட சிறுத்தை மிருகமானது "அவன்" என்ற தனிப் பிரதிபெயரால் (Personal Pronoun) குறிப்பிடப்படுகின்றது; அதேசமயம் தானியேலிலுள்ள இராஜ்யத்தை அடையாளப்படுத்துகின்ற மிருகங்கள் அவ்வாறு குறிப்பிடப்படவில்லை என்று கூறுவதேயாகும். வெறுமனே இது செல்லுபடியாகாது. தானியேல்7:19,20 - ஆகிய வசனங்களில் ரோமப் பேரரசைக் குறிக்கின்றது என்று அனைவரும் ஒப்புக்கொள்கிற நான்காம் மிருகமானது, "அவனுடைய" என்ற தனிப் பிரதிபெயரால் குறிப்பிடப்படுகின்றது. தானியேல் 8:3-7 வரையிலுள்ள வசனங்களில் மேதிய-பெர்சியா மற்றும் கிரேக்கத்தைச் சித்தரிக்கும் மிருகங்களானது, "அவன்" மற்றும் "அவனை" என்ற தனிப் பிரதிபெயர்களால் தொடர்ந்து குறிப்பிடப்படுகின்றன.

## தானியேல் 7 - ஆம் அதிகாரம்

"சிறிய கொம்பு" தொடர்பான பல உண்மைகளானது, அந்திக்கிறிஸ்து ஒரு அமைப்பு என்றும், ஒரு தனிநபர் அல்ல என்றும் நிரூபிக்கின்றன. தானியேல் 7:25 - ஆம் வசனமானது, "சிறிய கொம்பு. . . உன்னதமானவருடைய பரிசுத்தவான்களை ஒடுக்கும்" என்று வெளிப்படுத்துகின்றது. மேலும் எதிர்கால "ஏழு வருட உபத்திரவத்தின்" போது ஒரு தனிப்பட்ட அந்திக்கிறிஸ்து பரிசுத்தவான்களை ஒடுக்குவானானால், இது ஒரு குழப்பத்தை ஏற்படுத்துகின்றது. சிலர் கூறுவது போல், உண்மையானத் திருச்சபையானது "உபத்திரவத்திற்கு" முன்பே பரலோகத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டால் பாவ மனுஷனால் துன்புறுத்தப்படுகின்ற "உன்னதமானவருடைய பரிசுத்தவான்கள்" யார்? இவர்கள் வெளிப்படுத்தல் 7-ஆம் அதிகாரத்தில் சொல்லப்பட்டுள்ள "மிகுந்த உபத்திரவத்திலிருந்து வருகிற பரிசுத்தவான்கள்" என்றும் உபத்திரவத்திற்கு முன்பு எடுத்துக்கொள்ளப்படும் கிறிஸ்துவின் பரிசுத்தவான்கள் அல்லது கிறிஸ்துவின் சபை அல்ல என்றும் அவர்கள் பதிலளிக்கிறார்கள். "மிகுந்த உபத்திரவத்திலிருந்து வருகிற பரிசுத்தவான்கள்" இராஜ்யத்தில் இருப்பார்கள், ஆனாலும் கிறிஸ்துவின் இராஜ்யத்தில் அவருடன் ஆளுகை செய்வதில் அவர்களுக்குப் பங்கில்லையென்று அவர்கள் மேலும் கூறுகிறார்கள். இது கிறிஸ்துவின் சபைக்காக மட்டுமே விசேஷமாக ஒதுக்கப்பட்டுள்ளது என்றும் அவர்கள் (பெயர் கிறிஸ்தவர்கள்) கூறுகிறார்கள்.

இதன் மூலம், "எதிர்காலத்தில் வரவிருக்கின்ற சொல்லர்த்தமான பாவ மனுஷன்" என்கிற கருத்து நொறுங்கிப் போகிறது. தானியேல் 7:13,14 ஆகிய வசனங்களில் கிறிஸ்துவானவர் பரலோகப் பிதாவுக்கு முன்பாகக் கொண்டுவரப்பட்டு இராஜ்யம் அவருக்குக் கொடுக்கப்பட்டது. தானியேல் 7:18 மற்றும் 21 ஆகிய வசனங்களில் "உன்னதமானவருடைய பரிசுத்தவான்கள்" அதாவது "சிறிய கொம்பாகிய", "பாவ மனுஷனால்" துன்புறுத்தப்பட்ட அதே பரிசுத்தவான்களுக்கும்கூட இராஜ்யம் கொடுக்கப்பட்டது. கிறிஸ்துவின் இராஜ்யத்தில் கிறிஸ்துவும் அவருடைய சபையும் மட்டுமே ஆளுகிறார்கள் என்பதை நினைவில் கொள்ளுங்கள். ஆகையால் தானியேல் 7 - ஆம் அதிகாரத்தில் உள்ள "உன்னதமானவருடைய பரிசுத்தவான்கள்", "மிகுந்த உபத்திரவத்திலிருந்து வருகிற பரிசுத்தவான்கள்" (திரள் கூட்டத்தார்) அல்ல, மாறாக கிறிஸ்துவுடன் ஆளுகை செய்கிற கிறிஸ்துவின்

சபை ஆவார்கள். இது பாவ மனுஷனின் கால அளவையும் நமக்குத் தருகிறது. "சிறிய கொம்பானது" இந்தப் பரிசுத்தவான்களைத் துன்புறுத்துகிறது, அதனைத் தொடர்ந்து "சிறிய கொம்பாகிய" பாவ மனுஷனானவன், பரிசுத்தவான்கள் உயிர்த்தெழுப்பப்படும் கிறிஸ்துவின் நாளுக்கு முன்னதாகவோ அல்லது உபத்திரவம் ஏற்படுவதற்கு முன்னதாகவோ வெளிப்படுகிறான்.

தானியேல் 7:25 - ஆம் வசனமானது "ஏழு வருட உபத்திரவம்" என்ற முழு கருத்தையும் தகர்க்கிறது. தானியேல் 7:25-இல் "உன்னதமானவருடைய பரிசுத்தவான்கள்" "சிறிய கொம்பினால்" "ஒரு காலமும், காலங்களும், அரைக்காலமும்" அதாவது பெரும்பாலானோர் ஒப்புக்கொள்வது போல் 3 1/2 வருடங்கள் அல்லது 1260 நாட்கள் ஒடுக்கப்படுவார்கள் என்று வெளிப்படுத்துகின்றது. பாவ மனுஷனால் துன்புறுத்தப்படும் பரிசுத்தவான்கள், கிறிஸ்துவுடன் ஆளுகை செய்யும் சபைவகுப்பார் என்றும், மிகுந்த உபத்திரவத்திலிருந்து வருகிற பரிசுத்தவான்கள் அல்ல என்றும் நாம் ஏற்கெனவே கண்டுள்ளோம். ஆகையால் சபையானது 1260 நாட்கள் துன்புறுத்தப்படுகின்றது. இதன் விளைவாக 1260 நாள் என்கிற காலப்பகுதியானது, மகா உபத்திரவத்திற்கு முன்பே நிகழ்கிறது, மேலும் அது மகா உபத்திரவத்தின் ஒரு பகுதியல்ல.

## 1260 நாட்கள்

இந்த 1260 நாள் என்கிற காலஅளவு என்பது என்ன? அந்தக் காலப்பகுதி எப்பொழுது? வேதாகமமானது தனக்குத்தானே அர்த்தத்தை விளக்கக்கூடிய விளக்கவுரையாகும். அதாவது அடையாளங்கள், உவமைகள், கால தீர்க்கதரிசனங்கள் போன்றவற்றை விளக்குவதற்கான சில நியதிகளைக் கர்த்தர் வேதாகமத்தில் வைத்துள்ளார். இந்த அடிப்படை வேதப்பூர்வமான நியதிகளை நாம் புறக்கணித்தால், வேதத்தைப் பற்றிய நமது புரிதலானது குழப்பமடையும். கால தீர்க்கதரிசனத்தை விளக்குவதற்கான வேதப்பூர்வமான விதியானது, எசேக்கியேல் 4:1-8 வரையிலுள்ள வசனங்களில் காணப்படுகின்றது. இங்கே நமக்கு 390 நாள் என்கிற காலப்பகுதி கொடுக்கப்பட்டுள்ளது, மேலும் எசேக்கியேல் 4:6 -ஆம் வசனத்தில் "ஒவ்வொரு வருஷத்துக்குப் பதிலாக ஒவ்வொரு நாளை உனக்குக் கட்டளையிட்டேன்" என்று வாசிக்கின்றோம். தெய்வீகமாக வழங்கப்பட்ட இந்த விளக்க விதியின்படி 390 நாட்களானது 390 வருடங்களுக்குச் சமம். எனவே, தானியேல் 9:24-27 வரையுள்ள வசனங்களில் எழுபது வாரங்களானது (7 வாரங்கள் X 7 நாட்கள் = 490 நாட்கள்) 490 நாட்களை அல்ல, மாறாக 490 வருடங்களைக் குறிக்கின்றது என்பதை அனைவரும் ஒப்புக்கொள்கிறார்கள். இது எசேக்கியேல் 4:6 - இல் வழங்கப்பட்ட "ஒரு நாளானது ஒரு வருஷத்திற்குச் சமம்" என்ற திறவுகோலை (பதிலை) அடிப்படையாகக் கொண்டது. அப்படியானால், தானியேல் மற்றும் வெளிப்படுத்தலில் உள்ள 1260 நாட்களுக்கு மட்டும், ஏன் சிலர் விதிவிலக்கு அளித்து, 1260 நாட்கள் என்ற நேரடியான காலப்பகுதியை வலியுறுத்துகிறார்கள்? எசேக்கியேல் 4:6 - இல் உள்ள கர்த்தருடைய கட்டளையின்படி, ஒரு நாளானது ஒரு வருஷம் என்றால், இது ஒரு 1260 வருட காலப்பகுதியாகும். தீர்க்கதரிசனத்தின் மாணவர்களான பலர் இதை கி.பி.539 - க்கும் கி.பி.1799 - க்கும் இடைப்பட்ட காலப்பகுதிக்கு பொருத்துகிறார்கள். கி.பி.539 - இல் ரோமின் போப்பானவர், ரோமின் சிவில் ஆட்சியாளராக அங்கீகரிக்கப்படுவதற்குத் தடையாக இருந்த மூன்று கொம்புகளில் (சிவில் அதிகாரங்கள்) கடைசியானது அகற்றப்பட்டது (தானியேல் 7:8). தீர்க்கதரிசனத்தில் கொம்புகள் என்பது, தொடர்ந்து சிவில் அல்லது அரசாங்க அதிகாரங்களைச் சித்தரிக்கின்றன என்பதை நினைவில் கொள்ளுங்கள். போப் ஏற்கெனவே ரோமப் பேரரசின் மிக உயர்ந்த மத ஆளுநராக அங்கீகரிக்கப்பட்டிருந்தார். இந்த கி.பி 539 - ஆம் ஆண்டானது, போப் மார்க்கத்தினுடைய (சிறிய கொம்பு) சிவில் அதிகாரத்தின் துவக்கத்தைக் குறிக்கின்றது. 1799 - இல் நெப்போலியன் போப்பை சிறைபிடித்ததின் மூலம், போப் மார்க்கத்தினுடைய துன்புறுத்தும்

அதிகாரமானது உடைக்கப்படும் வரையிலும், பாவ மனுஷனாகிய போப் மார்க்கம், உண்மை சபையை 1260 வருடங்களாக இரக்கமின்றி துன்புறுத்தியது (தானியேல் 7:25). இந்தத் துன்புறுத்தலானது, புனித விசாரணை என்று சொல்லப்படுகின்ற விசாரணையில் அதினுடைய உச்சத்தை எட்டியது. 1204 -இல் போப் இன்னொசென்ட் III (Pope Innocent III) அவர்களால் நிறுவப்பட்டு, ஒவ்வொரு நாட்டிலும் கற்பனை செய்ய முடியாதளவிற்கு கொடுமையானது இதில் உபயோகிக்கப்பட்டுள்ளது; மேலும் நெப்போலியனின் படைகள் இந்தக் கொடுமையான வேலையை முடிவுக்குக் கொண்டுவரும் வரையிலும், விசாரணையின் "புனிதப்பணி" என்று சொல்லப்படுகிற இந்தப் படுகொலைத் தொடர்ந்தது. "தேவன் தம்முடையவர்களை அறிவார்" என்ற கோட்பாட்டின் அடிப்படையில் முழு கிராமங்கள் மற்றும் நகரங்களில் உள்ள அனைவரும் பாரபட்சமின்றிப் படுகொலை செய்யப்பட்டனர். பல்லாயிரக்கணக்கானோர் உயிருடன் எரிக்கப்பட்டனர். அதேசமயம் எண்ணிலடங்காதோர் மிகக் கொடிய கண்டுபிடிப்புகளால் சித்திரவதைக்கு உள்ளாகினர். நியாயமான விசாரணை என்ற பெயரில் மிகக் கொடூரமான குற்றங்களை இழைத்ததைத் தவிர, பல நூற்றாண்டுகளாக தனிநபர்களை, தொடர்ந்து விடாப்பிடியாக நசுக்கியது நிச்சயமாக ஒரு திகிலூட்டும் காட்சியையே முன்வைக்கின்றது. தானியேல் தீர்க்கதரிசி திகிலடைந்ததில் ஆச்சரியமில்லை! (தானியேல் 7:28. நெப்போலியன் போப்பைக் கைது செய்ததும், 1799 - இல் போப் மரணமடைந்ததும் போப் மார்க்கத்தால் 1260 வருடங்கள் பரிசுத்தவான்கள் துன்புறுத்தப்பட்டதான வரலாற்றின் மிகவும் இரத்தக்களரியான காலகட்டங்களில் ஒன்றை முடிவுக்குக் கொண்டுவந்தது.

வேதவசனங்கள் "ஏழு வருட உபத்திரவம்" பற்றியோ, இரண்டு தொடர்ச்சியான 1260 நாள் கொண்ட காலப்பகுதிகளைப் பற்றியோ பேசவில்லை. பின்வரும் மேற்கோள்கள் மட்டுமே வேதாகமத்தில் 1260 நாட்களைக் குறிப்பிடுகின்றன: தானியேல் 7:25; 12:7; வெளிப்படுத்தல் 11:2,3; 12:6,14; 13:5. இம்மேற்கோள்கள் ஒவ்வொன்றும் தானியேல் 7:25 வசனத்துடன் ஒத்துப்போகிறது. தானியேல் 12:7 - இல் உள்ள பரிசுத்த ஜனங்கள் (பரிசுத்தவான்கள் என்றால் பரிசுத்தமானவர்கள்) வெளிப்படுத்தல் 11:2 - இல் உள்ள பரிசுத்த நகரம் (வெளி. 12:2 - இல் கிறிஸ்துவின் மணவாட்டியாக அடையாளம் காணப்படுகின்றது) வெளிப்படுத்தல் 12:6,14-இல் உள்ள ஸ்திரீ (2 கொரிந்தியர் 11:2 - இன் படி சபைக்கான அடையாளம்) மற்றும் வெளிப்படுத்தல் 13:5,7 - இல் உள்ள பரிசுத்தவான்கள் இவையனைத்தும் கிறிஸ்துவின் சபையானது அந்திக்கிறிஸ்துவால் 1260 நாட்கள் துன்புறுத்தப் படுவதைக் காட்டுகின்றது. கால தீர்க்கதரிசனத்திற்கான வேதாகம விதியானது, ஒரு நாளுக்கு ஒரு வருஷம் என்பதாகும் (எசேக்கியேல் 4:6). போப் மார்க்கமானது சபையின் 1260 வருட துன்புறுத்தலின் போது, தேவனுடைய இரண்டு சாட்சிகளும் (வெளி. 11:3 பழைய மற்றும் புதிய ஏற்பாடுகள்) இரட்டு வஸ்திரமுடுத்திக்கொண்டிருக்கிறவர்களாய் (இலத்தீன் என்ற இறந்த மொழியில்) சாட்சி சொன்னார்கள்.

## அந்திக்கிறிஸ்துவின் அடையாளங்கள்

தானியேல் 7:25 -ஆம் வசனமானது, பாவ மனுஷனை அடையாளம் காணக்கூடிய நான்கு குணலட்சணங்களை விவரிக்கிறது. "அவன்:

(1) உன்னதமானவருக்கு விரோதமாக வார்த்தைகளைப் பேசுவான்

(2) உன்னதமானவருடைய பரிசுத்தவான்களை ஒடுக்குவான்

(3) காலங்களையும்

(4) பிரமாணங்களையும் மாற்ற நினைப்பான்."

மேற்கண்ட முதல் இரண்டு காரியங்களை நாம் ஏற்கெனவே கவனித்துள்ளோம். அவையாவன: போப்புகள் தாங்கள் "தேவனைப் போல்" என்று உரிமை கோரிய அபத்தமான வார்த்தைகள் மற்றும் போப் மார்க்கத்தால் உண்மையான திருச்சபை ஒடுக்கப்பட்டது என்பவையாகும். போப் மார்க்கம் உண்மையில் "காலங்களை மாற்றியது". தேவனுடைய திட்டம் வெளிப்படுவதற்காகக் காத்திருக்க விரும்பாத போப் மார்க்கமானது கிறிஸ்துவினுடைய இராஜ்யத்தின் காலத்தை மாற்றியது. கிறிஸ்துவின் அரசாட்சி ஏற்கெனவே தொடங்கிவிட்டது என்று அது அறிவித்தது, மேலும் 1799 வரை போப்புகளின் எதிர்க்கமுடியாத ஆதிக்கத்திற்கு கிறிஸ்துவின் ஆயிரவருட மகிமையைக் குறித்த வேதவசனங்களைப் பொருத்தியது. (Douay Bible முதல் பதிப்பு வெளி. 20:2 பற்றிய அடிக்குறிப்பு) போப் மார்க்கமானது "காலங்களை மாற்ற" முயன்றதற்கு மற்றொரு உதாரணம், அவர்களின் நாட்காட்டியை (Calendar) மாற்றியதே ஆகும்.

போப் மார்க்கம் பிரமாணங்களை மாற்றியதா? தேவனுடைய கட்டளைகளும் கற்பனைகளும் சிறிதளவே மதிக்கப்பட்டன. "காலங்களை" வழங்கும் உரிமையானது தங்களுக்கு இருப்பதாகக் கூறுவதன் மூலம் போப்புகள் அடிக்கடி நெறிமுறைச் சட்டத்தைப் புறக்கணித்துள்ளனர். மதவிரோதிகளைக் கொலை செய்வது பாராட்டுக்குரியது என்று அழைக்கப்பட்டது, குடிமக்கள் கிளர்ச்சி செய்ய ஊக்குவிக்கப்பட்டனர். ஆணைகள் மற்றும் ஒப்பந்தங்கள் ரத்து செய்யப்பட்டன. மேலும் சித்திரவதையானது "விசுவாசத்தின் ஒரு செயல்பாடு" என்று அறிவிக்கப்பட்டது. திருச்சபையின் சேவையாகச் செய்யப்படும்போது உளவு பார்த்தல், சூழ்ச்சி செய்தல், பொய் சாட்சி சொல்லுதல் மற்றும் திருடுதல் ஆகியவை நற்பண்புகள் என்று அறிவிக்கப்பட்டன. மேலும் தெய்வீக சட்டங்களை மீறுவதில் திருப்தியடையாத போப்புகள், வசதி தேவைப்பட்டால் புதிய சட்டங்களை உருவாக்கவும்கூட எப்போதும் தயாராக இருந்தனர். குருமார்கள் திருமணம் செய்யக்கூடாது என்று கட்டாயப்படுத்தப்பட்டனர்; பல நூற்றாண்டுகளாக வெள்ளிக்கிழமைகளில் இறைச்சி தடை செய்யப்பட்டது; சபைகளுக்கு வரிகள் விதிக்கப்பட்டன; மேலும் மக்களின் சுதந்திரம் அடிக்கடி கட்டுப்படுத்தப்பட்டது.

உண்மையில் தானியேல் 7:25 - இல் கொடுக்கப்பட்டுள்ள பாவ மனுஷனின் நான்கு அடையாளங்களும், குறிப்பாக 1799 வரை போப் மார்க்கத்தின் இழிவான ஆட்சியில் நிறைவேறியுள்ளன. இதனால்தான் மார்ட்டின் லூதரும் (Martin Luther) மற்ற சீர்திருத்தவாதிகளும் போப் மார்க்கத்தை அந்திக்கிறிஸ்து என்று அடையாளம் காட்டினர். பாவ மனுஷன் ஏற்கெனவே வெளிப்படுத்தப்பட்டு விட்டான், ஆகையால் கர்த்தர் இப்போது பிரசன்னமாகியிருக்கிறார் என்று கூறுவதற்கு எந்தத் தடையும் இல்லை (2 தெசலோனிக்கேயர் 3:2).

நம்முடைய கர்த்தரின் திரும்பி வருதலைப் பற்றிய தீர்க்கதரிசனங்களின், ஒருங்கிணைந்த சாட்சியத்தின் பலமானது நமக்கு முன்பாக இருக்கிறபடியால், அவருடைய முதலாம் வருகையின்போது மறுரூப மலையின் மேல், அவரை நேரில் கண்ட அவருடைய தனிப்பட்ட சாட்சிகளுக்கு இருந்ததைப் போன்றதொரு முழு நம்பிக்கையை, அவருடைய பிரசன்னத்தைக் (Presence) குறித்து நாமும் கொண்டிருக்க முடியும் (2 பேதுரு 1:16-18).

உண்மையில் இயேசுவின் திரும்பி வருதலின் மீதான நமது நம்பிக்கையானது தீர்க்கதரிசனங்களின் அடிப்படையில் "மிகவும் உறுதியானது" - "அதிக உறுதியான தீர்க்கதரிசன வசனமும் நமக்கு உண்டு; பொழுதுவிடிந்து விடிவெள்ளி உங்கள் இருதயங்களில் உதிக்குமளவும் இருளுள்ள ஸ்தலத்தில் பிரகாசிக்கிற விளக்கைப்போன்ற அவ்வசனத்தைக் கவனித்திருப்பது நலமாயிருக்கும்" 2பேதுரு 1:19.

உலகம் இன்னும் தூங்கிக் கொண்டிருக்கும்போது ஒளியின் பிள்ளைகளாகிய விழித்திருப்பவர்கள், கிழக்கு வானில் விடிவெள்ளியான இயேசு உதயமாகுவதைக் காண்கிறார்கள். இந்த ஆசீர்வதிக்கப்பட்ட அறிவானது, அவர்களின் இருதயங்களை மிகவும் பலப்படுத்தி ஊக்குவிக்கிறது, அதனால் அவர்கள் வேறு எந்த வகையிலும் அடைய முடியாத பரிசுத்தத்தை அடைகிறார்கள். அவர் தம்முடைய வாக்குறுதியைக் காப்பாற்றினார், அவர் மறுபடியும் வந்துவிட்டார்.

நீதியின் சூரியனின் முன்னோட்ட ஒளிகளை அவர்கள் காண்கிறார்கள்; இந்த நீதியின் சூரியனானது ஏகமாய்த் தவிக்கிற சர்வ சிருஷ்டியை ஆசீர்வதிப்பதற்காக இறுதியில் "தன் செட்டைகளின்கீழ் ஆரோக்கியத்தோடே" உதிக்கும் (மல்கியா 4:2). "அப்பொழுது, நீதிமான்கள் தங்கள் பிதாவின் ராஜ்யத்திலே சூரியனைப்போலப் பிரகாசிப்பார்கள்" (மத்தேயு 13:43) என்ற வசனத்தின்படி தாங்களும் அவரோடுகூட இருப்போம் என்பதை அவர்கள் மகிழ்ச்சியுடன் உணர்கிறார்கள்.

# பின்னிணைப்பு – A

## "பரோசியா" (Parousia) என்ற கிரேக்க பதம் பயன்படுத்தப்பட்டுள்ள அனைத்து வேத வசனங்களின் தொகுப்பு

**பரோசியா** (Parousia) என்ற கிரேக்க வார்த்தை காணப்படும் ஒவ்வொரு வேத வசனங்களின் தொகுப்பு பின்வருமாறு [இந்தத் தொகுப்பில் அது பிரசன்னம் (Presence) என சரியாக மொழிபெயர்க்கப் பட்டுள்ளது]:

- "உம்முடைய பிரசன்னத்திற்கும் (*Presence*), உலகத்தின் முடிவுக்கும் அடையாளம் என்ன?" (மத்தேயு 24:3)
- "மனுஷகுமாரனுடைய பிரசன்னமும் (*Presence*) இருக்கும்" (மத்தேயு 24:27)
- "அப்படியே மனுஷகுமாரன் பிரசன்னமாகும் (*Presence*) காலத்திலும் நடக்கும்" (மத்தேயு 24:37,39)
- "அவர் பிரசன்னத்தில் (*Presence*) அவருடையவர்கள் உயிர்ப்பிக்கப்படுவார்கள்" (1 கொரிந்தியர் 15:23)
- "எங்களுக்கு நம்பிக்கையும் சந்தோஷமும் மகிழ்ச்சியின் கிரீடமுமாயிருப்பவர்கள் யார்? நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து பிரசன்னமாகும்போது (*Presence*) அவருடைய சந்நிதானத்திலே நீங்களல்லவா அப்படியிருப்பீர்கள்" (1 தெசலோனிக்கேயர் 2:19)
- "இவ்விதமாய் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து தமது பரிசுத்தவான்கள் அனைவரோடுங்கூட பிரசன்னமாகும்போது (*Presence*), நீங்கள் நம்முடைய பிதாவாகிய தேவனுக்கு முன்பாகப் பிழையற்ற பரிசுத்தமுள்ளவர்களாயிருக்கும்படி உங்கள் இருதயங்களை ஸ்திரப்படுத்துவாராக". (1 தெசலோனிக்கேயர் 3:13)
- "கர்த்தருடைய பிரசன்னம்மட்டும் (*Presence*) உயிரோடிருக்கும் நாம் நித்திரையடைந்த வர்களுக்கு முந்திக்கொள்வதில்லை" (1 தெசலோனிகேயர் 4:15)
- "உங்கள் ஆவி ஆத்துமா சரீரம் முழுவதும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து பிரசன்னமாகும்போது (*Presence*) குற்றமற்றதாயிருக்கும்படி காக்கப்படுவதாக". (1தெசலோனிக்கேயர் 5:23)
- "அன்றியும், சகோதரரே, நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் பிரசன்னத்தையும் (*Presence*), நாம் அவரிடத்திலே சேர்க்கப்படுவதையுங்குறித்து, நாங்கள் உங்களை வேண்டிக்கொள்ளுகிறது என்னவென்றால்," (2 தெசலோனிக்கேயர் 2:1)
- "நீக்கப்படும்போது, அந்த அக்கிரமக்காரன் வெளிப்படுவான்; அவனைக் கர்த்தர் தம்முடைய வாயின் சுவாசத்தினாலே அழித்து, தம்முடைய வந்திருத்தலின் பிரசன்னத்தினாலே (எபிபேனியா) நாசம்பண்ணுவார்". (2தெசலோனிக்கேயர் 2:8)

- "அந்த அக்கிரமக்காரனுடைய பிரசன்னம் (*Presence*) . . ." (2 தெசலோனிக்கேயர் 2:9)
- "இப்படியிருக்க, சகோதரரே, கர்த்தர் பிரசன்னமாகுமளவும் (*Presence*) நீடிய பொறுமையாயிருங்கள்". (யாக்கோபு 5:7)
- "நீங்களும் நீடிய பொறுமையோடிருந்து, உங்கள் இருதயங்களை ஸ்திரப்படுத்துங்கள்; கர்த்தரின் பிரசன்னம் (*Presence*) சமீபமாயிருக்கிறதே." (யாக்கோபு 5:8)
- "நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் வல்லமையையும் பிரசன்னத்தையும் (*Presence*) உங்களுக்கு அறிவித்தோம்". (2 பேதுரு 1:16)
- "முதலாவது நீங்கள் அறியவேண்டியது என்னவெனில்: கடைசிநாட்களில் பரியாசக் காரர் வந்து (சபையில்), தங்கள் சுயஇச்சைகளின்படியே நடந்து, (விருப்பங்கள்) அவர் பிரசன்னமாகுவார் (*Presence*) என்று சொல்லுகிற வாக்குத்தத்தம் எங்கே? என்று சொல்லுவார்கள்" (2 பேதுரு 3:3,4)
- "தேவனுடைய நாள் சீக்கிரமாய் பிரசன்னமாகும்படிக்கு (*Presence*) மிகுந்த ஆவலோடே காத்திருங்கள்" (2 பேதுரு 3:12)
- "இப்படியிருக்க, பிள்ளைகளே, அவர் வெளிப்படும்போது நாம் அவர் பிரசன்னத்தில் (*Presence*) அவருக்கு முன்பாக வெட்கப்பட்டுப்போகாமல் தைரியமுள்ளவர்களா யிருக்கும்படிக்கு அவரில் நிலைத்திருங்கள்". (1யோவான் 2:28)
- "அவனுடைய நிருபங்கள் பாரயோசனையும் பலமுமுள்ளவைகள்; சரீரத்தின் தோற்றமோ (*Presence*) பலவீனமும், வசனம் அற்பமுமாயிருக்கிறதென்கிறார்களே" (2 கொரிந்தியர் 10:10)
- "ஆதலால், எனக்குப் பிரியமானவர்களே, நீங்கள் எப்பொழுதும் கீழ்ப்படிகிறபடியே, நான் உங்களுக்கு பிரசன்னமாகியிருக்கும்பொழுது (*Presence*) மாத்திரமல்ல, நான் தூரமாயிருக்கிற இப்பொழுதும், அதிக பயத்தோடும் நடுக்கத்தோடும் உங்கள் இரட்சிப்பு நிறைவேறப் பிரயாசப்படுங்கள்" (பிலிப்பியர் 2:12)
- "ஸ்தேவான், பொர்த்துனாத்து, அகாயுக்கு என்பவர்கள் பிரசன்னமானதற்காக (*Presence*) சந்தோஷமாயிருக்கிறேன்". (1 கொரிந்தியர் 16:17)
- "ஆகிலும், சிறுமைப்பட்டவர்களுக்கு ஆறுதல் செய்கிற தேவன் தீத்து பிரசன்னமானதினாலே (Presence) எங்களுக்கு ஆறுதல்செய்தார். அவன் பிரசன்னமானதினாலே (*Presence*) மாத்திரமல்ல,. . ." (2 கொரிந்தியர் 7:6,7)
- "உங்கள் விசுவாசத்தின் வர்த்தனைக்காகவும் சந்தோஷத்துக்காகவும் நான் பிழைத்து, உங்கள் அனைவரோடுங்கூட பிரசன்னமாயிருப்பேனென்று (*Presence*) அறிந்திருக்கிறேன்." (பிலிப்பியர் 1:26)

# பின்னிணைப்பு – B

## "ஏழு வருட உபத்திரவம்" என்கிற கோட்பாட்டின் தோற்றமும் வேதப்பூர்வ மதிப்பீடும்

"ஏழு வருட உபத்திரவம்" என்கிற கோட்பாட்டைப் பலர் நம்புகிறார்கள். அது சுருக்கமாகப் பின்வருமாறு கூறுகிறது: சபைவகுப்பாரை "எடுத்துக்கொள்வதற்காக" (Rapture) கிறிஸ்து இரகசியமாக பூமிக்குத் திரும்பி வந்து, அவர்களைப் பரலோகத்திற்கு அழைத்துச் செல்கிறார். இதைத் தொடர்ந்து (உடனடியாக நிகழவேண்டிய அவசியமில்லை) சொல்லர்த்தமான ஏழு வருட உபத்திரவம் நிகழும், அப்போது "பாவ மனுஷன்" உலகளவில் வெளிப்படுவான். ஏழு வருடங்களின் முடிவில், கிறிஸ்து சபையுடன் ("கண்கள் யாவும் அவரைக் காணும்") பகிரங்கமாகத் திரும்பி வந்து அந்திக்கிறிஸ்துவையும், கள்ளத்தீர்க்கதரிசியையும் அழித்துவிட்டு தனது ஆயிரவருட அரசாட்சியைத் துவங்குவார். "ஏழு வருட உபத்திரவ" கோட்பாட்டில் மாறுபாடுகள் உள்ளன. சிலர், கிறிஸ்து ஏழு வருடங்களின் மத்தியில் சபையை ஒன்று சேர்ப்பதாகக் கருதுகிறார்கள், மேலும் அவர்கள் தங்கள் கருத்தை "mid – tribulation rapture" என்று அழைக்கிறார்கள். மற்றவர்கள் உபத்திரவத்திற்குப் பிறகு சபை எடுத்துக்கொள்ளப்படும் என்று நம்புகிறார்கள், மேலும் அவர்கள் தங்கள் கருத்தை "Post – tribulation rapture" என்று குறிப்பிடுகிறார்கள்.

"ஏழு வருட உபத்திரவக்" கோட்பாடானது பகுதிக்கால இறையியலில் (Dispensationalism) வேரூன்றியுள்ளது. இது வரலாற்று ரீதியான புராட்டஸ்டன்டிசத்தில் இருந்து தோன்றியதல்ல, மாறாக 1800 - களில் பிளைமவுத் சகோதரர்களின் (Plymouth Brethren) முக்கியப் பிரிவின் தலைவரான ஜே.என். டார்பியிடமிருந்து (J.N. Darby) உருவானது. பிளைமவுத் சகோதரர்கள் ஒரு அற்புதமான மக்கள் குழுவாக இருந்தாலும், அவர்கள் உண்மையில் வரலாற்று ரீதியான புராட்டஸ்டன்டிசத்திற்குச் சார்பாக இருப்பதில்லை.

இன்னும் கவலை அளிக்கும் விஷயம் என்னவென்றால், டார்பி (Darby) ஸ்பெயின் நாட்டைச் சேர்ந்த ரிபேரா (Ribera) என்ற ஒரு மிஷனரியின் எதிர் - சீர்திருத்தக் கருத்துக்களை மீண்டும் உயிர்ப்பித்தார். போப் மார்க்கமானது அந்திக்கிறிஸ்து அமைப்பு என்பதும் வெளிப்படுத்தல் புத்தகத்தின் பெரும்பகுதியானது சபையின் வரலாற்றின்போது நிறைவேறிக்கொண்டிருந்தது என்பதும், சீர்திருத்தத்தின் அடிப்படைக் கருத்தாகும். 1590-ஆம் ஆண்டில் ரிபேரா (Ribera), புராட்டஸ்டன்டிசத்திற்கு எதிரான ஒரு வியாக்கியானமாக, வெளிப்படுத்தல் புத்தகத்தைப் பற்றிய ஒரு விளக்க உரையை வெளியிட்டார். அதில் அவர், வெளிப்படுத்தலின் ஆரம்ப அதிகாரங்களைத் தவிர, மற்ற அனைத்தையும் கடைசிக் காலத்திற்கும், அந்திக்கிறிஸ்து ஒரு தனிப்பட்ட தீய மனிதனாக (ஒரு அமைப்பு அல்ல) இருப்பான் என்றும், அவன் கடைசி நாட்களில் மூன்றரை வருடங்கள் உலகை ஆட்சி செய்வான் என்றும் கூறினார்.

டார்பி (Darby), வெளிப்படுத்தல் ஆறாம் அதிகாரம் முதல், பத்தொன்பதாம் அதிகாரம் வரையிலான அனைத்து நிகழ்வுகளும் "ஏழு வருட உபத்திரவத்தின்" போது நடப்பதாகக் கூறினார். இருப்பினும், வெளிப்படுத்தல் புத்தகத்திலுள்ள ஏழு முத்திரைகள் உடைக்கப்படுவதோ, ஏழு எக்காளங்கள் ஊதப்படுவதோ மற்றும் ஏழு வாதைகள் ஊற்றப்படுவதோ இதில் ஒன்றுகூட, ஏழு வருட காலத்திற்குள் நடக்கும் என்று கூறவோ அல்லது குறிப்பால்கூட உணர்த்தவோ இல்லை. வெளிப்படுத்தல்

புத்தகத்தில் ஏழு வருட காலப்பகுதி என்ற ஒன்று குறிப்பிடப்படவே இல்லை. ஆனால் ஒரு மூன்றரை வருட காலப்பகுதியானது குறிப்பிடப்பட்டுள்ளதென்று நாம் நிச்சயமாகக் கூறலாம். இருப்பினும், அது ஏழு வருட காலப்பகுதியின் பாதி என்று எங்குமே சுட்டிக்காட்டப்படவில்லை. மூன்றரை வருடங்கள் உபத்திரவத்திற்கு முன்பு நிகழ்கின்றன என்பதை வேதவசனங்களிலிருந்து எளிதாக நிரூபிக்க முடியும். (VI அத்தியாயத்தில் "தானியேல் 7-ஆம் அதிகாரம்" என்ற பகுதியைப் பார்க்கவும்). எனவே, விக்ளி.ஃப் (Wycliffe), லூதர் (Luther), கால்வின் (Calvin), வெஸ்லி (Wesley) போன்ற சீர்திருத்தவாதிகள் மூன்றரை வருடங்கள் அல்லது 1260 நாட்கள் என்பது 1260 வருட காலப்பகுதியின் அடையாளமாக இருந்தது என்று நம்பினர், அது அவர்களுடைய காலத்திற்கு முன்பே துவங்கி "முடிவு காலம்" வரை நீடித்தது.

ஏழு வருட உபத்திரவக் கோட்பாடானது தானியேல் 9:24-27 வரையிலான வசனங்களின், நிலையற்ற பயன்பாட்டின் மீதே முற்றிலும் சார்ந்திருக்கிறது. அந்த வசனங்கள் யூத ஜனங்கள் மீது நியமிக்கப்பட்ட எழுபது வாரக் காலப்பகுதியைப் பற்றி கூறுகின்றன. எழுபது வாரங்களானது 490 நாட்களுக்குச் சமமாகும். ஒரு நாளானது ஒரு வருடத்திற்குச் சமம் என்ற, எசேக்கியேல் 4:6 -ன் அடிப்படையில், இந்த எழுபது வாரங்களானது 490 நேரடியான நாட்கள் அல்ல, மாறாக 490 வருடங்கள் என்று அனைவரும் ஒப்புக்கொள்கிறார்கள். மீண்டுமாக, நெகேமியாவின் காலத்தில் வெளியிடப்பட்ட கட்டளையிலிருந்து கிறிஸ்துவின் முதலாம் வருகை வரையிலான காலத்தை தானியேல் 9:25-ன் 69 வாரங்கள் குறிக்கின்றன என்பதில் ஒருமித்தக் கருத்து உள்ளது. 26 - ஆம் வசனமானது, 69 வாரங்களுக்குப் "பின்பு மேசியா (கிறிஸ்து) சங்கரிக்கப்படுவார்" என்று கூறுகிறது. 27 - ஆம் வசனமானது, "அந்த (70- வது) வாரம் பாதி சென்றபோது அவர் (கிறிஸ்து) பலியையும் காணிக்கையையும் ஒழியப்பண்ணுவார்" என்று காட்டுகிறது. கிறிஸ்துவின் மரணமானது, இஸ்ரயேலின் ஆசாரியத்துவத்தின் மூலமாக மேலும் நிழலான பலிகளைச் செலுத்துவதற்கான அவசியத்தை ஒழித்தது.

தானியேல் 9:26-இல் 69 வாரங்களுக்குப் "பின்பு மேசியா (கிறிஸ்து) சங்கரிக்கப்படுவார்" என்று கூறப்பட்டுள்ளதை நன்றாகக் கவனியுங்கள். "அக்கோர்" (Achor) என்ற எபிரேய வார்த்தைக்குப் "பின்பு" என்று பொருள். அதற்கு "in" அல்லது "during" என்று அர்த்தம் தராது. ஆனாலும், ஏழு வருட உபத்திரவத்தை ஆதரிப்பவர்கள், மேசியா 69-வது வாரத்திற்குள்ளேயோ (in) அல்லது அந்த வாரத்தின் போதோ (during) சங்கரிக்கப்பட்டார் என்று கூறுகிறார்கள். இது 26 - ஆம் வசனத்தின் தவறான மொழிபெயர்ப்பு ஆகும். ஆனால் 26 - ஆம் வசனமானது, 69 வாரங்களுக்குப் "பின்பு" கிறிஸ்து சங்கரிக்கப்படுவார் என்று தெளிவாகக் கூறுகிறது. 70-வது வாரமானது, 69-வது வாரத்திற்கு பின்னரே வருகிறது. மேலும் 27 - ஆம் வசனமானது, 70-வது வாரத்தின் பாதியில்தான் கிறிஸ்து மரித்தார் என்பதைத் தெளிவாகக் காண்பிக்கின்றது. எனவே, 70-வது வாரத்தின் ஏழு வருட காலப்பகுதியானது, கிறிஸ்தவ யுகத்தின் இறுதிவரைக்கும் மீதம் வைக்கப்படவில்லை. இதனால் ஏழு வருட உபத்திரவக் கோட்பாடானது வீழ்ச்சியடைகிறது.

சீர்திருத்தத்திற்கு பிந்தின 300 ஆண்டுகளாக புராட்டஸ்டன்டிசத்தின் வரலாற்று நிலைப்பாடானது என்னவென்றால், 70-வது வாரமானது 69 வாரங்களைத் தொடர்ந்து உடனடியாக வந்து, மேலும் அதன் "பாதியில்" (நடுவில்) நிகழ்ந்த கிறிஸ்துவின் மரணத்துடன் நிறைவேறியது என்பதேயாகும். 19-ஆம் நூற்றாண்டில், பகுதிக்கால இறையியலாளர்கள் (Dispensationalists ) வந்து "அப்படி அல்ல" 69 வாரங்களுக்கும் 70-வது வாரத்திற்கும் இடையே ஒரு இடைவெளி உள்ளது என்றும், இந்த இடைவெளியானது முதலாம் வருகைக்கும் எடுத்துக்கொள்ளுதலுக்கும் (Rapture) இடைப்பட்ட காலம் என்றும் கூறினர். பின்பு அவர்கள், "70-வது வாரமும் ஏழு வருடங்களும் கணக்கிடப்படத் துவங்குகிறது.

மேலும் தானியேல் 9:27 -இல் உள்ள 'அவர்' என்பது கிறிஸ்து அல்ல மாறாக அந்திக்கிறிஸ்து என்றும், மேலும் 70-வது வாரத்தின் ஏழு வருடங்களானது 'ஏழு வருட உபத்திரவம்' என்றும், அப்போது வெளிப்படுத்தல் 6 முதல் 19 வரையிலான அதிகாரங்கள் நிறைவேறும்" என்றும் கூறுகிறார்கள். இந்த இடைவெளியானது, முற்றிலும் ஒரு அனுமானம் என்பதும், வேதவசனங்களின் அடிப்படையைக் கொண்டிருக்கவில்லை என்பதும், ஏழு வருட உபத்திரவக் கோட்பாட்டை நம்புகிற பகுதிக்கால இறையியலாளர்களுக்கு (Dispensationalists) ஒரு பொருட்டல்லாததாகத் தோன்றுகிறது.

# பின்னிணைப்பு – C

## "காணுதல்" என்ற வார்த்தை இடம்பெற்றுள்ள ஒவ்வொரு வேத வசனமும், அவருடைய இரண்டாம் வருகையின்போது காண்பதைப் பற்றி தொடர்புடையதாகும்

மத்தேயு 24:30,31- "அப்பொழுது, மனுஷகுமாரனுடைய அடையாளம் வானத்தில் காணப்படும். அப்பொழுது, மனுஷகுமாரன் வல்லமையோடும் மிகுந்த மகிமையோடும் வானத்தின் மேகங்கள்மேல் வருகிறதைப் பூமியிலுள்ள சகல கோத்திரத்தாரும் கண்டு புலம்புவார்கள். வலுவாய்த் தொனிக்கும் எக்காள சத்தத்தோடே அவர் தமது தூதர்களை அனுப்புவார்; அவர்கள் அவரால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களை வானத்தின் ஒரு முனை முதற்கொண்டு மறுமுனைமட்டும் நாலு திசைகளிலுமிருந்து கூட்டிச் சேர்ப்பார்கள்".

ஐந்தாம் அத்தியாயத்தில் காண்பிக்கப்பட்டுள்ளபடி மத்தேயு 24:30,31 ஆகிய வசனங்களை நேரடியான அர்த்தத்தில் எடுத்துக்கொள்ள முடியாது. இந்த உருவக நடையில் அமைந்த பகுதியில் உள்ள அடையாளங்களுக்கான வேதப்பூர்வ ஆய்வு பின்வருமாறு:

### வானமும் வானங்களும்

கர்த்தருடைய நாளில் ஏற்படும் அழிவைப் பற்றி ஏசாயா 34:2-5, 8 ஆகிய வசனங்கள் கூறுவதாவது "வானத்தின் சர்வ சேனையும் (திரளானோர்) கரைந்து. . . உதிர்ந்து விழும் . . . வானங்களில் என் பட்டயம் வெறிகொண்டது" (வசனங்கள் 4,5). நிஜமான வானங்களில் திரளான ஜனங்கள் இல்லை. ஆனால் அடையாளமான வானங்களில் (ஒழுங்கற்ற மத அமைப்புகள்) உள்ள ஜனங்கள் திரும்பி வந்தக் கர்த்தரால் தண்டிக்கப்படுவார்கள் (இது அவருடைய இரத்தம் தோய்ந்த பட்டயத்தால் தண்டிக்கப்படுவார்கள் என்று அடையாளப்படுத்தப்படுகிறது). யோயேல் 2-ஆம் அதிகாரமானது, கர்த்தருடைய நாளைப்பற்றி விளக்குகின்றது. 9-11 வரையிலான வசனங்கள் ஒரு பலத்த ஜாதியைப் பற்றி கூறுகின்றன. அவைகளுக்கு முன்பாகப் பூமி "அதிரும்" வானங்கள் "அசையும்". நிஜமான வானங்கள் ஒரு சேனைக்கு முன் அசையாது, ஆனால் புரட்சிகரமான சக்திகள் இந்தப் பெயர்சபை என்கிற வானங்களை நடுங்கச் செய்து, அவற்றைக் கவிழ்த்துவிடும். யோயேல் 2:10-இல் கூறப்பட்டுள்ள வானங்கள், மத்தேயு 24:29-31 ஆகிய நமது தலைப்பு வசனத்தில் காணப்படும் வானங்களுக்கு ஒத்திருக்க வேண்டும். ஏனெனில் இந்த இரண்டு வசனப்பகுதிகளிலும் இடம்பெறுகின்ற வானங்களிலுள்ள சூரியனும் சந்திரனும் அடையாள அர்த்தமாக அந்தகாரப்படுகின்றன.

### மேகங்கள்

யோயேல் 2-ஆம் அதிகாரமானது, மத்தேயு 24:29-31 வரையிலான வசனங்களுக்கு இணையான ஒரு வேதப்பகுதியாகும். அது, மேகங்கள் உபத்திரவத்தைக் குறிக்கின்றன என்பதை வெளிப்படுத்து கின்றது. யோயேல் 2:1,2-இல் கர்த்தருடைய புதிய நாளின் துவக்கத்தில், மிகுந்த உபத்திரவமாக மாறுகின்ற "மேகங்களைப்" பற்றிய குறிப்பு உள்ளது. "அது இருளும் அந்தகாரமுமான நாள்; அது மப்பும் மந்தாரமுமான நாள்; விடியற்கால வெளுப்பு பர்வதங்களின்மேல் பரவுகிறதுபோல ஏராளமான பலத்த ஒரு

ஜாதி தீவிரமாக வந்து பரவும்; அப்படிப்பட்டது முன் ஒரு காலத்திலும் உண்டானதுமில்லை, இனித் தலைமுறை தலைமுறையாக வரும் வருஷங்களிலும் உண்டாவதுமில்லை".

கர்த்தருடைய பிரசன்னத்தின் (Presence) நாளின் துவக்கத்தில் தோன்றுகிற "மேகங்கள்" உண்மையில் இதற்கு முன்பு எப்போதும் அறியப்படாத இதுபோன்ற "ஏராளமான பலத்த ஒரு ஜாதியைக்" கொண்டது என்பதை இதிலிருந்து கவனிக்கலாம். இது பிரம்மாண்டமான ஆயுதப் படைகளின் எழுச்சியைக் குறிக்கின்றது என்பது தெளிவாகிறது; அதினால் அந்தப் படைகள் தூண்டப்போகும் புரட்சிகரமானப் போராட்டத்தின் விளைவாக, நாகரிகம் சிதைந்து வீழ்ச்சியடையும். இந்த உபத்திரவத்தின் மேகங்கள் இப்போதே காணக்கூடியதாக இருக்கின்றன.

## காணுதல்

கிரேக்க வார்த்தையான "ஆப்டோமை" (Optomai) என்பது, மனதளவிலான உணர்ந்து கொள்ளுதலைக் குறிக்கலாம் என்பது ஏற்கெனவே ஐந்தாம் அத்தியாயத்தில் உறுதிப்படுத்தப் பட்டுள்ளது. (அத்தியாயம் V)

## தூதர்கள்

தூதன் என்ற வார்த்தையின் கிரேக்கப் பதம் "அங்கெலோஸ்" (Aggelos) ஆகும்; அது உண்மையில் "தூதுவன்" என்று பொருள்படும். பெரும்பாலும் இது தூதரின் சேனையைக் குறிக்கிறது; ஆனாலும் இது தேவனுடைய எந்த ஒரு தூதுவரையும் அதே அளவு பொருத்தமாகக் குறிக்க முடியும். உதாரணமாக, திரும்பி வந்தக் கிறிஸ்துவானவர், சாத்தானை ஆயிரம் வருஷமளவும் கட்டிவைக்கக் கூடிய ஒரு தூதராக அடையாளப்படுத்தப்படுகிறார் (வெளி. 20:1-3).

## எக்காளங்கள்

வேதாகமத்தில் "எக்காளம்" என்ற வார்த்தையானது, சத்தியத்தைப் பிரகடனப்படுத்துவதை அடையாளப்படுத்தப் பயன்படுத்தப்படுகின்றது. சத்தியத்தைத் தெளிவாகப் பேசுவதன் கருப்பொருளில், "அந்தப்படி எக்காளமும் விளங்காத சத்தமிட்டால் எவன் யுத்தத்திற்கு ஆயத்தம்பண்ணுவான்?" என்று 1 கொரிந்தியர் 14:8-இல் பவுல் கூறினார். மீண்டுமாக யோயேல் 2 -ஆம் அதிகாரமானது, மத்தேயு 24:30, 31-க்கு இணையாக உள்ளது; மேலும் இது இந்த எக்காளத்தின் அடையாள அர்த்தத்தை வெளிப்படுத்துகின்றது. இது கர்த்தருடைய நாளைக் குறித்து ஜனங்களை எச்சரிக்கின்ற சத்தியத்தின் ஒரு பிரகடனம் என்று யோயேல் 2:1 - ஆம் வசனத்திலிருந்து நாம் அறிகின்றோம். செப்பனியா 1:14, 16-இல் கர்த்தருடைய நாளானது "எக்காளம் ஊதுகிற . . . நாள்" என்று கூறப்படுகின்றது; அதில் "அரணிப்பான நகரங்களுக்கும், உயரமான கொத்தளங்களுக்கும் (இப்பொழுதிருக்கிற பொல்லாத உலகத்தின் சுயநலன்கள்) விரோதமாக" சத்தியத்தின் எச்சரிப்புக் கொடுக்கப்படுகின்றது.

மத்தேயு 24:31-இல் உள்ள இந்த எக்காளமானது, 1கொரிந்தியர் 15:52 இல் உள்ள "கடைசி எக்காளத்திற்கும்" 1தெசலோனிக்கேயர் 4:16 -இல் உள்ள "தேவ எக்காளத்திற்கும்" இணையானது என்பது தெளிவாகின்றது. ஏனெனில் இவை மூன்றுமே கிறிஸ்துவின் திரும்பி வருதலோடு தொடர்புடையவை. இந்த எக்காளமானது, கிறிஸ்துவின் திரும்பி வந்திருத்தலின்போது, சத்தியத்தினுடைய ஒரு மாபெரும் பிரகடனத்தின் அடையாளமாக இருக்கிறது.

## நான்கு காற்றுகள்

வெளிப்படுத்தல் 7:1-ஆம் வசனமானது, பூமியின் நாலு திசைகளிலிருந்தும் வரும் காற்றுகளைக் குறித்துப் பேசுகிறது; அவை கட்டவிழ்த்து விடப்படும்போது, மாபெரும் அழிவு ஏற்படும். நான்கு காற்றுகள் கட்டவிழ்த்து விடப்படுவது ஒரு பெருங்காற்றை உருவாக்கும்; இந்தப் பெருங்காற்று என்பது (எரேமியா 25:32, ஏசாயா 66:15-16) வேதாகமத்தில் "ஆபத்துக்காலம்" (தானியேல் 12:1) எனப்படுகின்ற இறுதியும் கடுமையானதுமான கட்டத்தை விவரிக்கப் பயன்படுத்தப்படும் மற்றொரு அடையாளமாகும்.

இப்போது, முற்றிலும் உருவக நடையில் அமைந்துள்ள மத்தேயு 24:29-31 வரையிலான வசனப்பகுதியில் உள்ள அடையாளங்களின் அர்த்தத்தை, இணையான வேதவசனங்களிலிந்து நாம் கண்டறிந்திருப்பதால், இவ்வசனப்பகுதியானது எளிதில் புரிந்துகொள்ளும்படியாக மாறுகின்றது. தமது பிரசன்னத்தின் (Presence) அடையாளங்களைக் (மத்தேயு 25:3) குறித்து சீஷர்கள் எழுப்பின கேள்விக்கு பதிலளித்த இயேசு, வரலாற்றில் எப்போதுமே உண்மையாக இருந்த பல சம்பவங்களைப் பட்டியலிட்டார்; அவையாவன: "யுத்தங்களும் யுத்தங்களின் செய்திகளும்"; "ஜனத்துக்கு விரோதமாய் ஜனம் எழும்பும்"; "பஞ்சங்கள்", "கொள்ளைநோய்கள்", "பூமியதிர்ச்சிகள்" முதலானவைகளாகும். பின்பு "இவைகளெல்லாம் வேதனைகளுக்கு (உபத்திரவங்கள்) ஆரம்பம்" என்று இயேசு கூறினார். இவைகள் வழக்கத்திற்கு மாறான சம்பவங்கள் இல்லை. அவை வரலாற்றில் பொதுவானவையாகும். பின்பு, மத்தேயு 24:29 - இல் "அந்நாட்களின் உபத்திரவம் (வரலாற்றின் பொதுவான உபத்திரவம்) முடிந்தவுடனே", வானங்களில் ஏதோ சம்பவிக்க இருக்கின்றது என்று அவர் கூறுகிறார். "வானத்தின் சத்துவங்கள் அசைக்கப்படும்". கடுமையான மாற்றங்களானது பெயர்சபை என்கிற வானங்களை அதிரச்செய்யும். "சூரியன் (சுவிசேஷம்) அந்தகாரப்படும், சந்திரன் (மோசேயின் நியாயப்பிரமாணம்) ஒளியைக் கொடாதிருக்கும், நட்சத்திரங்கள் வானத்திலிருந்து விழும்". சுவிசேஷமும் (புதிய ஏற்பாடு) மோசேயின் நியாயப்பிரமாணமும் (பழைய ஏற்பாடு) சபை வகுப்பாருக்கு வெளியே இருந்தவர்களால் எப்போதும் தாக்குதலுக்கு உள்ளாக்கப்பட்டன. வெளிப்படுத்தல் 12:1-இல் சூரியனும் சந்திரனும், ஸ்திரீயாகிய உண்மையான சபைக்கு, தொடர்ந்து நிலைக்கச்செய்யும் வல்லமையாக இருந்திருக்கின்றது என்பதைக் காட்டுகிறது. ஆனால் நமது காலத்தின் நிகழ்வு என்னவென்றால் வேதவசனங்களின் தெய்வீக ஏவுதலை மறுக்கின்ற சபைக்குள் இருக்கும் நவீனவாதிகளால், வேதாகமம் (சூரியனும் சந்திரனும்) தாக்குதலுக்கு உள்ளாகின்றது. (தேசிய கிறிஸ்தவ சபைகளின் பேரவைக்கு வந்திருந்த பிரதிநிதிகளிடையே எடுக்கப்பட்ட ஒரு ஆய்வில், மூன்றில் ஒரு பங்கிற்கும் அதிகமானோர், தங்களுக்கு தேவனிடத்தில் உறுதியான விசுவாசம் இருப்பதாகக் கூற முடியவில்லை என்பது தெரியவந்தது).

நட்சத்திரங்களானது, விசுவாசமுள்ள அல்லது விசுவாசமற்ற போதகர்களைக் குறிக்கலாம். "வானத்திலிருந்து விழுகிற" இந்த "நட்சத்திரங்களானது " ஆவிக்குரிய ஊழியத்திலிருந்து அரசியல் மற்றும் சமூக அளவிலான பூமிக்குரிய ஊழியத்திற்கு ஈர்ப்படையும் கள்ளப்போதகர்களைக் குறிக்கின்றன. உண்மையில் வானத்தின் சத்துவங்கள் அசைக்கப்படுகின்றன. அடிப்படைவாதிக்கும் நவீனத்துவவாதிக்கும் இடையேயான போரானது, வானம் என்கிற மதஉலகில் பெரும் பிளவை ஏற்படுத்தியுள்ளது. தேவன் மரித்துவிட்டார் என்ற இறையியல் கோட்பாடானது, இந்த அசைவிற்கு ஒரு எடுத்துக்காட்டு மட்டுமேயாகும். இரண்டாம் வாட்டிகனுக்குப் (Vatican - II) பிறகு, கத்தோலிக்கத்திலும் பெரும் பிளவு ஏற்பட்டது.

வசனம் 30, "அப்பொழுது, (அந்நாட்களின் உபத்திரவத்திற்குப் பின்பு) மனுஷகுமாரனுடைய அடையாளம் [கிரேக்கம், செமியோன்( Semeion)அதாவது ஆதாரம்] வானத்தில் காணப்படும்".

கிறிஸ்துவின் **பரோசியா** (**Parousia**), அதாவது பிரசன்னம் (Presence) என்பதற்கான முதல் ஆதாரங்களில் ஒன்றானது, வானம் என்கிற பெயர்சபைகளில் தோன்றும். அது சூரியனும், சந்திரனும் அந்தகாரப்படுவதும், நட்சத்திரங்கள் விழுவதையும் குறிக்கின்றது. சபைகளில் உள்ள தலைவர்கள் வேதத்தின் தெய்வீக உந்துதலின் மீது மொத்தமாக தாக்குதல் நடத்துவதையும், ஊழியர்கள் ஆவிக்குரிய நிலையிலிருந்து விழுந்து, அரசியல் அல்லது சமூக நற்செய்திக்கு மாறுவதையும் நாம் காணும்போது, கிறிஸ்து திரும்பி வந்துவிட்டார் என்று நாம் அறிவோம்.

யோயேல் 2:9-11 ஆகிய வசனங்களிலிருந்து கடவுள் நம்பிக்கையற்ற புரட்சிகரமான சக்திகள்தான் வானங்களை அசைக்கின்றன என்பதை நாம் கண்டோம். மெய்யாகவே, அவர்களின் தத்துவங்கள்தான், இறையியலாளர்களை வேதத்தை நிராகரிக்கவும் அரசியல் போர் என்ற நிலைக்குத் தாழ்ந்து போகவும் தூண்டியுள்ளன. சமூக மாற்றத்தை அடைவதற்கு வன்முறைத் தேவைப்படுமாயின், தேவாலயங்கள் அதனை ஆதரிக்க வேண்டும் என்று, திருச்சபை மற்றும் சமூகம் குறித்த மாநாடு (Detroit, 1968) அளித்த பரிந்துரையில் இது பிரதிபலித்தது. இத்தகைய புரட்சிகரமானத் தத்துவங்களும் பூமியை அசைத்துக் கொண்டிருக்கின்றன. 1917 -இல் போல்ஷிவிக் (Bolshevic) புரட்சிக்குப் பின்னர், புரட்சியானது தொடர்ந்து முன்னேற்றம் அடைந்து வருகின்றது. இரண்டாம் உலகப்போரில் புரட்சிகர மற்றும் எதிர்-புரட்சிகர படைகள் ஒன்றோடொன்று மோதிக்கொண்டன. அதனைத் தொடர்ந்து உலகின் மூன்றில் ஒரு பகுதியை கம்யூனிஸ்டுகள் (பொதுவுடைமைக் கொள்கையர்) கைப்பற்றினர். அடிமைப்படுத்தப்பட்ட நாடுகள் காலனித்துவத்தின் (Colonialism) நுகத்தை உதறித் தள்ளியதால், புரட்சியின் தீயானது, ஆப்பிரிக்கா மற்றும் ஆசியா முழுவதும் பரவியது. கருப்புப் புரட்சி, பாலினப்புரட்சி, இளைஞர் புரட்சி ஆகியவற்றை நாம் காண்கிறோம். வானங்கள் அசைக்கப்படுவதைக் குறித்துப் பேசும்போது, "பூமியின்மேலுள்ள ஜனங்களுக்குத் தத்தளிப்பும் இடுக்கணும் உண்டாகும்; சமுத்திரமும் அலைகளும் (அமைதியற்ற மற்றும் சட்டவிரோதமான கூறுகள்) முழக்கமாயிருக்கும். வானத்தின் சத்துவங்கள் (பெயரளவிலான சபை) அசைக்கப்படும்; ஆதலால் பூமியின்மேல் (சமுதாயம்) வரும் ஆபத்துகளுக்குப் பயந்து எதிர்பார்த்திருக்கிறதினால் மனுஷருடைய இருதயம் சோர்ந்துபோகும்" என்று லூக்கா 21:25,26 ஆகிய வசனங்களில் மேலுமாகக் குறிப்பிடப்படுவது ஆச்சரியமில்லை.

கொந்தளிக்கும் சமுத்திரமும் அலைகளும், மனுக்குலத்தின் அமைதியற்ற திரளான கூட்டத்தை அடையாளப்படுத்துகின்றன (ஏசாயா 57:20); அவை சமுதாயத்தின் சட்டதிட்டங்களால் கட்டுப்படுத்தப் பட்டாலும் முழுமையாக அடக்கப்படவில்லை. பூமியின்மேல் (சமுதாய ஒழுங்கு) அவ்வப்போது பேரலைகளைப் போல சீற்றத்துடன் பொங்கி எழுந்து, அதை விழுங்கத் துடிக்கிற இந்த "முழக்கத்தின்" ஒரு பகுதியை அனைவரும் கேட்டிருக்கிறார்கள். குறிப்பிட்டக் காலம் வரைக் கட்டுப்படுத்தப் பட்டிருந்தாலும், இந்த அலைகளானது எடையையும் வேகத்தையும் கூட்டுகின்றன; மேலும் தீர்க்கதரிசனத்தில் காண்பிக்கப்பட்டபடி அனைத்து மலைகளும் (ராஜ்யங்கள்) ஒழுங்கின்மையாகிய "**நடுச்சமுத்திரத்தில் சாய்ந்துபோவதற்கு**" (சங்கீதம் 46:2) இன்னும் சில வருடங்களே உள்ளன.

இது தொடர்பாக, "மனுஷகுமாரன் வல்லமையோடும் மிகுந்த மகிமையோடும் வானத்தின் (லூக்காவில் "பூமி" என்று குறிப்பிடப்பட்டுள்ளது) மேகங்கள்மேல் (உபத்திரவம்) வருகிறதைப் பூமியிலுள்ள சகல கோத்திரத்தாரும் கண்டு புலம்புவார்கள்" என்று மத்தேயு 24:30 - ஆம் வசனம் கூறுகிறது. இதற்குமுன் நிகழ்ந்திராத இந்த உபத்திரவம், அனைத்து மனுக்குலத்தையும் புலம்பச்செய்கிறது. உலகம் தங்கள் கண்களுக்கு முன்பாக நொறுங்குகிறதை அவர்கள் காண்கிறார்கள். மேகம்போன்ற உபத்திரவத்தை மனுக்குலம் காண்கிறது. இந்தக் கடுமையான மாற்றங்களை, புதிய உலக ஒழுங்குமுறைக்கு முன் நிகழ வேண்டிய பிரசவ வேதனைகள் என்றும்கூட பலர் உணர்கிறார்கள்.

உபத்திரவம் தீவிரமடையும்போது, அவர்கள் உபத்திரவத்தின் மேகங்கள்மேல் மனுஷகுமாரனை உணரத் துவங்குவார்கள்; மேலும் "மகா உபத்திரவமானது" பூமியில் கிறிஸ்துவின் இராஜ்யத்தைப் பிறப்பிக்கும் என்பதையும் உணர்வார்கள்.

மத்தேயு 24:29 - இல் வானத்தின் சத்துவங்கள் (பெயர் சபைகள்) அசைக்கப்படும்போது ஒரு அறுவடை வேலை நடந்துகொண்டிருப்பதை 31-ஆம் வசனம் காண்பிக்கின்றது. "வலுவாய்த் தொனிக்கும் எக்காள சத்தத்தோடே (சத்தியம்) அவர் (கிறிஸ்து) தமது தூதர்களை (தூதுவர்கள்) அனுப்புவார்; அவர்கள், அவரால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களை வானத்தின் (பெயர் சபைகள்) ஒரு முனை முதற்கொண்டு மறுமுனைமட்டும் நாலு திசைகளிலுமிருந்து கூட்டிச் சேர்ப்பார்கள்".

செப்பனியா 1:14,16 ஆகியவை, "கர்த்தருடைய நாளை" "எக்காளம் ஊதுகிற நாளாகவும்" வெளிப்படுத்துகின்றது. இது கணப்பொழுதில் தொனிக்கின்ற நேரடியான எக்காளத்தைக் குறிக்காமல், ஒரு குறிப்பிட்டக் காலத்திற்கு தொனிக்கின்ற, சத்தியத்தின் அடையாளப்பூர்வமான எக்காளத்தையே உறுதியாகக் குறிக்கின்றது.

கிறிஸ்துவின் பிரசன்னத்தின்போது (Presence) சத்தியத்தின் (எக்காளம்) பிரகடனத்தால் நிறைவேற்றப்படுகின்ற தெரிந்துக்கொள்ளப்பட்டவர்களின், அதாவது சபைவகுப்பாரின் (1பேதுரு 1:2) மாபெரும் கூட்டிச்சேர்க்கப்படுதலைக் குறித்து மத்தேயு 24:31-ஆம் வசனம் விவரிக்கின்றது. இது மத்தேயு 13:24-30 மற்றும் 36-43 வரையிலான வசனங்களில் விரிவாக விவரிக்கப்பட்டுள்ள சுவிசேஷ யுகத்தின் முடிவில் நடைபெறுகின்ற அறுவடை வேலையைக் குறிக்கின்றது. இங்கே, கோதுமையை (விசுவாசமுள்ள கிறிஸ்தவர்களை) அறுக்கிறவர்கள் தேவதூதர்கள்; அவர்கள் கோதுமையைச் சேர்ப்பார்கள் என்று இயேசு கூறுகிறார். அறுக்கிறவர்கள் ஆவிக்குரிய தேவதூதர்களைக் குறிக்காமல், மாறாக அறுவடை வேலையில் ஈடுபடுகிற கர்த்தருடைய ஜனங்களைக் குறிக்கிறது. (மத்தேயு 9:38).

களைகள் கோதுமையைப் போலவே காணப்படுவதால் தேவதூதர்கள் (திரும்பி வந்தக் கர்த்தருடைய தூதுவர்கள்) ஒரு பிரிக்கும் வேலையைச் செய்வார்கள் என்பது பாடமாகும், அது சபைக்கும் உலகத்திற்கும் இடையே அல்ல மாறாக, பெயர் சபையாகிய தற்போதிருக்கும் "வானங்களில்" நடைபெறுகிற வேலையாகும். இந்த வேலையானது பல்வேறு அடையாள விளக்கங்களின் கீழ் குறிப்பிடப்படுகின்றது; இது களைகளிலிருந்து கோதுமையை களஞ்சியத்தில் சேர்ப்பதாகும் (மத்தேயு 13:30); இது நல்ல மீன்களை கூடைகளில் சேர்ப்பதும், சுவிசேஷ வலையில் சிக்கிய தகுதியற்ற மீன்களை திரும்பக் கடலில் போடுவதுமாகும் (மத்தேயு 13:47-49); இது அவரது சம்பத்தை சேர்ப்பதாகும் (மல்கியா 3:17) ; இது "என் ஜனங்களே" பாபிலோனை விட்டு வெளியே வாருங்கள் என்று அழைப்பதாகும் (வெளி. 18:4); இது புத்தியுள்ளவர்களை புத்தியில்லாதவர்களிடமிருந்து பிரிக்கிறதற்காக, கன்னிகைகளுக்கு வந்த நடுராத்திரியின் குரலாகும் (மத்தேயு 25:26); மேலும், இந்தத் தீர்க்கதரிசனத்தில் இது கிறிஸ்தவ மண்டலத்தின் தெரிந்துகொள்ளப்படாத மற்ற அனைவரிடமிருந்தும், "தெரிந்துகொள்ளப்பட்டவர்களை" நாலு திசைகளின் ஒவ்வொரு பகுதியிலிருந்தும் கூட்டிச்சேர்ப்பதாகும்.

ஆவிக்குரிய தேவதூதர்கள், செட்டைகளுடன் தோன்றி, ஆகாயத்தில் பறந்து, பெரிய எக்காளத்தை ஊதி, அங்கொன்றும் இங்கொன்றுமாக சில பரிசுத்தவான்களைப் பிடித்துக்கொண்டு போவார்கள் என்று நாம் எதிர்பார்க்கக்கூடாது; நாம் நேரடியாகவே மீன்களாக மாறி நிஜமான கூடைகளில் போடப்படுவதையோ, அல்லது நேரடியாகவே கோதுமை மணிகளாக மாறி நிஜமான களஞ்சியத்தில் போடப்படுவதையோ எதிர்பார்ப்பதும்கூடத் தவறாகும். இந்த அறுவடைக் கூட்டிச் சேர்ப்பில் நம்முடைய கர்த்தரால் பயன்படுத்தப்படும் தேவதூதர்கள் அல்லது தூதுவர்களானவர்கள்,

இந்த யுகம் முழுவதும் அவர் தம்முடைய ஊழியத்தில் பயன்படுத்திய தூதுவர்கள் போன்றவர்களே. அதாவது, அவருடைய பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டு, கிறிஸ்து இயேசுவுக்குள்ளான "புது சிருஷ்டிகளாகிய" பூமிக்குரிய ஊழியக்காரர்கள் ஆவார்கள்.

"அவரால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களை (சபை வகுப்பார்), . . . நாலு திசைகளிலுமிருந்தும் கூட்டிச் சேர்ப்பார்கள்" என்பது, நான்கு காற்றுகளும் முழுமையாகக் கட்டவிழ்த்து விடப்பட்டு சுழல்காற்றாக மாறுவதற்கு முன்பே இந்தக் கூட்டிச் சேர்க்கப்படுதலானது நிறைவடையும் என்பதைக் குறிக்கின்றது. சுழல்காற்றோ அல்லது உபத்திரவக் காலத்தின் இறுதி அம்சமோ நடைபெறுவதற்கு முன்பே அறுவடை வேலையானது முடிவடையும். மேலும், அவர்கள் "வானத்தின் ஒருமுனை முதற்கொண்டு மறுமுனைமட்டும்" கூட்டிச்சேர்க்கப்படுவார்கள், அதாவது அனைத்துப் பெயர் சபைகளிலிருந்தும் கூட்டிச் சேர்க்கப்படுவார்கள்.

மத்தேயு 13 மற்றும் மத்தேயு 24:31 ஆகிய வசனங்களில் சொல்லப்பட்டுள்ள அறுவடை வேலையானது, வெளிப்படுத்தல் 18:1-4 ஆகிய வசனங்களிலுள்ள அதே வேலையாகும்; அங்கு, திரும்பி வந்தக் கிறிஸ்துவானவர், பாபிலோனிலிருந்து (வானங்கள் - பெயர்சபைகள்) தமது விசுவாசமுள்ள ஜனங்களைக் கூட்டிச்சேர்த்து, தற்போதைய சத்தியத்தின் செழிப்பான ஆவிக்குரிய விருந்தை அவர்களுக்கு அளிப்பதை நாம் ஏற்கெனவே கண்டிருக்கிறோம். ஆகவே நாம் சத்திய வசனத்தை நிதானமாய் பகுத்துப் போதிப்பதன் மூலம், மத்தேயு 24:29-31 ஆகிய வசனங்களின் அடையாளங்களை, இணையான வேதவசனங்களில் உள்ள அடையாளங்களுடன் ஒப்பிடுவதன் மூலம், வேதாகமமானது தனக்குத்தானே விளக்கவுரையாக இருக்கின்றது என்பதைக் காண்கிறோம்.

## வெளிப்படுத்தல் 1:7

ஒவ்வொருவரும் திரும்பி வந்தக் கிறிஸ்துவை நேரடியாகக் காண்பார்கள் என்பதை நிரூபிப்பதற்காக, வெளிப்படுத்தல் 1:7 - ஆம் வசனமும்கூட பெரும்பாலும் பயன்படுத்தப்படுகின்றது. "இதோ, மேகங்களுடனே வருகிறார்; கண்கள் யாவும் அவரைக் காணும் (optomai), அவரைக் குத்தினவர்களும் அவரைக் காண்பார்கள்; பூமியின் கோத்திரத்தாரெல்லாரும் அவரைப் பார்த்து புலம்புவார்கள்"

"காணும்" என்ற வார்த்தையானது நாம் ஏற்கெனவே கண்டுள்ளபடி கிரேக்கத்தில் ஆப்டோமை (optomai) என்பதாகும். இது மனதளவிலான உணர்ந்துகொள்ளுதலையோ அல்லது நேரடியான காட்சியையோ குறிக்கும். இந்த வசனத்தை நேரடியான அர்த்தத்தில் எடுத்துக்கொள்ள முடியாது, ஏனெனில் இயேசுவை உண்மையிலேயே நேரடியாகக் குத்தினவர்கள், நீண்ட காலத்திற்கு முன்பே மரித்துவிட்டார்கள். கிறிஸ்து திரும்பி வந்தபோது பூமியில் வாழும் யூத ஜனங்கள் அவரை நேரடியாகக் குத்தவில்லை. "அவரைக் குத்தினவர்கள்" என்பது அடையாளமாக இருந்தால் "மேகங்கள்" என்பதும் "கண்கள் யாவும்" அவரைக் காணும் என்பதும் அடையாளமாகவே இருக்க வேண்டும். கிறிஸ்து உபத்திரவம் என்னும் மேகங்களுடனே திரும்பி வருகிறார். உபத்திரவக் காலமானது உச்சக்கட்டத்தை அடையும்போது கண்கள் யாவும், அதாவது ஒட்டுமொத்த மனுக்குலமும், அந்த உபத்திரவமானது கிறிஸ்துவுடைய கண்ணுக்குத் தெரியாத பிரசன்னத்தின் (Presence) விளைவுதான் என்பதை உணரத் துவங்கும். கல்வாரியில் "அவரைக் குத்தினவர்கள்" கிறிஸ்துவின் திரும்பி வந்திருத்தலின்போது வாழ்ந்துகொண்டிருக்கிற யூத ஜனங்களுக்கு அடையாளமாக இருக்கிறார்கள். உபத்திரவக் காலத்தின் இறுதியான அம்சங்களில் ஒன்று, நவீன இஸ்ரயேல் நாட்டின் மீது படையெடுத்தல் ஆகும் என்பதை

சகரியா 12:10 - ஆம் வசனமானது காண்பிக்கின்றது. திரும்பி வந்தக் கிறிஸ்துவால், இந்தப் படையெடுப்பிலிருந்து அவர்கள் விடுவிக்கப்படுவது கிறிஸ்து பிரசன்னமாகியுள்ளார் என்பதை அவர்கள் உணரும்படிச் செய்யும்.

மேலும் உபத்திரவக் காலத்தின்போது, "பூமியின் கோத்திரத்தாரெல்லாரும் அவரைப் பார்த்துப் புலம்புவார்கள்." உபத்திரவக் காலமானது, கிறிஸ்துவினுடைய பிரசன்னத்தின் (Presence) நேரடியான விளைவாகும். அது தீவிரமாகப் பெருகும்போது அது கிறிஸ்துவின் பிரசன்னத்திற்கான நிரூபணம் என்பதை ஒட்டுமொத்த மனுக்குலமும் இறுதியாக உணரும் வரைப் புலம்பும்.

## மத்தேயு 26:64

நேரடியான காட்சி என்பதற்கு தவறாகப் பயன்படுத்தப்படும் மற்றொரு வேதவசனமானது மத்தேயு 26:64 ஆகும். பிரதான ஆசாரியனிடம் இயேசு பேசியபோது, "மனுஷகுமாரன் சர்வ வல்லவருடைய வலது பாரிசத்தில் வீற்றிருப்பதையும் வானத்தின் மேகங்கள்மேல் வருவதையும் இதுமுதல் காண்பீர்கள் (ஆப்டோமை)" என்று கூறினார். மீண்டுமாக, "காண்பீர்கள்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளதின் கிரேக்க வார்த்தையானது ஆப்டோமை (optomai) ஆகும், இது இங்கே மனதளவிலான உணர்ந்து கொள்ளுதலைக் குறிக்கின்றது. இந்த வேதவசனமானது நேரடியானதாக இருந்தால் கிறிஸ்து திரும்பி வந்தபோது அந்தப் பிரதான ஆசாரியன் பூமியில் வாழ்ந்துகொண்டிருப்பார். இது உண்மையில் சாத்தியமற்றது. யூத தேசம் முழுவதற்கும் பிரதிநிதியாக பிரதான ஆசாரியனான காய்பா என்பவர் இருந்தார். மேகங்கள் என்னும் உபத்திரவக் காலத்தின்போது யூத தேசத்திற்கு மிகவும் விசேஷித்த ஒரு விதத்தில் திரும்பி வந்தக் கர்த்தர் வெளிப்படுத்தப்படுவார் என்று முந்தின வேதவசனத்தில் கண்டுள்ளோம்.

## லூக்கா 13:35

லூக்கா 13:35-ஆம் வசனமானது, "கர்த்தருடைய நாமத்தினாலே வருகிறவர் ஸ்தோத்தரிக்கப் பட்டவர் என்று நீங்கள் சொல்லுங்காலம் வருமளவும் என்னைக் காணாதிருப்பீர்கள் [எய்டோ (eido)]" என்று கூறுகிறது. இங்கே "காண்பீர்கள்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளதின் கிரேக்க வார்த்தையானது எய்டோ (eido) ஆகும். இதுவும் மனதளவிலான உணர்ந்துகொள்ளுதலையோ அல்லது நேரடியான காட்சியையோ குறிக்கலாம். [Strong's Concordance -ல் எய்டோ (eido) என்பதை நேரடியான அல்லது உருவகமான பார்வை என்று வரையறுக்கிறது]. இந்த யூத தேசமானது இயேசு கூறின இந்த நியாயத்தீர்ப்பின் வார்த்தைகளினால் விசேஷித்த தயவிலிருந்து தள்ளப்பட்டது. ஆனால் சகரியா 12:10-14 வரையிலான வசனங்கள் காண்பிப்பது போல, அவர்கள் கிறிஸ்துவை மறுதலித்ததற்காக மனந்திரும்பி, கிறிஸ்துவின் இரண்டாம் பிரசன்னத்தைக் (Presence) கண்டு (உணர்ந்து) அனுபவிப்பார்கள், மேலும் கிறிஸ்துவின் இராஜ்யத்தில் ஒரு முன்னணி தேசமாக மாறுவார்கள்.

## அப்போஸ்தலர் 1:11

திரும்பி வந்தக் கர்த்தரானவர், நேரடியான கண்களால் காணப்படுவார் என்பதை நிரூபிக்க அப்போஸ்தலர் 1:11 -ஆம் வசனமும்கூட சில சமயங்களில் பயன்படுத்தப்படுகின்ற மற்றொரு வேதவசனமாகும். "கலிலேயராகிய மனுஷரே, நீங்கள் ஏன் வானத்தை அண்ணாந்துபார்த்து நிற்கிறீர்கள்? உங்களிடத்தினின்று வானத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட இந்த இயேசுவானவர் எப்படி

உங்கள் கண்களுக்கு முன்பாக வானத்துக்கு எழுந்தருளிப்போனாரோ, அப்படியே மறுபடியும் வருவார்”. கர்த்தர் வானத்திற்கு ஏறிப்போவதை நீங்கள் கண்டதுபோல, அதேவிதமாக அவர் திரும்பி வருவதையும் காண்பீர்கள் என்று அப்போஸ்தலர் 1:11-ஆம் வசனமானது கூறவில்லை; யாரெல்லாம் அவர் சென்றதைக் கண்டார்களோ அவர்கள் மட்டுமே அவர் வருவதைக் காண்பார்கள் என்றோ, மற்றவர்கள் யாராவது அவர் வருவதைப் காண்பார்கள் என்றோ அது கூறவில்லை; மாறாக அவருடைய வந்திருத்தலின் விதமானது, அவர் சென்ற விதத்தைப் போலவே இருக்கும் என்பதையே அது கூறுகிறது. அந்த விதமானது, மாபெரும் மகத்துவத்தோடும் சத்தங்களோடும், ஆகாயத்தைக் கிழிக்கும் மாபெரும் கூக்குரலோடும் கர்த்தருடைய ரூபமானது, இயற்கைக்கு அப்பாற்பட்ட மகிமையிலும் பிரகாசத்திலும் ஒளிவீசவும் இல்லை. மாறாக அது அமைதியானதாகவும், இரகசியமானதாகவும் இருந்தது; அவருடைய உண்மையுள்ள சீஷர்களைத் தவிர அவரைக் கண்டவர்கள் அல்லது அந்த உண்மையை அறிந்தவர்கள் யாருமில்லை. உலகம் அவர் சென்றதைக் காணவில்லை, அவர் செல்கிறார் என்பதை அறியவுமில்லை, அல்லது அவர்கள் கவலைப்படவும் இல்லை. இவ்வாறாக சபைவகுப்பார் மட்டுமே முதலில் அவருடைய பிரசன்னத்தை (Presence) உணர்வார்கள்.

இந்தப் பின்னிணைப்பில் (Appendix) உள்ள வேதவசனங்களைக் கவனமாக ஆராய்ந்தால், அவற்றை நேரடியாக எடுத்துக்கொள்ள முடியாது என்பது தெளிவாகின்றது. ஒட்டுமொத்த மனுக்குலமும் இறுதியில் கிறிஸ்துவின் கண்ணுக்குத் தெரியாத பிரசன்னத்தைக் (Presence) காண்பார்கள், அதாவது மனதளவில் உணர்ந்துகொள்வார்கள் என்ற கருத்தை அவை ஆதரிக்கின்றன.

-----------------------

BIBLE STUDENTS
VELLORE